தமிழரசு

16-4-1997 ரூ. 3






# குறைந்த முதலீட்டில் கட்டடங்கள்








## இந்த இதழில்...

★ இளமையில் அம்பேத்கர் ... 2

★ மேற்படிப்பும் வேலை வாய்ப்பும் ... 5
**- டாக்டர் கா.மு. பாதுசா**

★ குறைந்த முதலீட்டில் கட்டடங்கள். .. 9

★ தமிழ் - முதல் நாவல் - - 14
**- க. நா. சுப்பிரமணியம்**

★ சிறுதொழில் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முன்வடிவம் - 17
**- திருமதி. ஓ.பி. சோசம்மா** இ.ஆ.ப.

★ கலிபோர்னிய மலைகளில் உன் பிறந்த நாள்! - 19

★ வளர்ப்பு - **ம. ராஜேந்திரன்** - 20

★ காலமெல்லாம் காளான் வாழ்க - 25

★ உயிர் திரவம் இரத்தம் - 29
**- டாக்டர் சு. கணேசன்**
**- டாக்டர் கி. சுவாமிநாதன்**

★ கீரையோ கீரை - 33
**- சிவசூரியன்,** இ.ஆ.ப.

★ எங்கள் ஊர் பிரச்சினை - 35

**தமிழரசு**

திருவள்ளுவராண்டு - 2028
சித்திரைத் திங்கள் - 3

மலர் : 27 | 16.4.97 | இதழ் : 20

**அரசின் அறிவிப்புகள் - ஆக்கப்பணிகளை வழங்கும் 'தமிழரசு' வெளியீடான 'அரசு செய்தி' வார சுவர் செய்தித்தாளின் முதல் பிரதியினை, 15.4.1997 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வெளியிட்டார். அதன் முதல் பிரதியை அரசு தலைமைச் செயலாளர் திரு.கே.ஏ.நம்பியார், இ.ஆ.ப. அவர்கள் பெற்றுக்கொண்டார்.**



# இளமையில் அம்பேத்கர்

முருகப்பெருமான், வள்ளி தெய்வானையோடு உற்சவக் கோலம் பூண்டிருந்தார்.

பல்லக்கில் ஏற, பயபக்தியோடு வந்தார் குருக்கள்.

பல்லக்கின் அருகே விளக் கேந்தி நின்றிருந்தான் தாழ்த்தப் பட்ட வகுப்பினன் ஒருவன். அந்த இளைஞனின் துணி, காற்றில் அசைந்து குருக்களின் மேல் பட்டுவிட்டது.

அவ்வளவுதான்; எரிமலை யானார் குருக்கள். "அடேய் அபிஷ்டு, என்னைத் தொட்டுத் தொலைச்சுட்டியேடா. இன் னொரு தடவை யில்லே நான் போய் ஸ்நானம் பண்ணி யாகனும்!" என்று கூறித் தலை யில் அடித்துக்கொண்டார். எரிச்சலோடு முகஞ்சுளித்து, எரித்துவிடுவது போல அவனைப் பார்த்தார்.

பல்லக்கின் மேல், முருகக் கடவுளோடு நின்றிருந்த குறமகள் வள்ளி, அதை ஓரக்கண்ணால் பார்த்துக் கலகல வென்று சிரித்தாள்! முருகனும் முறு வலித்தான்!

- புகழ்மிக்க எழுத்தாளர் ஒரு வரின் கைவண்ணம் இது.

இப்படிக் கடவுளரே கை கொட்டிச் சிரிக்குமளவுக்கு, மனிதன் சாதிமத பேதங்களுக்கு ஆட்பட்டுவிட்டான். இந்த நிலை, மனித சமுதாயத்தையே பீடித் துள்ள பெரும் நோயல்லவா?

உயிருக்கோ உடம்புக்கோ எந்தச் சாதியும் கிடையவே கிடை யாது. இந்தக் கருத்தை வலி யுறுத்திப் பெருமை கொண்டவர் தான் டாக்டர் அம்பேத்கர்.

ராம்ஜி சக்பால் - பீமாபாய் தம்பதிகளுக்குப் பொருட்செல்வத் தில் பஞ்சம் இருந்ததோ இல்லை யோ, மக்கட்செல்வத்தில் பஞ்ச மில்லை! ஏற்கெனவே பதின் மூன்று பிள்ளைகளின் பெற்றோ ராக இருந்த அவர்கள், 1891-ஆம் ஆண்டு ஏப்ரல் பதினான்காம் தேதி, பதினான்கவதாக ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத் தார்கள். பஞ்சபாண்டவர்களில் இரண்டாவது சகோதரனான பீமன் பெயர் வைக்கப்பட்டது அக் குழந்தைக்கு.



அந்தக் குழந்தைதான் 'இந்திய அரசியல் சட்டத்தின் தந்தை' என்று பிற்காலத்தில் அவனி போற்ற வளர்ந்த டாக்டர் அம் பேத்கர்.

மக்கட் செல்வம் நிறைந்த அக்குடும்பத்தில், ஏனோ அந்தச் செல்வம் அனைத்தும் அப்படியே நிலைத்திருக்கவில்லை. பலராமன், அனந்தராவ் ஆகிய ஆண்பிள்ளை களும்-மஞ்சுளா, துளசி ஆகிய பெண்களும், கடைசியாகப் பிறந்த நம் அம்பேத்கரும் மட்டுமே எஞ்சினார்கள். இந்த ஐவர் போக மற்றவர்களெல்லாம் பல்வேறு கால கட்டங்களில் இளமை யிலேயே மாண்டு போனார்கள்.

அம்பேத்கர், இரண்டு வயது சிறுவனாக இருந்தபோது, அவ ருடைய தந்தை, ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

அரிச்சுவடி முதலான பாடங்களைத் தம் இளைய மகனுக்குக் கற்பிப்பதே அவரது ஓய்வு காலப் பணியாயிற்று.

வேலையிலிருந்து ஓய்வு பெற்றதுமே தபோலி என்ற ஊருக்குக் குடும்பத்தோடு குடி பெயர்ந்தார் ராம்ஜி சக்பால். ஓய்வூதியத்தைக் கொண்டே அந்தப் பெரிய குடும்பத்தை நடத்துவது எளிதாக இல்லை. தன் வயதுக்கேற்றபடி ஏதேனும் ஒரு வேலை கிடைத்தால் செய்யலாம் என்று முடிவு செய்தார். தேடினார்; கிடைத்தது.

சதாரா என்ற இடத்தில் இருந்த இராணுவக் குடியிருப்பில் தான் அவருக்கு ஒரு வேலை கிடைத்திருந்தது.

சிறுவனான அம்பேத்கருக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் மகாபாரதம், இராமாயணம் தொடர்பான கதைகளைச் சொல்லுவார் தந்தை; கபீர்தாசரின் பாடல்களைக் கனிவோடு கற்பிப்பார்.

தபோலியில் அவர்கள் குடும்பம் இருந்தது. ராம்ஜி சக்பாலோ சதாராவில் வேலை பார்த்து வந்தார். நாளடைவில், அவர் அங்கேயே தங்கும்படி ஆகிவிட்டது.

அம்பேத்கரும், அனந்தராவும் எப்போதாவது தந்தையைப் பார்க்க சதாரா வந்துபோவது வழக்கம். முன்கூட்டியே தாம் வருவது பற்றித் தந்தைக்குத் தகவல் தெரிவித்துவிடுவார்கள். புகை வண்டி நிலையத்திற்கு வந்து காத்திருந்து பிள்ளைகளை அழைத்துப்போவார், அவர்.

அப்படியொரு நாள் கடிதம் எழுதிவிட்டு, அவர்கள் தபோலியை விட்டுக் கிளம்பினார்கள். அவர்களுடைய கடிதம் சக்பாலுக்குக் குறித்த நாளுக்கு முன்கூட்டியே கிடைத்திராததால், சதாரா புகை வண்டி நிலையத்தில் அவர் வந்து காத்திருக்கவில்லை.



**சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக அமைப்பே, எனது இலட்சியம்.**

ரயிலை விட்டு இறங்கிய அம்பேத்கரும் அவருடைய சகோதரரும், அங்கே தமது தந்தையைக் காணாததால், செய்வதறியாது கலங்கிப்போய் நின்றார்கள்.

விஷயமறிந்த ரயில்வே ஊழியர் ஒருவர், வாடகைக்கு ஒரு வண்டியை அமர்த்தி, அவர்களைக் கிராமத்திற்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்தார்.

போகிற வழியில்தான், வண்டியோட்டிக்கு அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று தெரிய வந்தது. உடனே பதறிப்போய், வசைபாடியபடி வண்டியைவிட்டுக் கீழே குதித்தான் வண்டியோட்டி, திடீரென்று அந்த வண்டியைக் குடைசாய்த்து அவர்களைக் கீழே உருட்டிவிட்டான்.

அவனுடைய சாதிவெறி, அந்தச் சிறுவர்களைக் கதிகலங்கச் செய்துவிட்டது; இருந்தாலும் பாதி வழிக்குமேல் பயணம் போவதுதான் எப்படி? அவனுடைய கோபம் தீரும்வரை பொறுத்துக் கொணடிருந்தார், அனந்தராவ். பிறகு மெலிதான குரலில், வண்டிக்கூலி பேசியதைப்போல் இரண்டு பங்கு தருவதாகச் சொல்லி, தம்மை அழைத்துப் போகும்படி கெஞ்சினார். பணம் அதிகமாகக் கிடைக்கிறது என்றதும், மனம் மாறிவிட்டான் வண்டியோட்டி.

ஆனால், அவர்கள் இருவரையுமே வண்டி ஓட்டிப்போகும்படி சொல்லிவிட்டான். வண்டிக்குப் பின்னால் அவன் கடைசிவரை நடந்தே சென்றான்!

செல்லும் வழியில் தாகம் எடுத்தபோதெல்லாம் அவன் அங்காங்கே தண்ணீர் வாங்கிக் குடித்தான். நீண்டதூரப் பயணம் ஆகையால், அனந்தராவும், அம்பேத்கரும் தாகத்தால் தவித்தார்கள். அவர்கள் தாழ்த்தப்பட்ட சாதியினர் என்று கூறி, எவருமே தண்ணீர் கொடுக்க மறுத்துவிட்டார்கள். கடுமையான நாவறட்சியுடனேயே கடைசிவரை தாகத்தோடு ஊர்போய்ச் சேர்ந்தார்கள் அவர்கள்.

விஷயமறிந்த ராம்ஜி சக்பால், வேதனையால் துடித்துப்போனார். இருந்தாலும், வண்டியோட்டியையோ, தாகத்திற்குத் தண்ணீர் தராதவர்களையோ கண்டிக்க அவருக்குத் தைரியம் இல்லை.

ஆனாலும் அவர் ஒரு காரியம் செய்தார். கூடிய சீக்கிரத்தில் தன்னுடைய குடும்பத்தையே சதாராவுக்குக் கொண்டுவந்து விட்டார். ஓய்வூதியத்தோடு, புதியதாகக் கிடைத்த வேலை மூலம் வந்த வருமானமுமாகச் சேர்ந்து, மகிழ்ச்சிகரமாகக் குடும்பம் நடத்தப் போதுமானதாக இருந்தது.

பெண்பிள்ளைகளான மஞ்சுளாவுக்கும் துளசிக்கும் திருமணம் முடிந்தது.

1896-ல், அம்பேத்கருக்கு ஆறு வயதாகும்போது, அவருடைய அன்புத்தாயார் பீமாபாய் இறந்து போனார்.

1900-ல் சதாராவில் இருந்த தொடக்கப்பள்ளியில் சேர்க்கப் பட்டார் அம்பேத்கர். திருமணமாகி விட்ட போதிலும் சகோதரிகள் இருவரும் கண்ணும் கருத்துமாகத் தமது தம்பியைப் பார்த்துக் கொண்டார்கள்; அத்தை மீரா பாய் அரவணைப்பு வேறு!

இதெல்லாம் சேர்ந்து, சிறுவன் அம்பேத்கரைச் சிறப்பாகக் கல்விபயிலச் செய்தன. தொய் வின்றித் தொடக்கப்பள்ளிக் கல்வி முடிந்தது.

சதாராவில் இருந்த உயர் நிலைப்பள்ளியில் சேர்க்கப் பட்டார் அம்பேத்கர். சதாரா பள்ளிக்கூடம்தான், அவருக்கு அறிவுச்சுடர் கொளுத்தும் ஆரம்பக் கூடமாக இருந்தது. 'சாதி மதங்களைப் பாரோம்' என்ற கொள்கையின் முதல்வித்து அங்கே தான் அவர் பண்பட்ட மனதில் அழுத்தமாக ஊன்றப்பட்டது. 'அனைவரும் சமம்' என்ற உணர் வுக்கு அஸ்திவாரம் போடப்பட்ட இடமே அதுதான்.

அரும்புப் பருவத்தில், தொடக்கக் கல்வி பயின்ற காலத்திலேயே வகுப்பறையில் அவர் ஆசிரியராலும், மாணவர் களாலும் உதாசீனப்படுத்தப் பட்ட துண்டு.

தீண்டத்தகாத வகுப்பைச் சேர்ந்தவர் என்று கூறி, வகுப்பறையில் அவரைத் தனியே ஒதுக்கி உட்கார வைத்திருந் தார்கள். அதுவும் வெறுந் தரையில்! வகுப்பறையில் இருந்த தண்ணீர்ப் பானையில் அவர் தண்ணீர் குடிக்கக்கூடாது; யாரா வது தூர நின்று ஊற்றுவார்கள் - அவர் கையேந்திக் குடிப்பார். மற்ற பிள்ளைகளோடு சேர்ந்தாற் போல் உட்கார்ந்து சாப்பிடக் கூடாது. சக மாணவர்களோடு சேர்ந்து விளையாடக்கூடாது என்றெல்லாம் கட்டுப்பாடு இருந்தது.

அதே நிலைமைதான் சதாரா உயர்நிலைப் பள்ளியிலும் தொடர்ந்தது. மனிதருக்கு மனிதர் இப்படியொரு பேதம் கொண் டிருப்பது தேவைதானா என்ற கேள்வி அம்பேத்கரின் பிஞ்சு நெஞ்சைப் பிசைந்தது. ஆசிரியர்கள் அவர் நோட்டுக்கை வாங்கித் திருத்தக் கூட வெறுத்தார்கள் என்றால், அவர் மனநிலை எப்படி யிருந்திருக்கும்!

கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்; உப்புக் கடலில் உயர் முத்தம் விளையும் என்பதுபோல சாதிவெறி பிடித்தலைந்த உயர் வகுப்பாரிடையிலும் அத்தகைய மூர்க்க குணம் நீங்கிய சிலர் இருப்பதுண்டு. அப்படிப்பட்ட பிராமண ஆசிரியர் ஒருவர் அந்த உயர்நிலைப்பள்ளியில் இருந்தார். அவருடைய பெயர் அம்பேத்கர்.

நம்முடைய அம்பேத்கர், எவர் எப்படி நடத்திய போதிலும் அதைப்பற்றியெல்லாம் கவலைப் படாமல் படிப்பே குறியாக இருந் தார். அந்த வகுப்பிலேயே முதல் மாணவனாகவும் விளங்கினார்.

சதாரா பள்ளியில் அவர் சமஸ்கிருதம்' படிக்க முடியாது என்று தடை விதிக்கப்பட்டது. அது தெய்வமொழி என்பதால் அப்படி யாம்; இதனால் பாரசீக மொழி படிக்கலானார் அம்பேத்கர், ஆனால், வெளியே தனியாசிரியர் மூலம் சமஸ்கிருதம் படிக்கவும் அவர் தவறவில்லை.

இதனால் எல்லாம், ஆசிரியர் அம்பேத்கர், அவர்மேல் மிகுந்த அன்பு காட்டலானார். பாறையில் ஈரம் கண்ட செடி போல அந்த அன்பு கண்டு இன்னும் ஊக்கத் தோடு படித்து வரலானார் நம் அம்பேத்கர்.

ஒருநாள் காலை நேரம், அடை மழை பெய்து கொண்டிருந்தது. எப்படியும் பள்ளிக்கூடம் போயே ஆக வேண்டும் என்ற உறுதியோடு புறப்பட்டார் அம்பேத்கர்,

தெப்பலாக நனைந்தபடி பள்ளிக்கூடம் வந்து சேர்ந்த அவரைப் பார்த்ததும் மனம் நொந்து போனார் ஆசிரியர் அம்பேத்கர். பரிவோடு, சிறுவன் அம்பேத்கரை அழைத்துத் தனது துண்டால் துவட்டிவிட்டார். மாற்றுத் துணி கொடுத்து உடுத்திக் கொள்ளச் செய்தார். இது மட்டு மல்ல; தனக்காக எடுத்துவந்திருந்த சாப்பாட்டை அவருக்குமாகப் பங் கிட்டுக் கொண்டு சாப்பிட்டார்.

அந்த ஒரு நாள் மட்டுமல்ல, பெரும்பாலான நாட்களில் சிறுவன் அம்பேத்கருக்கு அந்த ஆசிரியரே உணவைப் பரிந்தூட் டுவது தொடர்ந்தது.

ஆசிரியர் அம்பேத்கர் அத் துடன் நின்றுவிடவில்லை, பீமா ராவ் என்று இருந்த அவர் பெயரோடு தன் பெயரையும் இணைத்து 'பீமாராவ் அம்பேத்கர்' என்றே மாற்றிவிட்டார். பள்ளிக் கூட வருகைப்பதிவேடு முதலிய ஆவணங்களிலெல்லாம்கூட அப்படியே பெயர் எழுதிப் பதிவு செய்தார்.

அன்றைய தினம் பெயர் மாற்றம் செய்யப்பட்ட அம்பேத் கர் என்ற அந்தப் பெயருடை யவரே, பிற்காலத்தில், இந்தியா வின் சட்டச் சிற்பியாகி வர லாற்றில் இடம் பெறப்போகிறார் என்பது அப்போதெல்லாம் அந்த ஆசிரியருக்கே தெரிந்திருக்காது!

- பி.எல்.ஆர்

☐ ☐ ☐

# மேற்படிப்பும் வேலைவாய்ப்பும்

- பேராசிரியர் **டாக்டர் கா. மு. பாதுசா**

வளமான வாழ்வுக்கு அடித் தளமாக - பெற்ற கல்வியும், வேலையுமே அமைகின்றன. காலத்தில், இளைஞர்களை அவர்தம் ஆற்றல், ஆளுமை, நாட்டம், ஈடுபாடு இவற்றிற்கு ஏற்ப· வழி காட்டப்பட்டால் நாட்டின் வளர்ச்சி - குறிப்பாக மனித வள மேம்பாடு மிகும் என்பதில் ஐயமில்லை. இளைய சமுதாயத்திடையே குவிந்திருக்கும் ஆற்றலை இனங்கண்டு ஆற்றுப்படுத்துகின்ற போதுதான், அவர்கள் படிப்புத் துறைகளை முறையாகத் தேர்ந்தெடுப்பார்கள். ஆற்றல்களை ஒழுங்குறப் பெறுவார்கள், 'எண்ணித் துணிக கருமம்' என்பது முதுமொழி. எனவே மாணவர்கள் நெறிப்படுத்தப் பட்டால் அவர்கள் வாழ்வில் சலிப்பு இருக்காது; அதிருப்தி இருக்காது; நம்பிக்கை இழக்க மாட்டார்கள்; மாறாக, மகிழ்ச்சி யுறுவார்கள். ஆனால், நமது நாட்டில் 'மாணவர்களை ஆற்றுப் படுத்துதல்' என்ற முறை இன்னும் சிறப்பாக அமையவில்லை.

பெற்றோர்கள், அண்டை வீட்டார், நண்பர்கள் _ இவர்களுடைய தாக்கங்களே படிப்புத் துறைகளைத் தேர்ந்தெடுப்பதிலும், வேலை வாய்ப்பினைத் தேர்ந்தெடுப்பதிலும் மேலோங்கி நிற்கின்றன. எனவேதான் இளைய சமுதாயம் எண்ணிய வளர்ச்சியினை, குறிக்கோளினை எட்ட இயலுவதில்லை. கல்விக் கூடங்களில், குறிப்பாக ஆரம்பப் பள்ளிகளில் அல்லது இடைநிலைப் பள்ளிகளில் *(Primary and Middle Schools)* மாணவர்களுடைய திறமைகளை இனங்காணத்தக்க முறையான ஏற்பாடுகள் இல்லை என்று துணிந்து கூறலாம். மனிதவள மேம்பாட்டுச் சிந்தனையாளர்கள் இத்துறையில் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.



## +2க்கு அப்பால்...

உயர்கல்வி பெற ஆசைப் படுவோரில் நூற்றுக்கு ஆறு பேருக்குத்தான் இடம் கிடைக்கிறது. ஏனையோர் உயர்கல்வியினைத் தொடர முடியாது நின்று விடுகின்றனர். இவர்களுள் பலர் பல்வகை ஆற்றல்களில் திறமை பெற்றிருக்கக்கூடும். முறையான வழிகாட்டுதல் இல்லாமையால் விரக்தி அடைகின்றனர். மனச் சோர்வினால் வன்முறைகளில் கூட ஈடுபடுகின்றனர். இருக்கின்ற படிப்பு சார்ந்த செய்திகளைக் கூட இவர்களில் பலர் அறியாதிருப்பது வேதனைக்குரியது. செய்திகளை அறிந்த பலர் குறிப்பாகக் கிராமங்களில் உள்ளோர் இத்தகைய வசதிகளை அறிந்திருந்தும் பயன் படுத்திக்கொள்ள வழி தெரியாது இருக்கின்றனர். வளர்ந்து வரும் மக்கள் தொடர்பு சாதனங்கள் வெளியிடுகின்ற அறிவிப்புகள் இன்னும் விளிம்பு நிலையில் தான் உள்ளது. இதனைப் போக்கும் பொருட்டு 10-ஆம் வகுப்பு படித்தோருக்கும் மேநிலை இரண்டாம் ஆண்டு (+2) படித்தோருக்கும் உரிய படிப்புத் துறைகளைப் பகிர்ந்து கொள்வது தான் இக்கட்டுரையின் நோக்கு.

பெரும்பாலான பெற்றோர்கள் மருத்துவம், பொறியியல் துறைகளுக்கே சிறப்பளிக்கும் போக்கைக் கொண்டுள்ளனர். தகுதியும், திறமையும் வாய்ந்தோரில் பலருக்கு ஒரு குறிப்பிட்ட அளவில்தான் இடம் கிடைக்கிறது. இடம் கிடைக்காது இருப்போருக்கு முறையாக வழி காட்டி அவர்கள் கல்வியினைத் தொடரச் செய்தால் நாடு வளம் பெறும். ஆர்வமும், ஈடுபாடும் எந்தெந்தத் துறையில் மாணவர்களிடம் புதைந்திருக்கிறது என்பதை அறிந்து, அதன் வழி அவர்களை நெறிப்படுத்த வேண்டும். ஓவியம் வரைதலில் நாட்டம் உடைய மாணவர்களுக்கு ஓவியக் கல்லூரியில் இடம்பெற வாய்ப்பு இருக்கின்றது.

மருத்துவ அறிவினைப் பெறத் துடிக்கும் மாணவர்களை *D.Pharm, Lab Technician* படிப்புத் துறைகளுக்கு ஆற்றுப்படுத்த வேண்டும்.

பொறியியல் துறையில் நாட்டமுடைய மாணவர்கள் பொறியியல் பட்டயப் படிப்புகள், அச்சுக்கலை பட்டயப்படிப்பு போன்றவற்றில் சேருவதற்கு ஆற்றுப் படுத்த வேண்டும்.

படைப்பாற்றல் பெற்ற மாண வர்கள் திரைப் படத்துறை, இதழியல் துறைகளில் இடம்பெற முயற்சிக்க வேண்டும். வண்ணம் பூசுவதில் வல்லமை பெற்றவர்கள் அத் துறையில் பட்டயப் படிப்பில் சேர வேண்டும். வாய்வீச்சில் வல்லமை பெற்றோர் விற்பனை யாளராகப் பயிற்சி பெற வேண்டும். உடற்கட்டும், அழகிய தோற்றமும் பெற்ற இளைஞர்கள் "மாதிரிகளாக" *(Models)* மாற வேண்டும். விளம்பரத் துறையில் விரைவாக முன்னேற இப்பொழுது வாய்ப்புகள் மலிந்து இருக்கின்றன. சமுதாயத்தில் முன்னேறத் துடிக்கும் இளைஞர் களுக்கு எல்லாவித வாய்ப்புக்களும், வசதிகளும் இருக்கத்தான் செய் கின்றன. அவர்களை ஆற்றுப் படுத்துவதுதான் முக்கியம்.

## மருத்துவத்துறையில்...
*(MEDICAL)*

*MBBS, BDS, B.Pharmacy, B.Sc.Nursing, Bachelor of Physiotherapy, B.V.Sc.,* போன்ற படிப்புத் துறைகளுக்குத் தமிழக அரசின் நுழைவுத் தேர்வின் மூலம், +2 மதிப்பெண்களின் அடிப் படை யிலும் தேர்வுக்குழு தேர்ந் தெடுக்கும்.

மருந்தகவியல் பட்டயப் படிப்பின் *(D.Pharm)* +2 தேர்வில் கணிதம், வேதியியல், விலங்கியல், தாவர வியல், இயற்பியல், உயிரியல் பாடங்கள் படித்தோர் படிக்க முடியும். இப் பட்டயப் படிப்பின் படிப்புக்காலம் ஓராண்டாகும். தமிழகத்திலுள்ள அரசு மருத்துவக் கல்லூரி களிலும், சுயநிதி கல்லூரி களிலும் இப் பட்டயப் படிப்பு பயிற்றுவிக்கப்படுகிறது. ஏறக் குறைய 25 கல்லூரிகள் தமிழகத்தில் இப் பட்டயப் படிப்பினைப் பயிற்று விக்கின்றன.

**ஆய்வுக்கூட தொழில் நுட்பர்:**
LAB TECHNICIAN :

மருந்தகவியல் கல்வித் தகுதிகள் இதற்கும் பொருந்தும். படிப்புக் காலம் ஓராண்டு.

**துப்புரவு ஆய்வாளர் படிப்பு:**
SANITARY INSPECTOR COURSE :

மேற்கூறிய கல்வித்தகுதிகளே இதற்கும் பொருந்தும். படிப்புக் காலம் ஓராண்டு.

**பொது செவிலியர் பயிற்சி:**
(GENERAL NURSING TRAINING)

மேற்கூறிய கல்வித்தகுதி இதற்கும் பொருந்தும். பயிற்சிக் காலம் மூன்றரை ஆண்டாகும்.



அரசு மருத்துவக் கல்லூரிகள் நீங்கலாக சென்னையில் உள்ள அரசு பொது மருத்துவமனை, திருவல்லிக் கேணியிலுள்ள கஸ்தூரிபாய் காந்தி அரசு மருத்துவமனை, திருச்சி, சேலம் அரசுப் பொது மருத்துவ மனை களிலும், இப்பயிற்சி வழங்கப் படுகிறது.

**மாறுகண் சிகிச்சை மருத்துவப்படிப்பு:**
(ORTHOPIST COURSE)
(மகளிருக்கு மட்டும்)

மேற்கூறிய கல்வித்தகுதி இதற்கும் பொருந்தும். பயிற்சிக் காலம் இரண்டு ஆண்டுகளாகும். மதுரை மருத்துவக் கல்லூரி இப்பயிற்சியினை அளிக்கின்றது.

**பல் மருத்துவப் படிப்பு :**
DENTAL MECHANIC COURSE :

மேற்கூறிய கல்வித்தகுதி இதற்கும் பொருந்தும். பயிற்சிக் காலம் ஈராண்டுகள். சென்னை மருத்துவக் கல்லூரி இப் பயிற்சியினை அளிக்கின்றது.

**பல் தூய்மைப் படிப்பு :**
DENTAL HYGIENIST COURSE :

மேற்கூறிய கல்வித்தகுதி இதற்கும் பொருந்தும். பயிற்சிக் காலம் ஈராண்டுகள். சென்னை பல் மருத்துவக் கல்லூரி இப் படிப்பினை வழங்குகின்றது.

**விழி ஒளி பரிசோதகர் படிப்பு :**
COURSE IN OPTOMETRY:

தகுதி இயற்பியல் உள்ளிட்ட +2 அறிவியல் பாடங்களில் தேர்ச்சி பெற்றோர் இப்படிப்பில் சேரலாம். வேலூரில் உள்ள கிறித்தவ மருத்துவக் கல்லூரி இப்படிப்பினை ஈராண்டுகள் நடத்துகின்றது. சென்னை அரசு கண் மருத்துவமனை இப்பயிற்சியினை ஓராண்டில் வழங்குகிறது.

**கண் மருத்துவ உதவியாளர் படிப்பு :**
OPTHALMIC ASSISTANT COURSE :

கல்வித்தகுதி அறிவியல் பாடங்களில் தேர்ச்சி (+2வில்).

பயிற்சிக்காலம் இரண்டு ஆண்டு கள்.

மதுரை, தஞ்சாவூர் அரசு மருத் துவக் கல்லூரிகள் இப் பயிற்சி யினை அளிக்கின்றன.

**நுண் திசுக்கள் நோய்க்குறியியல் படிப்பு -ஆய்வுக்கூட தொழில் நுட்பம் :**
COURSE IN HISTOPATHO - LOGICAL LAB.TECHNOLOGY:

தகுதி: +2வில் உயிரியல் அடங்கிய அறிவியல் பாடங்கள்.

பயிற்சிக்காலம் ஒரு ஆண்டு.

வேலூரின் கிறித்தவ மருத்துவக் கல்லூரி இப்படிப்பினை வழங் குகிறது.

**தொழில் சார்ந்த நோய் சிகிச்சை - இளையர்:**
BACHELOR OF OCCUPATIONAL THEROPY (BOT)

தகுதி இயற்பியல், வேதியியல்,

உயிரியல்/விலங்கியல், தாவரவியல் பாடங்களில் 50% தேர்ச்சி.

பயிற்சிக் காலம்: மூன்றாண்டுகள்.

வேலூரில் உள்ள கிறித்தவ மருத்துவக்கல்லூரி, இதனை அளிக்கிறது.

**கதிர் வீச்சியலில் உதவியாளர் சான்றிதழ் படிப்பு :**

CERTIFICATE COURSE IN RADIOLOGICAL ASSITANT:

தகுதி அறிவியல் பாடங்களில் +2 படிப்பு.

சென்னை மற்றும் மதுரை மருத்துவக் கல்லூரிகள் ஓராண்டு காலம் இப்படிப்பினை அளிக்கின்றன.

**கதிர் வீச்சியல் (நோய் அறிதல்) படிப்பு மற்றும் கதிர் வீச்சியல் (நோய் சிகிச்சை) படிப்பு**

COURSE IN RADIOGRAPHY (DIAGNOSIS) AND COURSE IN RADIOGRAPHY (THERAPY) :

+2வில் இயற்பியல் பாடங்களுடன் கூடிய அறிவியல் பாடங்கள்.

பயிற்சிக் காலம்: ஈராண்டுகள்

**வழங்குவோர்:** வேலூரில் உள்ள கிறித்தவ மருத்துவக் கல்லூரி அளிக்கிறது.

**அணுத்திறன் மருந்துத் தயாரிப்பு தொழில்நுட்பவியல் படிப்பு :**

Course in nuclear Medicine Tech :

மேற்கூறிய கல்வித் தகுதி இதற்கும் பொருந்தும். ஈராண்டு கால இப்பயிற்சியினை வேலூரிலுள்ள கிறித்துவ மருத்துவமனை அளிக் கிறது.

**மருத்துவப் பதிவேடு தொழில்நுட்பப் பணியாளர் பயிற்சி மையம் :**

MEDICAL RECORD TECHNICIAN TRAINING CENTRE:

6 மாத கால இப்பயிற்சியினை அளிப்பது.

**சிறார்களுக்கான சிறார்நல நிறுவனம் - குழந்தைகளுக்கான மருத்துவமனை, எழும்பூர், சென்னை.**

INSTITUTE OF CHILD HEALTH & HOSPITAL FOR CHILDREN, EGMORE, CHENNAI.

**கை-தொழுநோய் தொழில்நுட்ப பயிற்சிப் படிப்பு :**

COURSE IN HAND AND LEPROSY TECH.TRAINING :

+2வில் அறிவியல் பாடங்களைப் படித்தோருக்கான இந்த ஓராண்டு கால படிப்பினை



வேலூரில் உள்ள கிறித்தவ மருத்துவக் கல்லூரி வழங்குகிறது.

**தொழில் சார் நோய் சிகிச்சை பெருஞ்சான்றிதழ் படிப்பு:**

DIPLOMA IN OCCUPATIONAL THERAPY:

இந்த மூவாண்டுகாலப் படிப்பினை வேலூரிலுள்ள கிறித்தவ மருத்துவக் கல்லூரி வழங்குகிறது.

**தொடு உணர்வு நோயறி தொழில்நுட்பவியல் :**

PERGUSION TECHNOLOGY:

+2வில் அறிவியல் பாடங்களைப் படித்தோருக்கான இந்த இரண்டு ஆண்டு கால படிப்பினை அளிப்பது வேலூரில் உள்ள கிறித்தவ மருத்துவக் கல்லூரி.

**மயக்க மருந்து தொழில்நுட்பப் பணியாளர் பயிற்சி மையம் :**

ANAESTHESIA TECHNICIAN TRAINING CENTRE:

மேற்கூறிய தகவல்கள் இதற்கும் பொருந்தும்.

**செயற்கை உறுப்புப் பொறுத்துதல் - மூட்டு செயற்கை உறுப்பு பொருத்துதல் பெருஞ்சான்றிதழ் படிப்பு :**

DIPLOMA IN PROSTHETICS AND ORTHOTICS:

+2வில் அறிவியல் பாடங்களைப் படித்தோருக்கான இந்த ஈராண்டு காலப் படிப்பினை வேலூரிலுள்ள கிறித்தவ மருத்துவக் கல்லூரி வழங்குகின்றது.

**ஓமியோபதி மருத்துவ இளயல் :**

BACHELOR OF HOMEOPATHIC MEDICINE: (BHMS)

இந்த ஐந்தாண்டு காலப் படிப்பினை - சென்னை மற்றும் மதுரையிலுள்ள அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியும், நாகர்கோவிலிலுள்ள White Memorial ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியும், சேலத்தில் உள்ள வினாயகா மிஷன் ஹோமியோபதி கல்லூரியும் அளிக்கின்றன.

**யுனானி மருத்துவ இளயல் :**

BACHELOR OF UNANI MEDICINE : (BUMS)

பயிற்சி காலம் 7½ ஆண்டுகள்.

சென்னையிலுள்ள அரசு யூனானி மருத்துவக்கல்லூரி, அரும்பாக்கம், பயிற்சியளிக்கிறது.

**ஆயுர்வேத மருத்துவ இளயல் :**

BACHELOR OF AYURVEDIC MEDICINE: (BAMS)

1. ஆயுர்வேதக் கல்லூரி, பதன் ஜலிபுரம், தொடகம், கோயம் புத்தூர்.

பயிற்சிக்காலம் 7½ ஆண்டுகள்.

2. வெங்கட்ரமனா ஆயுர்வேதக் கல்லூரி, சென்னை, 6½ ஆண்டுகள் இப்பயிற்யினை அளிக்கின்றது.

அரசு மருத்துவமனைகள், மாநகராட்சி தொடங்கி ஆரம்ப சுகாதார நிலையங்கள் வரை தொடர்ந்து பன்முகப்படுத்தப்பட்டு விரிவடைந்து வருகின்றன.

தனியார் மருத்துவமனைகள் நாளொரு வளர்ச்சியும், பொழுதொரு மேன்மையும் பெற்று வருகின்றன. மருத்துவச் சோதனை ஆய்வுக் கூடங்கள் வீதிகள் தோறும் தொடங்கப்பட்டு வருகின்றன. மருத்துவத்துறை சார்ந்த பயிற்சி பெற்றவர்கள் தொடர்ந்து பணிக்கு அமர்த்தப்படுகின்றனர். அரைகுறை மருத்துவ அறிவுபெற்றவர்கள் கூட இத்துறையில் பணியாற்றுகின்றனர். மேலும் வளைகுடா நாடுகள், ஆப்பிரிக்க நாடுகள், ஏன் - வளர்ந்த நாடுகளிலும் கூட இந்திய மருத்துவத் துறை சார்ந்த பயிற்சியாளர்கள் தொடர்ந்து பணிக்கு அமர்த்தப் படுகின்றனர். மருத்துவமனை நிர்வாகம் *(Hospital Management)* விரைந்து வளர்ச்சி பெற்று வருகின்றது. எனவே மருத்துவத் துறை சார்ந்த படிப்புகளை மாணவர்கள் தங்களின் ஈடு பாட்டிற்கும் நாட்டத்திற்கும் ஏற்ப தேர்ந்து பயிற்சி பெறுதல் வேலை வாய்ப்பினைத் தரும் என்பதில் சந்தேகமில்லை.

## பொறியியல் துறையில்...

இத்துறை, தொடர்ந்து விரிவடைந்து வருவதை நாமறிவோம். கட்டுமானம், இயந்திரவியல், மின்னணுவியல், தகவல் பொறியியல், மின்னியல், கணிணியியல், அச்சுக்கலையியல், சுரங்கவியல், இரசாயனப் பொறியியல், கட்டிடக் கலையியல், ஜவுளி பொறியியல், தோல் தொழில் நுட்பவியல், இன்ஸ்ட்ருமென்டேஷன், மரைன் இன்ஜினியரிங், உலோகவியல் போன்ற இளநிலை பொறியியல் பட்டதாரிகளை தமிழகத்திலுள்ள பொறியியல் கல்லூரிகள் உருவாக்கி வருகின்றன. ஆண்டு தோறும் ஏறக் குறைய 22,000 பேர் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு பொறியியல் கல்லூரியில் சேருகின்றனர். பயிற்சிக்காலம் நான்கு ஆண்டுகள்.

**அறிவியல் இளயர் செயல்முறை புவியியல் :**

B.Sc.APPLIED GEOLOGY:

+2 தேர்வில் கணிதம், இயற்பியல், வேதியியல் பயின்றவர்கள். இப் படிப்பில் சேரத் தகுதி பெற்றவர்கள். பயிற்சிக் காலம் 3 ஆண்டுகள். சென்னை அண்ணா பல்கலைக் கழகம் இதனைக் கற்பிக்கின்றது.

**அறிவியல் இளயர் செயல்முறை அறிவியல் :**

B.Sc.APPLIED SCIENCE

பயிற்சிக் காலம் 3 ஆண்டுகள்.



கோவையில் உள்ள *PSG College of Technology, CIT,* இப்பயிற்சியினைத் தருகின்றது.

**அறிவியல் இளயர் செயல்முறை அறிவியல் கணிணி தொழில்நுட்பவியல் :**

B.Sc.APPLIED SCIENCES -COMPUTER TECHNOLOGY :

பயிற்சிக் காலம் 3 ஆண்டுகள். கோவையிலுள்ள *PSG College of Technology* இதனைப் பயிற்றுவிக்கிறது.

**விண்வெளி ஆராய்ச்சி பொறியியல் :**

AEROSPACE ENGINEERING :

பயிற்சிக்காலம் 4 ஆண்டுகள். IIT சென்னை இதனைப் பயிற்றுவிக்கிறது.

**இயக்க ஊர்திப் பொறியியல் :**

AUTOMOBILE ENGINEERING

பயிற்சிக் காலம் 4 ஆண்டுகள். ஈரோட்டில் உள்ள *IRDT* இதனைப் பயிற்றுவிக்கிறது.

**போக்குவரத்துப் பொறியியல் :**

TRANSPORT ENGINEERING :

இதன் பயிற்சிக் காலம் 4 ஆண்டுகள். ஈரோட்டில் உள்ள *IRDT* இதனைப் பயிற்றுவிக்கிறது.

**பொறியியல் பட்டயப் படிப்புகள்:**

தமிழகத்தில் உள்ள தொழிற் கல்லூரிகளில் *(Poly Technics)* பொறியியல் பட்டயப் படிப்புகள் மூன்று ஆண்டுகளில் பயிற்றுவிக்கப்படுகின்றன. இவற்றில் சேர, பள்ளி இறுதி வகுப்புத் தேர்ச்சியே போதுமானது.

**வணிகவியல் நடைமுறைப் பெருஞ்சான்றிதழ் :**

DIPLOMA IN COMMERCIAL PRACTICE:

பள்ளி இறுதி வகுப்புத் தேர்ச்சியே போதுமானது. பயிற்சிக் காலம் 3 ஆண்டுகள். குறிப்பாக, தமிழகத்தில் உள்ள 20க்கு மேற்பட்ட பாலிடெக்னிக்குகளில் இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. பெரும்பாலும் மகளிர் இப்பயிற்சியில் அதிகம் சேருகின்றனர்.

**உடைவடிவமைப்பு-ஆடைத் தயாரிப்பு பெருஞ்சான்றிதழ் :**

DIPLOMA IN COSTUME DESIGN AND DRESS MAKING :

பயிற்சிக் காலம் 3 ஆண்டுகள். மதுரை, கோவை, சென்னை, எட்டையபுரம், விருதுநகர் ஆகிய இடங்களிலுள்ள மகளிர் தொழிற் கல்லூரிகளில் இப்பயிற்சி வழங்கப் படுகின்றது.

**ஒப்பனையியல் பெருஞ்சான்றிதழ் :**

DIPLOMA IN COSMOTOLOGY:

பயிற்சிக் காலம் ஓராண்டு, சென்னையிலுள்ள அரசு மகளிர் தொழிற்கல்லூரிகளில் இப்பாடம் போதிக்கப்படுகிறது.

(தொடர்ச்சி 41-ஆம் பக்கம்)

**க**ல்வி அறிவில்லா மனிதன் கற்காலத்தில் குகைகளில் வாழ்ந்தான். இந்த நவீன புதுயுகத்திலும் பலர் கற்காலத்தில் இருந்ததைவிட மோசமான இருப்பிடங்களில் வசிப்பதைக் காண்கின்றோம்.

கட்டடங்கள் மனித வாழ்வில் இன்றியமையாத தேவை. வாழ வீடுகள் மட்டும் அல்லாமல், அலுவலகங்கள் தொழிற்கூடங்கள் என்று ஒவ்வொன்றுக்கும் கட்டடங்கள் தேவைப் படுகின்றன. கட்டுமான செலவினங்கள் அதிகமாக இருப்பதால் பலரால் கட்டடங்கள் பற்றி கனவு கூட காண இயலவில்லை. ஆகவே கட்டுமானப் பணியில் தொழில்நுட்பத்தைக் கடைப்பிடித்து, குறைந்த முதலீட்டில் தரமான கட்டடங்கள், வீடுகள் அமைத்திடலாம் என்பதை வேலூர் கட்டிட மையம் செயல்படுத்திக் காட்டியுள்ளது. அந்தக்கட்டடத் தொழில் நுட்ப உத்திகள் சில இந்தக் கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன.







## கடைக்கால்

கட்டிடத்திற்குக் கடைக்கால் மிகக் கவனமாக அமைக்க வேண்டும். கடைக்கால் போட மண்ணை வெட்டி எடுக்கும்போது கடினமான மண், முறம்பு, பாறை போன்றவைகள் வந்தால் மேலும் அஸ்திவாரத்திற்கு மண்ணை வெட்டத் தேவை யில்லை, அதன்பின் நமக்கு இயற்கையில் கிடைக்கும் கருங்கற்களைச்சீர்செய்து, சேற்றினால் ஆன கலவையைக் கொண்டு அஸ்திவாரம் அமைக்கலாம். இவ்வாறு அமைக்கப்படும் அஸ்திவாரத்திற்கு இரண்டு ஓரங்களிலும் சிமெண்ட் அல்லது சுண்ணாம்பால் பாயின்டிங் வேலை செய்யலாம். அஸ்திவாரம் போடும்போது அதிகமான மணல் வந்தால், அவ்விடத்தில் மட்டும் செங்கற்கலார் வளைவுகள் அமைத்து மட்டத்திற்குக் கொண்டு வரலாம். இவ்வாறு அஸ்திவாரம் அமைப்பது சிக்கனமானது.

அஸ்திவாரத்தில் ஈரக்கசிவு ஏற்பட்டால், அடிப்பீடத்திற்குமேல் செங்கல்லைக் குத்துக்கல் வரிசையில் அடுக்கி குறைந்த விலையில் கிடைக்கும் வேஸ்ட் ஆயிலைக் கலந்து சிமெண்ட் கலவையை

பயன்படுத்தினால் ஈரக்கசிவை முழுவதுமாகத் தவிர்க்கலாம்.



## 1. ரேட் டிராப் செங்கல் இணைப்பு (RAT TRAP BOND)

ரேட் டிராப் செங்கல் இணைப்பு என்பது சாதாரணமாக அமைக்கும் செங்கல் இணைப்பைச் சற்று மாற்றி அமைக்கும் முறையாகும்.

சரியான முறைப்படி கலவையைக் கலந்து கொண்டு பின்பு செங்கல்லை குத்துக்கல் வரிசையில் அடுக்கி சுவர் அமைக்கவேண்டும். இரண்டு செங்கற்களை அதற்கு எதிர்பக்கமாகச் சற்று இடைவெளி விட்டுவைக்க வேண்டும். மொத்த சுவரின் அளவு (3/4அடி (அ) 23செ.மீ.). அதற்கு அடுத்தாற்போல் கலவையை இடவேண்டும். அந்தக் கலவையை சுவரின் மேல் ஓட்டையில் விழாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு கட்டினால் நமக்கு 20% முதல் 25% வரை செங்கல் மற்றும் சிமெண்ட் மீதமாகும். சுவர் கட்டும்போது மூன்று அடி கட்டிய பிறகு குத்துக்கல் வரிசைப்பிடிக்கவேண்டும். இவ்வாறு கட்டும் சுவர் உறுதியாகவும் வெப்பக்கசிவு குறைவாகவும் இருக்கும். இச்சுவரில் குழாய் மற்றும் மின்சார கம்பிகளை உட்புறமாக எளிதாகப் பொருத்தலாம்.




## சீர்செய்யப்படாத கல்லை நிரப்பி உருவாக்கப்பட்ட கான்கிரீட் கட்டைகள்: (ரபுள் பில்லர் பிளாக்ஸ்)

இது பொதுவாக சிமெண்ட் கலவையை உபயோகித்துக் கட்டப்படும் கருங்கல் சுவர்களை விட உயர்ந்த கட்டிடத் தொழில் நுட்பமாகும். இக் கான்கிரீட் கட்டைகளை, கட்டிடம் அமைக்கும் இடத்திலேயே எளிதில் தனிப்பட்ட இயந்திரம் இல்லாமலேயே தயாரிக்கலாம்.

பொதுவாக இவற்றின் நீளம் 30 செ.மீ. அகலம் 15 செ.மீ.ஆகும். இவற்றின் கனம் 20 செ.மீ. 15 செ.மீ. அல்லது 10 செ.மீ.ஆக இருக்கலாம். இக் கான்கிரீட் கட்டைகளின் எடை 9 கிலோ கிராமிலிருந்து 8 கிலோ கிராம்வரை இருக்கலாம்.

கான்கிரீட் கட்டைகளைத் தயார் செய்வதற்கு இரும்புத் தகடுகளைக் கொண்டு தேவையான அளவில் அச்சைத் தயாரித்துக்கொள்ள வேண்டும். பின்பு 5 செ.மீ.லிருந்து 26 செ.மீ. அளவுள்ள கருங்கற்களை 1 : 5 : 8 சிமெண்ட் கான்கிரீட்டில் கலந்து அச்சில் வார்க்கவேண்டும். இவ்வாறு தயாரித்த கான்கிரீட் கட்டைகளைத் தண்ணீரில் முழுகவிட்டு உறுதிப்படுத்தியபின்னே உபயோகிக்க வேண்டும்.

கருங்கல் கான்கிரீட் கட்டை தயாரிப்பில் சிறிய மாற்றம் செய்து உடைந்த செங்களை, கருங் கற்களுக்கு மாற்றாக 1:5:6 (ஒரு பங்கு சிமெண்ட், 5 பங்கு மணல், 6 பங்கு செங்கல் கப்பி, என்ற விகிதத்தில் பயன்படுத்தி கட்டைகள் தயார் செய்யவேண்டும். இக்கட்டைகள் அறுகோண வடிவத்தில் அமைக்கப்படுகின்றன.

சாதாரணமாகக் கட்டும் கருங்கல் சுவர் களைவிட, கருங்கல் கான்கிரீட் கட்டைகளைப் பயன்படுத்தி கட்டும் சுவர்களால் 10லிருந்து 20% வரை செலவு குறைகிறது.

## உறுதிபடுத்தப்பட்ட மண் கட்டைகள்:

உறுதிப்படுத்தப்பட்ட மண்கட்டைகள் சாதாரண செங்கல்லைவிட அதிக உறுதி வாய்ந்ததாக இருக்கும். செங்கல் தயாரிக்க விறகுகள் அதிக மாகத் தேவைப்படுவதால், நம் நாட்டில் காடுகள் மிகவும் வேகமாக அழிக்கப்படுகின்றன. இதைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டதுதான் உறுதிப் படுத்தப்பட்ட மண்கட்டைகள்.

20% முதல் 30% வரை உள்ள களிமண் மற்றும் 70% முதல் 80% வரை உள்ள மணற்பாங்கான சிவப்பு மண்ணைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள

உறுதிப்படுத்தப்பட்ட மண் கட்டைகள் தயாரிக்கும் இயந்திரம்



வேண்டும். இத்துடன் 5% சிமெண்டையும் சிறிது நீரையும் எடுத்துக்கொண்டு நன்றாகக் கலந்து கொள்ளவேண்டும், பிறகு இக்கலவையை இதற்கான கருவியில் இட்டு அழுத்தினால் தரமான ஒரே அளவான உறுதிப்படுத்தப்பட்ட மண் கட்டைகள் கிடைக்கும். இவ்வாறு தயார் செய்த மண்கட்டைகளை ஒருவாரம் அல்லது 10 நாட்களுக்கு நிழலில் வைத்துத் தண்ணீர் தெளித்து உறுதிப்படுத்த வேண்டும்.

உறுதிப்படுத்தப்பட்ட மண்கட்டைகளைத் தயாரிப்பதால் நமக்கு எரிபொருள் சிக்கனமாவதுடன் செலவும் குறைகிறது. மேல்கூரையைச் சற்று வளர்த்தி, மழைநீர் சாரல் சுவற்றின் மீது விழாமல் பாதுகாத்தால், இச்சுவர்களுக்குப்பூச்சுவேலை அவசியம் இல்லை.

## ஜன்னல் அல்லது வாயிற்படியின்மேல் உத்திரம் (லிண்டல்)

பொதுவாக ஜன்னல், கதவு போன்ற இடைவெளிகளில் கான்கிரீட் லிண்டர்கள்



அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. லிண்டல் ஒரு சிறிய முக்கோண வடிவிலான செங்கல் சுவரைத் தாங்க மட்டுமே பயன்படுகின்றது என்பதை நாம் கருத்தில் கொள்வதில்லை. எனவே அதிக செலவினத்தைக்கொண்ட லிண்டல் அமைப்பதைத் தவிர்க்கலாம். அதற்கு மாறாக இடை வெளிகளின்மேல் அரைவட்ட வடிவம் அமைந்த செங்கல் வளைவுகளை அல்லது படிபோன்ற செங்கல் வளைவுகளை அமைக்கலாம்.

பொதுவாக 4 அடிக்குக் குறைவான இடை வெளி இருப்பின் அவ்விடங்களில் லிண்டல் அமைப்பதற்குப் பதிலாகச் செங்கற்களைக் குத்துக்கல் வரிசையில் அடுக்கி அமைக்கலாம்.

இடைவெளி அதிகமாக உள்ள இடங்களில் லிண்டல் அமைக்கவேண்டியிருப்பின் குறைவான கான்கிரீட்டைக் கொண்டு அமைக்கலாம்.

## மேற்கூரை (சிலாப்) அமைத்தல்: (FILLER SLAB)

ஒரு சிரப்பிய கான்கிரீட் கூரை (பில்லர் சிலாப்) ஆகும்.



ஓடு பரப்பிய கான்கிரீட் கூரை - (பில்லர் ஸ்லாப்)

வீடு கட்டுவதில் அதிகமாகச் செலவாகும் பகுதி மேற்கூரை போடுவது ஆகும். தற்போது கட்டப்பட்டுவரும் கான்கிரீட் கூரை அமைப்பதில் இரும்புக் கம்பியும், சிமெண்டும் அதிகமாகச் செலவாகின்றது. எனவே, நாம் கட்டப்பட்டு வரும் கான்கிரீட் கூரையில் ஒரு சில இடங்களில் கான்கிரீட் தேவையில்லை. அந்த இடங்களில் குறைந்த எடையுள்ள மற்றும் விலை குறைவான ஓடுகள் (அல்லது) செங்கற்களை வைத்து கான்கிரீட் கூரையை அமைக்கலாம். இம்முறையில் சாதாரணமாகக் கட்டப்படும் கான்கிரீட் கூரை அமைப்பது போல் பலகையை அடித்து, கம்பிகளைக் கட்டவேண்டும். இரண்டு மங்களூர் ஓடுகளை ஒன்றோடு ஒன்று இணைத்து, அந்த இரும்புக் கம்பிகளுக்கிடையே வைக்கவேண்டும். அதன் பின்னர், கான்கிரீட் போட வேண்டும். இதனால் விலை குறைந்த ஓடுகள் இருக்கும் பகுதியில் உள்ள விலை அதிகமான கான்கிரீட்டை மிச்சப்படுத்த முடியும். மற்றும் கான்கிரீட்டின்

கனத்தைக் குறைப்பதால் அதனைத் தாங்கி நிற்கும் இரும்புக் கம்பியானது மிச்சப்படுத்தப்படுகிறது. ஓடுகளுக்கு இடையில் வெற்றிடம் இருப்பதால் கோடை காலத்தில் மிதமான சீதோஷணத்தை உணரலாம்.

## உட்குழிந்த கான்கிரீட் ஓடுகள் (பியூனிக்களர் செல்ஸ்)

குறைந்த செலவில் வீடு கட்டுவதில் ஒரு நவீன அமைப்பே "உட்குழிந்த கான்கிரீட் ஓடுகள்".



பொதுவாக இவ்வோடுகள் 90செ.மீ. x 90 செ.மீ.அளவில் அமைக்கப்படுகிறது. நான்கு புறங்களிலும் 6 எம்.எம்.கம்பிகளைக் கொண்ட இவ்வோடுகள் 1:2:4 (சிமெண்ட் 1 பங்கு, 2 பங்கு மணல், 4 பங்கு ஜல்லி, சிமெண்ட் கான்கிரீட்டினால் தயார் செய்யப்படுகிறது. இவ்வோடு 2.5 செ.மீகனம் கொண்டிருக்கும். முன்பே தயார் செய்த கான்கிரீட் பீம்களின்மீது உட்குழிந்த ஓடுகளை அமரவைத்து அதன்மீது வெதரிங் கோரீசைப் பயன்படுத்தி கூரையை அமைக்கலாம். இவ்வகைக் கூரை அமைப்பதன் மூலம் கான்கிரீட் செலவு 15% மற்றும் இரும்பு செலவு 30% அளவில் குறைத்திட இயலும். ஓடுகள் குறைவான எடை கொண்டவை. முன்பே தயார் செய்த இவ்வோடுகளைக் கொண்டு எளிமையாகவும், விரைவாகவும் கூரையை அமைக்கலாம்.

## செங்கல் தூண் முறை: (பிரிக்பேனல் முறை)

முன்னதாகத் தயார்செய்யப்பட்ட செங்கல் தூண் முறையில் மேற்கூரையும், தரையும் அமைக்கலாம். இத்தூண் முறையைக் கொண்டு சுவரும் கட்டமுடியும். இம்முறையில் மேற்கூரையை அமைக்கும்பொழுது கம்பிகளைத் தூண்களுக்கு உபயோகப்படுத்தலாம். சுவர் தூண்களை அமைக்கக் கம்பிகள் தேவையில்லை.

இந்தத் தூண் முறையை அமைப்பதற்குத்

செங்கல் தூண் முறை




தூணின் தோற்றம்



திறமையான வேலையாட்கள் தேவை இல்லை. தூண் அமைக்க பீடம், மர அச்சுகளை எடுத்துக்கொண்டு செங்கல்லை நமக்கு எந்த அளவில் தூண் தேவையோ அவ்வடிவத்தில் அடுக்கி அதன் நடுவில் சிமெண்ட் கலவை 1.5 அத்துடன் எம் 15 கான்கீரிட்டை பயன்படுத்தி தூணை அமைக்கலாம். இவ்வாறு தயார் செய்த தூண்களை நீரில் மூழ்கி உறுதிபடுத்தியபின் நன்றாக உலரவிட்டு தூண்களை முன்னதாகதயார் செய்த பீம்களில் சரியாகப் பொருத்தி சாதாரண முறையில் கான்கிரீட் போடவேண்டும்:

இம்முறையில் அமைப்பதால் சிமெண்ட் கம்பி போன்றவை குறைவாக உபயோகித்த செங்கல் மற்றும் சீலிங் பூச்சு வேலை அவசியம் இல்லை. இம்முறையில் மேற்கூரை, தரை, சுவர் போன்றவை எளிமையாகவும் விரைவாகவும் அமைக்கமுடியும்.

## இரும்பாலான சிமெண்ட் தண்ணீர் தொட்டி: (ஃபெர்ரோ சிமெண்ட் தண்ணீர் தொட்டி)

இரும்பாலான சிமெண்ட் தண்ணீர் தொட்டியை மிகவும் குறைவான விலையிலும் சுலபமாகவும் தயாரிக்கலாம். இத்தொட்டியைச் செய்ய இரண்டு



அடுக்கு 22 கேஜ் கோழிவலையும், 20 கேஜ் டைமண்ட் வலையும் எடுத்துக்கொண்டு எந்த வடிவத்தில் தொட்டியை அமைக்கிறோமோ அந்த வடிவத்தில் வலையை வெட்டிக்கொள்ளவும். பிறகு அச்சு அமைத்து அதன்மீது ஆயிலைத் தடவி விடவேண்டும். அதன்பின் வலைகளை வைத்து கட்டு கம்பியில் நன்றாகக் கட்டியபின் சிமெண்ட் கலவை 1:2 என்ற விகிதத்தில் கலந்து மெத்திட வேண்டும். ஒரு நாள் கழித்து அச்சில் வார்க்கப்பட்ட தொட்டியை எடுத்து நீரில் மூழ்கி உறுதிப்படுத்த வேண்டும். இவ்வாறு தயார்செய்த தொட்டியானது 1000 லிட்டருக்கு ரூ.1500/- வரை கட்டுமானச் செலவாகிறது. மற்ற கான்கிரீட் தொட்டி, பிளாஸ்டிக் தொட்டி அமைத்தால் 1000 லிட்டருக்கு ரூ.3000/- க்கு மேல் செலவாகிறது.

பெர்ரோ சிமெண்ட் தொட்டியைத் தயாரிக்க மற்றொரு முறையையும் பின்பற்றலாம். இம்முறையில் 20 கேஜ் வெல்டு வலையையும் இரண்டு அடுக்கு 22கேஜ் கோழி வலையை எடுத்துக்கொண்டு வேண்டிய வடிவத்தில் அமைத்து, சிமெண்ட் கலவை 1:2 விகிதத்தில் மெத்தி தொட்டியை அமைக்கலாம்.

### இரும்பாலான சிமெண்ட் கதவு: (ஃபெர்ரோ சிமெண்ட் கதவு)

மரத்தின் விலை அதிகரிக்கும் இக்காலத்தில் மரத்திற்குப் பதிலாக இரும்பாலாகிய சிமெண்ட் கலவை கொண்டு கதவு தயாரிக்கலாம். இவ்வாறு செய்யும் கதவில் சிமெண்ட் கலவை 1:2, சிமெண்ட் ஒரு பங்கு, மணல் இரண்டு பங்கு, விகிதத்தில் கலவையை எடுத்துக்கொள்ளவும். 22 கேஜ் கோழி வலையை வேண்டிய அளவுக்கு வெட்டி நான்கு அடுக்காக வைத்து, சிமெண்ட் கலவையை மெத்திவிட வேண்டும். பிறகு, கதவை ஒருநாள் உலரவிட்டு ஒரு வாரத்திற்கு மேல் தண்ணீரில் மூழ்கவிட்டு உறுதிப்படுத்தியபின் வேண்டிய இடங்களில், துளைபோடும் இயந்திரத்தைக் கொண்டு துளைபோட்டு, தாழ்ப்பாள் கீல் சட்டம் போன்றவற்றைப் பொருத்தலாம்.

இவ்வாறு தயார் செய்யப்பட்ட கதவானது மரக்கதவுகளை விட செலவு குறைவாகவும், அதிக நாட்கள் நீடித்தும் இருக்கும்.

### ஃப்ரோ சிமெண்ட் வாசற்கதவு மற்றும் ஜன்னல்:

மரத்தின் விலை அதிகரிக்கும் இக்காலத்தில் மரத்திற்குப் பதில் இரும்பாலான ஃப்ரோ சிமெண்ட் வாசற்கதவு மற்றும் ஜன்னல் குறைந்த செலவில் செய்யலாம்.

8mm கம்பிகள் 3.6mm கம்பிகள் அதனைச் சுற்றிக் கொண்டு இவைகளோடு 1:2:4 (1 சிமெண்ட்




ஃப்ரோ சிமெண்ட் ஜன்னல்

2 பங்கு மணல் 4 பங்கு பேபி ஜல்லி) சிமெண்ட் கான்கிரீட்டினால் தயார் செய்யப்படுகிறது. இக்கான்கிரீட் சட்டங்களில் ஸ்குரு போடுவதற்கு மரத்துண்டுகள் வைக்கவேண்டும். இவ்வாறு தயார் செய்யப்பட்ட கான்கிரீட் சட்டங்கள் உலர்ந்த பின்பு 7 நாட்கள் தண்ணீர் இட்டு உறுதிப்படுத்த வேண்டும். பின்னர் வேண்டிய இடங்களில், துளைபோடும் இயந்திரத்தைக் கொண்டு துளை போட்டுக் கொள்ள வேண்டும். இவ்வாறு தயார் செய்யப்பட்ட கதவானது மரக்கதவுகளை விட செலவு மிகக் குறைவானது. நீண்டநாட்கள் நீடித்தும் இருக்கக்கூடியவை.

### ஃப்ரோ சிமெண்ட் சேனல் கூரை:

பொதுவாக இக்கூரைகளின் அமைப்பு 0.75 M x 3.50 M அளவில் அமைக்கலாம். இக்கூரையை அமைக்க முதலில் பொய் செங்கற்கள் மூலம் வளைவு (சேனல்) வடிவத்தில் அச்சு தயாரித்துக் கொள்ள வேண்டும். தயாரித்துக் கொண்ட அச்சின் மேல் சிமெண்ட் கலவை 1:2 என்ற விகிதத்தில் கலந்து அவ் வளைவின் மேல் பூச வேண்டும். அதன் பின் வேஸ்ட் ஆயிலைப் பயன்படுத்தி பின்னர் கீழ் இரண்டு முனைகளிலும் 8mm கம்பிகளைக் கட்டி மேலே நடுமையத்தில் 6mm கம்பிகளைக் கட்டியவுடன் கோழி வலைகளை மெத்தி அதன் மீது சிமெண்ட் கலவையை 1:2 விகிதம் பூசவேண்டும், பின்னர் இந்த ப்ரோ சிமெண்ட் கூரை உலர்ந்தவுடன் தண்ணீரில் 10 நாட்கள் உறுதிப்படுத்தப்படவேண்டும்பின்னர் நாம் தேவையான வீடுகள் மற்றும்கழிப்பிடங்களில் பயன்படுத்தலாம்.

எனவே மேற்கண்ட முறைகளைக் கொண்டு குறைந்த செலவில் தரமான கட்டடங்கள் அமைத்து, பயன்பெறலாம். ★

# தமிழ் - முதல் நாவல்

க.நா. சுப்பிரமணியம்

பிரதாப முதலியார் சரித்திரம் என்கிற இந்த நாவலைத் தங்கள் முதல் நாவலாகப் படைத்த தமிழர்களைப் பாக்கியசாலிகள் என்றுதான் சொல்ல வேண்டும். இந்த நாவலை முதல் தடவையாகப் படிக்கும்போதுதான் அது ஒரு நூதன அனுபவமாக அமைகிறது என்று சொல்ல முடியாது. ஒவ்வொரு தடவை படிக்கும்போதும் அது ஒரு நூதனமான அனுபவமாகவே படுகிறது. படிக்கும்தோறும் படிக்கும்தோறும் நவநவமான ருசிகளைத் தரக்கூடிய இந்த நாவலில் விமரிசகன் எவ்வளவு குற்றங்குறைகள் கண்டால்தான் என்ன? வாசகன் எப்போதும் விரும்பிப் படிப்பான்.

நாவலாக இதில் உருவம் கட்டுக்கு அடங்கவில்லை. தமிழில் நாவலுக்கு என்று ஒரு மரபு ஏற்படாத காலத்தில் எழுதப்பட்ட இந்த நாவலில் உருவம் வழிந்தோடுகிறது என்பது ஒரு குறையாகாது. அளந்து பார்த்து வெட்டி நீட்டி இப்படித்தான் ஓர் உருவம் சமைக்க வேண்டும் என்று நாம் பிரம்ம தேவனுக்குக் கட்டளை பிறப்பிக்க முடியுமா என்ன? அதே போல வேதநாயகம் பிள்ளை எழுதி நமக்களித்திருக்கும் இந்நாவலில் வளர்த்தல், தொக்கி நிற்றல், அதிகப் பிரசங்கித்தனம் எல்லாம் இருக்கின்றன என்று சொல்லிப் பயனில்லை. அவற்றுடன் சேர்த்துத்தான் நமக்கு இதை ஆக்கித் தந்திருக்கிறார் அவர். நம் நினைப்பில் நாம் ஏற்படுத்திக் கொண்ட நாவல் என்கிற கஜக் கோல் சரியோ, தப்போ- யார் சொல்ல முடியும்? சுவாரசியமான கதை- பலவிதமான சுழிப்புகளுடனும் நுங்கு நுரைகளுடனும் புது வெள்ளம்போல ஓடுகிறது இது. திளைத்து மூழ்கிக் களிக்க அறிந்தவாகள் அதிருஷ்டசாலிகள்தான். கரை புரண்டு ஓடுகிறதே, இல்லை, கரைகள் இடிந்துவிட்டனவே என்றும் முறையிடுவது இலக்கிய வளத்துக்கு அடிகோலுவதாகாது.

“என்னுடைய ஹிந்து வாசகர்களுக்கு ராஜாக்களையும் ராணிகளையும் பற்றிய செய்திகளைக் கேட்கப் பிடிக்குமே என்றுதான் ஞானாம்பாளை மாறு வேஷத்தில் அரசனாக்கிப் பார்த்தேன்" என்று முகவுரையில் எழுதுகிறார் வேதநாயகம் பிள்ளை. வேட்டைக்குப் போன புருஷனிடமிருந்து பிரிந்து போன ஞானாம்பாளை ஒரு யானை மாலையிட்டுத் தூக்கிப் போய்விடுகிறது. “குடியரசென்னும் கொடிய அரசுபற்றி" அந்தக் காலத்துக்கும் அவர் அறிவுக்கும் எட்டிய வரையில் விவரிக்கிறார் ஆசிரியர். ஓர் அரசியல் பிரசங்கத்தையே புகுத்திவிடுகிறார். ஜனங்களுடைய சௌக்கியத்துக்காக இராஜாங்கம் ஏற்பட்டிருக்கிறதே தவிர, தன்னுடைய சௌக்கியத்துக்காக ஏற்பட்டிருக்கவில்லை என்பதை, அரசன் எப்போதும் தன்னுடைய கருத்தில் வைக்க வேண்டும்... ஒரு அன்புள்ள தகப்பன், தன் பிள்ளைகளுடைய நன்மைகளை எப்போதும் தேட வேண்டும்... கடவுளைப்போல, அரசனுக்குச் சர்வலோக சஞ்சாரமும் சர்வ சக்தியும் இல்லாததால், உத்தியோகஸ்தர்கள் மூலமாகவே அரசன் அநேக காரியங்களை நடத்த வேண்டியதாயிருக்கும். அந்த உத்தியோகஸ்தர்கள் இராஜப் பிரதிநிதிகளாகையால், அவர்கள் சர்வோத்தமர்களாய் இருக்க வேண்டும்... அரசன் யோக்கியர்களையே நாடுகிறான் என்று யாவருக்கும் தெரிந்தால், உலகத்தில் யோக்கியதை அதிகரிக்கவும், அயோக்கியதை வலசை வாங்கிப் போகவும் இடமாகுமல்லவா? சில இராஜாங்கத்தார் யோக்கியதையைக் குறித்து யாதொரு பரீக்ஷையும் செய்யாமல் கல்விப் பரீக்ஷை மட்டும் செய்துகொண்டு, அதில் யார் தேர்ந்து வருகிறார்களோ, அவர்களுக்கே எந்த உத்தியோகங்களையும் கொடுக்கிறார்கள்... இங்கிலீஷ் துரைத்தனத்தாரால் நியமிக்கப்பட்டிருக்கிற பாடசாலைகளில், ஈசுவர நிச்சயம், சன்மார்க்கம் முதலிய ஆத்மார்த்தமான விஷயங்கள் கற்பிக்கப் படாமல், லௌகீக சம்பந்தமான சில காரியங்கள் மட்டும் கற்பிக்கப்படுகிறபடியால், அந்தப் பாடசாலைகளில் கல்வி கற்கிற பிள்ளைகள், உலகாயதர்களாயும், நாஸ்திகர்களாயும் பரிணமிக்கிறார்கள். அவர்களுக்கு உத்தியோகமான உடனே பணமே தெய்வமென்று நினைத்து, அதைச் சம்பாதிக்கிறதற்காக சகல அக்கிரமங்களையும் செய்கிறார்கள்". இதைத் தொடர்ந்து லஞ்சம் வாங்குகிற உத்தியோகஸ்தர்களைப்பற்றி ஆத்திரம் தீர இரண்டு பக்கங்கள் எழுதியிருக்கிறார் வேதநாயகம் பிள்ளை, ஞானாம்பாள் என்கிற ஆண் வேஷ அரசன் வாயிலாக. “...தேன் மழை பொழிவது போல ஞானாம்பாள் பிரசங்கித்தாள். நான் அளவற்ற ஆக்லாதமடைந்து அவளைப் பார்த்து 'நீ இவ்வளவு கையிருப்பு வைத்துக்கொண்டு அரசாளத் தெரியாதென்று சொன்னாயே! இப்போது உலகத்தில் அரசு செய்கிறவர்களுக்கு, உனக்குத்



தெரிகிற காரியங்களில், நூற்றில் ஒரு பங்குகூடத் தெரியுமா?' என்றேன். அவள் என்னைப் பார்த்து, 'வார்த்தைக்குத் தரித்திர முண்டோ? வாய்ப் பந்தல் போட யாராலே கூடாது?... பேசினபடி நடப்பதல்லவோ கஷ்டம்?' என்றாள்".

ஆண் வேஷத்திலே ஞானம்பாள் அரசாண்ட நாட்டிலே பல சீர் திருத்தங்களைச் செய்தாள் அவள். உத்தியோகஸ்தர்கள், நிர்வா கஸ்தர்கள் இவர்களுடைய அமுலை அடக்கிக் கட்டுப்படுத்தினாள். வியாதிகள் வருமுன்னரே அணை போட்டுத் தடுக்க முனைந்தாள். ராஜபக்தியின் அவசியத்தை வலி யுறுத்தினாள். அரசியற் செலவு களைக் குறைத்தாள். நியாயமல் லாதது நடவாதபடி அறவே ஒழிக்க முயன்றாள். அஞ்சாமல் நியாயம் வழங்குவதை நிலைநிறுத்தினாள். முனிசீப்பான தன் அனுபவத்தையெல்லாம் வைத்துச் சில முடிவுகளை வேதநாயகம் பிள்ளை கதைப் போக்கு தடைப் படாமல் கூறியிருக்கிறார். சுதேச பாஷாபிவிருத்தியைப் பற்றி ஓர், அத்தியாயமே எழுதிவிட்டார். "இங்கிலீஷ் வார்த்தைகளுக்குச் சரியான பிரதிபதங்கள் தமிழில் இல்லை என்று சொல்வது, தெரி யாமையே அல்லாமல் உண்மை யல்ல. தமிழ் நூற்களைத் தக்கபடி ஆராய்ந்தால், பிரதிபதங்கள் அகப் படுவது பிரயாசமா? அப்படித்தான் இரண்டொரு சங்கேத வார்த்தை களுக்குத் தமிழிலாவது சமஸ் கிருதத்திலாவது பிரதிபதங்கள் அகப்படாத பக்ஷத்தில் அந்த வார்த்தைகளை மட்டும் இங்கிலீ ஷிலே பிரயோகித்தால் அவர்களை யார் கோபிக்கப் போகிறார்கள்?" மொழி வளர்ச்சிபற்றி இப்படி வேதநாயகம் பிள்ளை எழுதியது 1879ல் என்று ஞாபகம் வைத்துக் கொண்டு பார்க்கும்போது நமக்கே ஆச்சரியமாக இருக்கிறது. "இந்தத் தேசத்தார் சொந்தப் பாஷைகளை யாவது, அல்லது எந்தப் பாஷை களையாவது படிக்கலாமென்று இங்கிலீஷ் துரைத்தனத்தார் உத்தரவு செய்திருப்பதும், அந்த உத்தரவைச் சுதேச கனவான்கள் ஆக்ஷேபிக்காமல் சும்மா இருப்பதும் நியாயமா?... சமஸ்கிருதமும் லத் தீனும் அதிக சிறப்பும் அழகும் அலங்காரமும் பொருந்திய பாஷைகள் என்பதற்குச் சந்தேக மில்லை. அவகாசமுள்ளவர்கள் சொந்தப் பாஷைகளோடுகூட அந்தப் பாஷைகளையும் படிப்பது அதிக விசேஷம்தான். ஆனால், சொந்தப் பாஷைகளை நன்றாகப் படிக்காமல் அந்த அந்நிய பாஷை களிலே காலமெல்லாம் போக்குவது அகாரியம் என்றுதான் ஆக்ஷேபிக் கிறோம்... மாதா வயிறெரிய மகேசுவர பூஜை செய்வது போல இருக்கிறது இது... தமிழில் வசன காவியங்கள் இல்லாமலிருப்பது பெருங் குறை. ஐரோப்பிய பாஷைகளில் வசன காவியங்கள் இல்லாமலிருக்குமானால், அந்தத் தேசங்கள் நாகரீகமும் நற்பாங்கும் அடைந்திருக்கக் கூடுமா? அப்படியே நம்முடைய சுய பாஷைகளில் வசன காவியங்கள் இல்லாமலிருக்கிற வரையில், இந்தத் தேசம் சரியான சீர்திருத்தம் அடை யாதென்பது நிச்சயம்... இங்கிலீஷ், பிரெஞ்சு முதலிய ராஜ பாஷை களைப் படிக்கிறவர்கள் தேச பாஷைகளைத் தீர்க்கமாக உணர்ந்து, இந்தத் தேசத்தைச் சூழ்ந்திருக்கிற அறியாமை என்னும் அந்தகாரம் நீங்கும்படி வசன காவியங் களென்னும் ஞான தீபங்களை ஏற்றுவார்களென நம்புகிறோம். தமிழ் படிக்காதவர்கள் தமிழ் நாட்டில் வசிக்க யோக்கியர்கள் அல்ல. அவர்கள் எந்த ஊர்ப் பாஷைகளைப் படிக்கிறார்களோ, அந்த ஊரே அவர்களுக்குத் தகுந்த இடமாகையால், சுயபாஷையைப் படிக்காமல் இங்கிலீஷ் மட்டும் படிக்கிறவர்களை இங்கிலீஷ் தேசத்துக்கு அனுப்பிவிடுவோம். பிரெஞ்சு மட்டும் படிப்பவர்களைப் பாரீஸ்அப் பட்டணத்துக்கு அனுப்பி விடுவோம். இலத்தீனுக்கும் சமஸ் கிருதத்துக்கும் சொந்த ஊர் இல்லாதபடியால், அந்தப் பாஷை களைப் படிப்பவர்களை அநாமக ரணத் தீவுகளுக்கு அனுப்புவோம்".

இவ்வளவும் தான் செய்த பிர

சங்கம் என்று யாராவது எண்ணி விடப் போகிறார்களே என்று, கடைசியில் "என்றாள் ஞானாம்பாள்" என்று அத்தியாய இறுதியில் சேர்த்திருக்கிறார் ஆசிரியர்.

ராஜாங்கம் இப்படியாக நடந்து வரும் நாளையிலே பழைய அரசனின் குமாரி ஆனந்தவல்லி இன்னமும் ஆண் வேஷத்திலிருந்த ஞானாம்பாளிடம் காதல் கொண்டு விட்டாள். இந்தச் சிக்கல் ஒன்று வருமுன்னரே ஞானாம்பாளுக்கு அரச பதவி வெறுத்துவிட்டது. "நம்முடைய ஊரில் நமக்கென்ன பாக்கியம் குறைவாயிருக்கிறது? இந்த ஊர்க் குடிகளுடைய சௌக் கியத்துக்காக நாம் இந்த அரசாட்சியை ஏற்றுக்கொண்டதே யல்லாது, நமக்கு ஏதேனும் இலாபம் உண்டா? குடிகளுக்கு வேண்டிய சௌக்கியங்களையும், சட்டதிட்டங் களையும் நாம் ஏற்படுத்திவிட்ட படியால், இனிமேல் இந்த ஊரை ஆளுகிறவர்களுக்கு அதிகப் பிரயாசை இராது' என்றாள் ஞானாம்பாள்". அரசை ஆனந்த வல்லியிடம் ஒப்படைத்துவிட்டு ஞானாம்பாளும் பிரதாப முதலியாரும் வெளியேறத் தயாரா னார்கள். இதற்குள் மந்திரி பிரதானிகள் கூடித் தங்கள் அரசன் ஆனந்தவல்லியை மணந்து கொள்ளவே வேண்டும் என்று வற்புறுத்தத் தொடங்கியும் விட் டார்கள். திருமணத்துக்கு நாள்கூடக் குறிப்பிட்டு விட்டார்கள்.

இருந்தால் இனிச் சங்கடம்தான் என்று இருவரும் வெளியேறி விட்டார்கள் யாருடனும் சொல்லிக் கொள்ளாமல். பின்னர், ஞானாம் பாள் ஆனந்தவல்லிக்கு உண்மை எல்லாவற்றையும் வெளியிட்டு ஒரு லிகிதம் எழுதியனுப்பினாள். ஊர் திரும்புகிற வழியிலே ஞானாம் பாளுக்கு அம்மை கண்டது. அவள் இறந்துவிட்டதாக எண்ணிய பிரதாப முதலியாருக்கு, பின்னர் தான் அவள் உயிருடன் இருந்தது தெரிந்தது. "துக்கப்படுகிறவர்கள் முடிவில் சுகம் அடைவார்கள்" என்று தன் துயரத்தை முடித்துக் கொள்கிறார் பிரதாப முதலியார்.

"பல நாளாயின. பின், ஞானாம்பாள் ஆண் வேஷம் பூண்டு அரசாண்ட பாவனையாக இப்போது காட்ட வேண்டுமென்று ஞானாம்பாளை என் பாட்டியார் முதலானவர்கள் வேண்டினார்கள். ஞானாம்பாளுக்கு அவ்வளவு இஷ்ட மில்லாவிடிலும், பல பெயர்களு டைய நிர்ப்பந்தத்தினால் ஒரு நாள் ஞானாம்பாள் அரசனைப் போல வேஷம் பூண்டு கொண்டாள். சாக்ஷாத் இராஜ வடிவாகவே தோன்றின ஞானாம்பாளைப் பார்த்து எல்லோரும அதிசயித்துக் கொண்டிருக்கும்போது ஆனந்த வல்லி அகக் களிப்புடனே, 'என்னை வேண்டி நீங்கள் ஆணாகவே இருந்து விடுங்கள்' என்றாள். உடனே சம்பந்தி முதலியார் வந்து, மகளைப் பார்த்து, 'ஆம் அம்மா! ஆண் பிள்ளை இல்லையென்று உன் தாயாருக்கும் எனக்கும் உண் டாயிருக்கிற வருத்தம் தீரும் பொருட்டு நீ ஆணாகவே இருந்து விடு' என்றார். அப்போது நான் ஞானாம்பாளை நோக்கி, 'இவர் களுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டு என்னைத் தெருவில் விடாதே, ஞானாம்பாள்' என்றேன்".

இப்படி முடிகிறது வேதநாயகம் பிள்ளை எழுதிய "வசன காவியம்". எந்த மொழியிலுமே முதல் நாவல் என்கிற கிரந்தம் ஒரு நல்ல அர்த்தத்தில் தான்தோன்றியாகத் தான் இருக்க முடியும். இப்படித் தான்தோன்றியாக உலகில் பல பாஷைகளிலும் வந்து வழக் கிலுள்ள எந்த நாவலுக்கும் சளைத்த தல்ல பிரதாப முதலியார் சரித்திரம்.

கடைசியாக வேதநாயகம் பிள்ளையின் வசன நடையைப் பற்றி ஒரு வார்த்தை. கொடுத் திருக்கிற உதாரணங்களிலிருந்து அவர் கூடியவரையில் பேச்சு. நடையையே உபயோகிக்க முயன் றார் என்பதும், வசனம் என்றால் ஆயாசம் தராததாக இருக்க வேண்டும் என்ற கொள்கையுடை யவர் என்பதும் தெளிவாகி யிருக்கும் என்றே நம்புகிறேன். நாவலில் பல இடங்களில் அவர் நடையே அவர் விஷயத்துக்கு



அற்புதமான மெருகேற்றி இருக் கிறது என்று சொல்லவேண்டும். சில சமயங்களில் வார்த்தைகள் தங்கு தடையின்றி வராமல் தட்டுத்தடுமாறி வந்தாலும்கூட, அதுவும் பேசக் கற்றுக்கொள்ளும் ஒரு குழந்தையின் மழலைபோல இன்பம் தருவதாக இருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். தெளிவு தர மொழிவதில், வளமான வர்ணம் நிறைந்த பேச்சு வார்த்தை களை எழுத்தில், கலப்பதில் வேகம் கெடாமல் நடை பயிலுவதில், அழுத்தம் குன்றாமல் வாக்கியங் களைப் பிணைப்பதில் வேதநாயகம் பிள்ளை தமிழ் வசன நடையைச் சரியான பாதையில் நடக்க வைத் தார் என்று எனக்குத் தோன்றியது.

**-"முதல் ஐந்து தமிழ் நாவல்கள் - 1957"**

# சிறு தொழில்

# ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தின் முன்வடிவம்

ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தை வகுப்பதற்குத் தமிழ்நாடு மாநிலத் திட்டக்குழு ஒரு புதிய முறையைக் கையாண்டுள்ளது.

இந்தியப் பொருளாதாரத்தில் சிறிய தொழிற்சாலைகளின் பொருத்தத்தையும் தவிர்க்க முடியாத தன்மையையும் மிகைப்படுத்தி வலியுறுத்த இயலாது. நான் சிறுதொழில்களின் முக்கியமான பண்புகளை விரைவாக எடுத்துச் சொல்லிவிடுகிறேன். இவை பல்வேறு பணிக்குழுவின் ஆய்வுக்கான கருத்துக்களாக அமையும்.

இந்தத் துறைக்கான திட்டங்கள் யாவும் பல்வகை தொழில் வளர்ச்சி மற்றும் வருமான விநியோகத்தை வைத்துத் தீட்டப்பட்டவையாகும். பெருந்தொழில்கள் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தும். ஆனால் ஒரு குறிப்பிட்ட பொருளாதார வளர்ச்சி அளவில், சிறு தொழில்கள் பிரிவு வேலை வாய்ப்பை அதிகப்படுத்துவதோடு வருமான விநியோகத்தையும் பரவலாக்குகிறது. நம்மைப் போன்ற வளரும் நாட்டிற்கு இது மிகவும் பயனுள்ளதாக அமையும். நம் நாட்டின் சுதந்திரத்திற்குப்பின் நம் தொழில் கொள்கையைத் தயாரிப்பின்போது இதுவே முக்கியமானதாகக் கருதப்பட்டது.

எட்டு ஐந்தாண்டு திட்டங்களுக்குப்பின் இப்பொழுது நாம் தொழில் வளர்ச்சியில் கடந்த காலத்தின் செயல்பாடுகளை ஆராய்ந்து, எதிர் காலத்திற்குத் திட்டங்கள் தீட்டும் முக்கிய நேரத்தில் உள்ளோம். ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தின் அணுகுமுறை பத்திரம் தொழில் துறையில் தாராளமயமாக்கப்படும். வெளிநாட்டினரை நம் நாட்டில் தொழில் தொடங்க வழி வகுத்தமையால், மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

ஆகவே, பணிக்குழுக்கள் 2 அடிப்படை கருத்துக்களில் கவனம் செலுத்தலாம்.

1. இந்தப் பிரிவின் துணைக் கோட்பாடுகளின் வலிமை மற்றும் வலிமையின்மை என்ன; இதில் எவற்றையெல்லாம் பின்பற்றலாம், வலிமைப் படுத்தலாம் மற்றும் எவற்றைத் திருத்தியமைக்க வேண்டும்.
2. இந்தப் பிரிவில் புதிய கோட்பாடுகள் என்ன?

பணிக்குழுக்களால் கலந்தாலோசிக்கப் பின்வரும் குறிப்புகள் வழிவகை செய்யும்.

1. சில பொருட்கள் சிறுதொழில் பிரிவில் மட்டுமே பொருளாதார முன்னேற்றத்துடன் தயாரிக்க முடியும். இவை கண்டறியப்பட்டு, சிறுதொழில்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பொருட்களின் பட்டியலில் சேர்க்கப்படவேண்டும்.
2. சமீப காலமாகப் பல சிறு தொழில் பொருட்கள் பொருளாதார அளவைச் சுட்டிக் காட்டி, அவை தயாரிப்பதில் சிறு தொழில் பட்டியலிலிருந்து விலக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப் படுகிறது. பொருளாதார அளவை எட்டிப் பிடித்தாலும் சமூகத்தையும் நாம் பார்க்கவேண்டும். அதிக அளவு உற்பத்தியாகும்போது ஒரு பொருளின் விலை குறையலாம். ஆனால் உற்பத்தி செய்யும் விதம் இயந்திரமயமாக்கப்படும். ஆகையால் மனித வேலை வாய்ப்புக் குறையும். ஆகையால், வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என்ற சமூக கருத்தையும் மனதில் வைத்துக்கொண்டு தான் நாம் பொருளாதார வளர்ச்சி குறித்துப் பேச வேண்டும்.

**திருமதி ஓ.பி. சோசம்மா,** இ.ஆ.ப.

3. இதைப் போலவேதான் தொழில்நுட்பம் மேன்மைப்படுத்துபவையும். பொருட்கள் தயாரிப்பில் தொழில் நுட்பத்தின் யுக்தியைப் பயன்படுத்துவதில் கேள்விக்கே இடமில்லை என்றாலும், சிறுதொழில் பிரிவில் நம் முன்னேற்றக் கோட்பாடுகளினால் விளையும் பயனையும் மறந்துவிடக்கூடாது. பொருள் தொழில் நுட்பம் மேம்படுத்தப்படும்போது தேவைக்கேற்ற புதிய மேம் படுத்தப்பட்ட பொருட்கள் கிடைக்கப்பெறுகின்றன. செயல்முறை தொழில்நுட்பம், பொருட்கள் தயாரிக்கும் முறையை மேம்படுத்துகின்றது. பொருட்கள் தயாரிப்பை அதிகப்படுத்தும் செயல்முறை தொழில்நுட்பம் ஊக்குவிக்கப் படவேண்டும். அதே சமயம் முதலீடும், பணியாளர் அளவு ஆகியவை சிறுதொழில்கள் பிரிவுக்குள் வருமாறு அமைய வேண்டும்.

பொருள் தொழில்நுட்பம், சிறுதொழில் பிரிவில் தயாரிக்கும் பொருட்கள் தயாரிக்க ஊக்கு விக்கப்படவேண்டும். தொழில்நுட்ப மாறுதல் என்ற பெயரில் சிறுதொழில்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்கள், நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் எடுத்துக்கொள்ளக்கூடாது.

4. ஒன்பதாவது ஐந்தாண்டு திட்டத்தை வடிவமைக்கும் வேலையில் சிறுதொழில்களைக் கவனித்துக் கொள்ளும் அரசுத்துறை மற்றும் சார்ந்த துறைகளை எதிர்வரவிருக்கும் புதிய சவால்களைச் சமாளிக்கும் வகையில் திருந்தியமைக்கப்பட வேண்டும். இந்த அளவு நம் திட்டங்களாலும், கோட்பாடுகளினாலும் இந்தத் துறை வளர்ந்தபின், இதை ஒழுங்காகத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தாவிட்டால், இதற்கு மேல் வளர்ச்சியடைவதில் பயன் இல்லை. மூடப்பட்ட (தொழிற்கூடங்கள்) அலகு, நலிவடைந்த அலகு, அடைக்கப்படாத கடன், வழக்குகள், பலவகையான சரிசெய்யும் திட்டங்கள், கடன் அடைக்க திருத்தியமைக்கப்பட்ட திட்டங்கள், இவை எல்லாம் ஒரு கேள்வியை நினைவூட்டுகிறது. நாம் சரியான வழியைப், பின்பற்றுகிறோமா, பணிக்குழுக்கள் இதுகுறித்து, DIC, சிட்கோ, TIIC ஆகியவற்றின் பங்கேற்பாளர்களோடு கலந்து முடிவெடுக்க வேண்டுகிறேன்.

எந்த ஒரு தொழில் நடவடிக்கையென்றாலும் ஆராய்ச்சிப்பணிகள் மிக அவசியம். உலகில் முன்னேறிய மற்றும் முன்னேறும் நாடுகளுக்கிடையே உள்ள தொழில் பொருளாதாரக் கோடு ஆராய்ச்சியின் மூலம் வந்தவையேயாகும்.

இந்தப் பணி மிகப்பெரிய செலவினை ஏற்படுத்தும். இதனாலேயே வளரும் நாடுகளினால் இப்பணியை மேற்கொள்ள இயலவில்லை. பணிக்குழுக்கள் இது குறித்துப் பேசுகையில் பயிற்றுவிக்கும் நிறுவனங்கள் இப்பொறுப்பினை ஏற்றுக்கொள்ள இயலுமா என்று ஆலோசிக்க வேண்டும்.

தனிநபர் ஆராய்ச்சியாளர்கள் புதிய கண்டு பிடிப்புகள் நிகழ்த்தியிருந்தால், அதை அரசு நிறுவனங்கள் ஏற்றுக்கொண்டு அதைத் தொழில் நுட்பமாக ஏற்றுக் கொள்ளுமா? அப்படி என்றால் அதற்கான அடிப்படை சட்டம் என்ன? வழிகள் என்ன?

மேலும் பணிக்குழுக்கள் தொழில் தொடர்பு பேராசியர்களோடு கலந்து சிறுதொழில்களுக்கான ஒரு டேட்டா பேஸ் (Data Base )அமைத்தல், இன்டர்நெட் ஒரு புதிய சகாப்தத்தையே படைத்துவருகின்ற வேலையில் நம்மிடையே ஏதாவது டேட்டா தொழில்முனைவோர்கள் பயனடையும் விதத்தில் உள்ளதா? அரசு ஆண்டுதோறும் வெளியிடும் பெரிய அளவு புள்ளி விவரங்களிலிருந்து சிறு தொழில்களுக்குப் பயன்படும் புள்ளி விவரங்களைத்தனியாக எடுக்க முடியுமா? மக்கள் தொகை கணக்கெடுப்போடு இதையும் சேர்த்து எடுக்க முடியுமா? இந்தக் கேள்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

6. எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு முக்கியமான கேள்வி பணிக்குழுவுக்கு நம்முடைய முன்னேற்றத்



திட்டங்களில் பொதுவாகக் கடைபிடிக்கும் வழியிலிருந்து விலகி வேறு வழியைப் பின்பற்ற வேண்டுமா? தற்பொழுது நடைமுறையில் இருக்கும் பணிகள் மீது மட்டும் சிந்திக்கும் விதத்தைத்தடுக்க வேண்டும். சிறுதொழில்கள் தன்னைத் தானே சார்ந்திருக்க வழி உள்ளதா? தற்பொழுது நடைமுறையில் உள்ள கோட்பாடுகள் அவர்களை ஊக்குவித்து வருகின்றனவா? தாராளமயக் கொள்கை என்ற கொள்கை மூலம் ஏற்படும் வியாபார அதிர்வுகளிடமிருந்து காப்பாற்றும் பணி அரசினுடையது. எந்த ஒரு தாராளமயமாக்கப்பட்ட தொழிலும் சிறுதொழில்களுக்கு இணையாகாது. ★



# கலிபோர்னிய மலைகளில் உன் பிறந்தநாள்



குளிர்ந்த நீரில் உடைந்த நிலா
உச்சி முகட்டில் காட்டு வாத்தின் கூவல்
குளிர்காய ஒரு தீமூட்டம், அதன் புகை
வானத்தின் கோணங்களை நோக்கி எழும்
நீ இங்குமங்கும் நடப்பதை
தீ நாக்குகளின் இடைவெளியில் நான் காண்கிறேன்.
இரவினைப் போர்த்திய ஏரியின் கரையில்
மீன்கொத்தியின் கிறீச்சல்.
பனிக்காலத்தை வரவேற்கும் கார்காலத்தின்
அமைதியில் உலகின் மௌனம்!
இரவு விருந்துக்குக் கொத்து மீன்களுடன்
நான் தீமூட்ட ஒளிவட்டத்தில்,
காதோடு பேசும் ஏரியின் சிற்றலை
அருகே அமர்ந்து உண்கிறோம்.
நான் சொல்கிறேன், இன்னும் பல
வருடங்கள் இந்த இரவை
நினைத்து நினைத்து நாம் பேசப் போகிறோம்.
பல வருடங்கள் சென்றன...
இன்னும் பல வருடங்கள் செல்லப் போகின்றன.
அந்த இரவை நான் நினைவு கொள்கிறேன்,
நேற்றைய இரவைப் போல.
ஆனால் நீயோ....
மரித்து முப்பதாண்டுகள் ஆகிவிட்டன!

நன்றி: 'சுபமங்களா'

**ஆங்கிலம்:**
**கென்னத் ரெக்ஸ்ராத்**

**தமிழில்:**
**சீராளன்**

# வளர்ப்பு

- ம. ராஜேந்திரன்

கடற்கரை கிராமம் காயம்பட்டது. மணல் போர்வைகளை விலக்கி ராட்சச எந்திரங்கள் கிராமத்தின் ஆன்மாவைக் கிழித்துப் போட்டன.

பெரிய பெரிய தொட்டிகள். பெரிய பெரிய மிஷின்கள். சிமெண்ட், ஜல்லி, செங்கல் என்று லாரிகள் குவிந்தன. ஊரே கூடி கல்லறை கட்டிக்கொண்டிருந்தது.

சுற்றிலும் இறால் பண்ணைகள், குப்பானால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஒரு ஏக்கர் துண்டு நிலத்தில் ஒண்டுக்குடித்தனம் நடத்த வேண்டியதாயிற்று. விற்றுவிட்டு வெளியேற மனசில்லை. உணர்வுகள் நிலத்தோடும் ஊரோடும் கட்டிப்போட்டிருந்தன.

விவசாயம் போச்சு. சுற்றிலும் உப்பு நீர்த் தேக்கம், நிலத்தை அரித்தது. வயித்துப்பாடு பயமுறுத்தியது. ஆரம்பத்தில் எதிர்ப்புக் காட்டியவர்கள் கூட கொஞ்சம் கொஞ்சமாய் அடங்கிப் போனார்கள். குப்பானும் முடிவெடுத்துப் பண்ணைக்குப் போனான். பெரிய கேட் கம்பி வேலி. உள்ளே போகவே பயமாக இருந்தாலும் போனான்.

"ஐயா மொதலாளியைப் பார்க்கணும்".

குப்பான் திரும்பத் திரும்பச் சொன்னாலும் கூர்க்கா விடவில்லை. கை வைத்து வெளியே தள்ளிக்கொண்டு வந்தான். குப்பானுக்குத் தன் கிராமத்தில் தனக்கே இப்படி நிகழ்வதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

"யோவ், என்னய்யா நெனச்சிகிட்டிருக்கே? மொதலாளியைப் பார்க்கணும்னா... மேலே கைவெச்சுத் தள்றே".

கூர்க்காவுக்குத் தமிழ் தெரியாது. ஆனால் ஏதோ கோபமாகப் பேசுவதாக நினைத்துக்கொண்டு அவனும் கத்தினான். சத்தம் கேட்டுப் பண்ணையில் வேலை செய்கிற ஊர்க்காரர்கள் எட்டிப் பார்த்தனர். குப்பானுக்கு அவமானம் பிடுங்கித்தின்றது. நல்லவேளை, முதலாளி வெளியே வந்தார்.

"ஐயா மொதலாளி, ஒங்களத்தான் பார்க்கணும்".

குப்பான் அவரைப் பலமுறை வெளிநாட்டுக் கார்களில் வெளிநாட்டவர்களோடு பண்ணைக்கு வரும்போது ரெயில்வே கிராசிங்கில் பார்த்திருக்கிறான். இல்லையென்றாலும் அடையாளம் தெரிகிற தோற்றம். முதலாளி கையசைப்பில் கூர்க்கா பவ்யமாகக் குப்பானுக்கு வழிவிட்டான்.

"ஐயா, எனக்கும் பண்ணையிலே வேலை குடுங்கய்யா".

"ஏன் ஒனக்கு நெலம் இருக்கில்ல?"

"இருக்குய்யா. ஆனா இப்போ வெவசாயம் சரிப்பட்டு வல்லீங்க".

"சரிப்பட்டு வல்லன்னா குடுத்திட வேண்டியது தானே?"

"நெலத்தை விக்க மனசு வல்லீங்க".

"இங்கபாரு. ஒங்க ஊருகாரங்க எல்லாம் நெலத்தை வித்திருக்காங்கல்ல?"

"ஆமாங்கய்யா... இப்ப இறால் பண்ணைக்கே கூலியா வந்துட்டானுங்கய்யா?"

சொல்லிவிட்டுக் குப்பான் முதலாளியின் முகத்தைப் பார்த்தான். லேசாக முதலாளி சிரித்துக்கொண்டார். குப்பானுக்கு நம்பிக்கை துளிர்விட்டது.

"என்ன வேலை தெரியும்?"

"இதுவரைக்கும் வெவசாய வேலைதாங்க தெரியும்... ஐயா என்ன வேலை குடுத்தாலும் செய்றேங்கய்யா".

சிறிது நேரம் முதலாளி யோசித்தார்.

"டேய் கணேசா, அந்த சூப்பர்வைசர்கிட்டே அளைச்சிட்டுப் போ".

நன்றி உணர்வில் குப்பான் முதலாளிக்குக் கும்பிடு போட்டான். "வேலையிலே சுத்தமா இருக்கணும்?"

"சரிங்கய்யா".

"இது வெவசாய வேலை மாதிரி இல்லை. கைச்சுத்தம், வாய்ச்சுத்தம், மனசு சுத்தம் இருக்கணும்".

"சரிங்கய்யா".

"நான் ஏதோ தர்மஸ்தாபனம் வச்சிகிட்டு இல்லே, ஒளுங்கா வேலை செஞ்சா எனக்கும் காசு வரும், ஒனக்கும் கூலி வரும்".

"சரிங்கய்யா".

முதலாளி ஷெட்டுக்குள் போனார். கணேசன் குப்பானை அழைத்துக்கொண்டு போனான். கணேசன் தான் விபரம் தெரிந்தவன் என்பதைக் காட்ட சந்தர்ப்பம் தேடிக்கொண்டிருந்தான்.

"நில்லு...இந்த எடத்துக்கு மேலே உள்ள போவணும்னா மொதல்ல ஒன் கை கால் எல்லாத் தையும் இந்த மருந்துத் தண்ணியில களுவிக்க".

குப்பான் எதற்கு என்பதுபோல் பார்த்தான்.

"எறால்னா சும்மாவா? நீ எங்கெங்கேயோ சுத்திட்டு வந்திருப்ப. அதோட உள்ளப் போனா இறாலுக்குச் சீக்கு வந்திடாது?"

குப்பான் மௌனமாய்க் கால்கைகளை மருந்துத் தண்ணியில் கழுவிக்கொண்டு நடந்தான்.

வரிசை வரிசையாய்த் தொட்டிகள். தொட்டி களில் விதம் விதமாய்ப் பைப்புகள். அவன் ஏதோ அந்நிய தேசத்தில் நுழைந்ததாய் உணர்ந்தான். அங்கங்கே ட்யூப்கள் வலைகளாய்ப் பின்னிக் கிடந்தன.

"ஜாக்கிரதையா வா. எதையாவது மிதிச் சிட்டியோ அவ்வளவுதான்".

குப்பானுக்குப் பயத்தில் வியர்த்தது. ஒவ்வொரு தொட்டியையும் கடக்கும்போது எட்டிப் பார்த்தான். இறால் குஞ்சுகள் மயிரிழையாய், நூலாய், ஊசியாய், குச்சியாய்த் திரிந்தன. தொட்டிக்குள் அங்கங்கு குமிழ்கள், வேடிக்கை காட்டின.

"அது ஆக்ஸிஜன். அதான் உயிர்க்காத்து தண்ணீரிலே எறாலுக்கு உயிர்க்காத்து கொறஞ்சா என்னா ஆவும்? நீ ஆஸ்பத்திரியில பாத்திருக்கல்ல மூக்குல ட்யூப் வைப்பாங்களே அதே மாதிரிதான் இறால் மூச்சுவிட முடியாமத் திணறுச்சுனா-அதான் சிலிண்டர்ல உயிர்காத்தைக் கொண்டுவந்து ட்யூப்ல தொட்டிக்கு அனுப்புறாங்க".



கணேசன் பேசிக்கொண்டே நடந்தான். குப்பானுக்கு ஆச்சரியமாய் இருந்தது. வெளிநாட்டு ஆள் ஒரு தொட்டி அருகே கையிலே ஒரு மிஷினை வைத்துக்கொண்டு தொட்டி நீரில் ஒரு துளியை எடுத்து அதில் வைத்துக் கண்ணில் வைத்துப் பார்த்தான். குப்பான் வைத்த கண் எடுக்காமல் அதைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

"தொட்டித் தண்ணியிலே எவ்வளவு உப்பு இருக்குதுன்னு பார்க்கிறாரு. ஏன்னா உப்பு அளவு கூடினாலும் கொறஞ்சாலும் எறாலுக்குப் புடிக்காது. அதனால அதுக்கேத்தாப்புல கடல் தண்ணியையும் கிணத்துத்துத் தண்ணியையும் கலக்கணும். அதான்..."



மேலும் நடந்தனர். அங்கங்கே தொட்டிக்குள் ஏதோ பவுடரைத் தூவிக்கொண்டிருந்தார்கள்.

"அதான் எறாலுக்கு சாப்பாடு. மேல்நாட்லேருந்து வருது. டின்டின்னா இருக்கும். எறாலுக்கு ரொம்பப் புடிக்கும். நமக்குப் பிரியாணி மாதிரின்னு வச்சுக் கயேன்".

"ஆனா நமக்குப் பிரியாணி ஒரு வேளை ரெண்டு வேலைக்கு மேலே சாப்பிட முடியாதுல்ல?"

குப்பானுக்கு ஏதாவது சொல்லணும் என்று துடித்தது.

"அதேதான் எறாலுக்கும். அப்பப்ப நம்ம ஊருக் கடல் நண்டைப் புடிச்சி துண்டு துண்டா வெட்டிப் போடுவாங்க".

"அப்படியா?"

"ஆமா...இல்லாட்டி அதுக்கும் வெளிநாட்டுச் சாப்பாடு அலுத்துப் போவுமில்லே?".

ஒருவழியாய்த் தொட்டிகள் முடிந்தன. பக்கத்தில் டூரிங் சினிமாக் கொட்டகை மாதிரி தெரிந்தது. அதற்குள் செல்ல ஒரு சின்ன கேட் அங்கேயும் மருந்துத் தண்ணீர்.

"இங்கயும் ஒரு தபா கைகால் களுவிக்கணும். ஏன்னா உள்றதான் எறால் குஞ்சு பொறிக்கிற எடம். ரொம்பச் சுத்தமா இருக்கணும்".

கைகால்களைக் கழுவிக்கொண்டு கதவைத் தள்ளி உள்ளே நுழைந்தனர்.

"என்னங்க இப்படி சூடா இருக்கு, செங்கல் சூளையில நெருப்புவச்சிட்டு நிக்கிற மாதிரி?"

"ஆமா...பின்னே இருக்காதா? எறால் குஞ்சு பொறிக்க இந்தச் சூடு வேணும். சூடு கொறையாம வச்சிக்க சூடு மிசின் ஓடுது பார்த்தியா?"

"சூடு மிசினா?"

"ஆமா அதெல்லாம் வெளிநாட்டு மிஷின். ஒண்ணுக்கு ரெண்டு இருக்கு. ஒண்ணு கெட்டுப்போச்சுன்னா இன்னொண்ணு ஒடனே ஓடும்".

சூப்பர்வைசரைத் தேடிப்போனார்கள். அந்தச் சூட்டுக் கொட்டகையின் ஓரத்தில் ஒரு அறை. கதவுப்பக்கம் போனார்கள்.

''இது என்னாங்க இங்க குளிரடிக்குது?".

''இது குளிரு மிசின். வெளிநாட்டுக்காரங்க தங்கணும்னா நம்மூரு சூடு தாங்குமா! அதான்?".

"இங்க வெளிநாட்டுக்காரங்க தங்கியிருக்காங்களா?"

"அப்படி சொல்லு. எறால்னா என்னா குறுவை, சம்பா மாதிரி நட்டுவச்சிட்டுப் போற வெவசாயம்னு நெனைச்சியா? அதுக்கே இப்போ வெதை மருந்து உரம் எல்லாம் வெளிநாட்லேர்ந்துதான் வருது. தெரியுமில்லே?"

"ஆமாமா".

"அப்புறம் எறால் என்னா நம்ம சொல்றதைக் கேட்டுடுமா? இல்லை அது சொல்றதுதான் நமக்குப் புரியுமா?"

"அப்படியா?"

''ஆமா. அதுக்குன்னே படிச்சிட்டு வந்திருக்காங்க".

"நம்ம ஊரு எறாலைப் பத்தியா...?"

"ஆமான்னா...ஒவ்வொருத்தனுக்கும் என்னா

சம்பளம் தெரியுமா? ஆளுக்கு ரெண்டு லட்சம் மாசச் சம்பளம்.

"அடேங்கப்பா!..."

"வாயைப் பொளக்காத அவுங்க இல்லாட்டி நாம இல்லை".

கதவைத் திறந்து எட்டிப்பார்த்தார்கள். உள்ளே வெளிநாட்டுக்காரர்கள் சூப்பர்வைசருக்கு வேலை சொல்லிக் கொண்டிருந்தனர். இவர்களைப் பார்த்ததும் அவர்களிடம் சொல்லிக் கொண்டு சூப்பர்வைசர் வெளியில் வந்தார்.



"சார், மொதலாளி இவனை ஒங்ககிட்ட உட்டுட்டுப் போகச் சொன்னாரு. ஏதோ வேலை வேணும்னு வந்தாரு".

"ஒம் பேரு என்னா?"

"குப்பான்".

"என்ன வேலை தெரியும்?"

"வெவசாய வேலை பார்த்துகிட்டு இருந்தேன். இப்போ வேலை இல்லை. அதான்..."

குப்பானுக்கு முடிக்க முடியவில்லை.

"சரி, வா..."

சூப்பர்வைசரைப் பின் தொடர்ந்தான்.

"அதோ, அந்தத் தொட்டியிலிருந்து கழிவுநீர் போவுதுபாரு, அதுக்கு ஒரு சின்ன வாய்க்கால் வெட்டணும். ஆரம்பத்தில அந்தத் தண்ணிப்பட்டா கொஞ்சம் அரிக்கும், உடம்பு தடிக்கும். போவப் போவப் பளகிடும்.

"சரிங்க".

கழிவு நீர் வாய்க்காலை நோக்கி நடந்தனர்.

"ஏய், ஏய். பார்த்து. ஒரு இறால் என்ன வெலை தெரியுமா? ஆயிரம் ரூபா...ஜாக்கிரதை".

சூப்பர்வைசர் சத்தம் கேட்டு வேலை செய்தவர்கள் திடுக்கிட்டனர். வெளிநாட்டுக்காரர் மேற்பார்வையில் வேலை நடந்துகொண்டிருந்தது.

குப்பான் என்ன நடக்கிறது என்று எட்டிப் பார்த்தான்.

பெரிய பெரிய இறால்கள். தாய் இறால, கடலில் பிடிக்கப்பட்ட இறால்.

"பேய், பெண் இறால் எல்லாத்தையும தனியாப் பிரிச்சிட்டீங்களா?"

"தனியா இருக்கு பாருங்க சார்".

வெளிநாட்டுக்காரர் ஒவ்வொரு பெண் இறாலையும் பிடித்துத் தண்ணீருக்குள்ளேயே அது கண் இரண்டையும் எடுத்துக்கொண்டிருந்தார்.

வேலைக்காரர்கள் புரியாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். குப்பானுக்கும் புரியவில்லை. கணேசன் கேட்டான்;

"சூப்பர்வைசர் சார், இவரு எதுக்கு இதுங்கக் கண்ணை எடுக்குறாரு?"

"அதாண்டா வெளிநாட்டுக்காரன் மூளை. பெண் இறாலுக்குக் கண் இருந்துச்சுன்னு வச்சுக்க. ஆண் இறால் கிட்ட வந்தா பெண் இறால் ஓடும். நாம என்ன இதுங்க ஓடிப்புடிச்சி வெளையாடுறதுக்கா கோடிக்கணக்கா செலவுபண்ணிகிட்டு உக்காந்திருக்கோம். சீக்கிரமா சேர்ந்துச்சா குஞ்சு வந்துச்சா வளர்த்தமா வித்தமான்னு இருக்க வேணாம்?. இப்பப்பாரு இதுக்குக் கண்ணு தெரியாது. ஆண் இறால் வந்து சேந்திடும். ஆண் இறாலுக்கு அலைச்சல் இல்ல. இல்லாட்டி அலைச்சல்லேயே அது சக்தியெல்லாம் போயிடும். சக்தி இல்லேன்னா குஞ்சு எப்படி கெடைக்கும்?... வெளிநாட்டான் மூளைன்னா மூளைதாண்டா".

சொல்லிக்கொண்டே கழிவுநீர்ப்பகுதி நோக்கி சூப்பர்வைசர் நடந்தார். குப்பான் மண்வெட்டியுடன் நடந்தான். கழிவுநீர் ஓரத்தில் பசும்புல் தலை கருகிக்கிடந்தது.

திரு. ம. ராஜேந்திரன் அவர்களது
'வளர்ப்பு' சிறுகதை தொகுப்பிலிருந்து.
- வெளியீடு: ருத்ரா பதிப்பகம்
14-ஏ, முதல் தெரு,
அருளானந்த அம்மாள் நகர்,
தஞ்சாவூர் - 613 007.

# வாசகர் இதயம்

அரசு-அரசியல் இதழாக இருந்த இந்த இதழ் மருத்துவம், அறிவியல், கதை, கவிதை எல்லாம் உடையதாக மாற்றப்பெற்றிருப்பது மகிழ்ச்சிகரமான விஷயம். பாராட்டுக்கள்.

- கே.கோட்டீஸ்வரன்
தக்களூர்.

'தெளிவு' சிறுகதை, போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்ற கருத்தைச் சிந்திக்கத் தூண்டும் வகையில் சிறப்பாக இருந்தது.

- டி.செல்வன்
நெல்லையப்பபுரம்.

தமிழ் இலக்கியங்களின் சிறப்பும், உயிர்ப்பும் மிக எளிமைப்படுத்தப்பட்டிருக்கிறது 'தமிழரசில்'. வளர்க; வாழ்க.

-ம.நாராயணன்
வேலூர்-9.

ஆளும் கட்சியினர்க்கு மட்டுமே உதவும் என்ற நிலை மாற்றித் 'தமிழரசை' எல்லா வாசகர்களும் போற்றும் புதையலாக்கிவிட்டீர்கள். போற்றுகிறோம்.

- முருகேசன்
மூலக்கரை.

தாய்மார்களுக்கு மட்டுமல்ல; தந்தைமார்களுக்கும் ஏற்ற ஆலோசனைகளை வழங்கியது 'பிள்ளைப்பேறு' மருத்துவக் கட்டுரை.

- சிவா.பாலாஜி
மயிலாடுதுறை.

(இவ்வாறு பலகடிதங்கள் வந்துள்ளன)

தேர்வு நேரத்தில் மாணவ-மாணவியருக்கு மிக நல்ல யோசனைகளைத் தெரிவித்தமைக்கு நன்றி.

-கே.ஆர்.உதயகுமார்,
சென்னை-1.

(இதேபோல் பலரும் எழுதியுள்ளனர்)

அட்டையிலிருந்த வேடந்தாங்கல் பறவைகள் மட்டுமல்ல, உள்ளே காணப்பட்ட திரு.வி.க.மணி மொழிகளும் பெரும் மகிழ்வளித்தன.

-ரா.ராகவன்
ஸ்ரீரங்கம்.

'வாழ்வுக்குத் தமிழ், வசதிக்கு ஆங்கிலம்' என்ற கலைஞரின் உரைவீச்சு, தமிழின் முதன்மைக்கு அறிகுறி.

-வைரி.தரளம்
வை.செ.பாளையம்

இதழுக்கு இதழ் 'தமிழரசு' ஜொலிப்படைகிறது.

-தமிழ்ப்பரிதி,
நெல்லிக்குப்பம்.

சட்டமன்றத்தில் முதல்வர் கலைஞர் பதில் உரை இணைப்பு இதயம் தொடுவதாக இருந்தது.

-எஸ்.பி.வேலுசாமி
கே.பி.சத்திரம்.

'பெரியாரின் விருந்தோம்பல் துணுக்கு, பெரியோர் என்றும் பெரியோரே என்பதைத் தெளிவுபடுத்தியது.

-கே.ஜே.நாதன்,
சேலம்-15.

கலீல் கிப்ரானின் 'மணலும் நுரையும்' கவிதை அருமையிலும் அருமை.

-எஸ்.பாஸ்கரன்,
கூகுடி.

எங்களைப் போன்ற இளைஞர்கள் முன்னேற வழிகாட்டுவதாக-அறிவுக் கண் திறக்கும் திறவு கோலாகத் 'தமிழரசு' திகழ்கிறது.

-தி.சே.அறிவழகன்,
திருப்புலிவனம்.

அரசு நிதிநிலை அறிக்கையைத் தனியே எடுக்கும் வகையில் செய்திருந்தீர்கள், எடுத்துப் பாதுகாத்துவிட்டேன்.

-தமிழ்ப்பரிதி,
நெல்லிக்குப்பம்.

# காலமெல்லாம் காளான் வாழ்க!

"நேற்றுப் பெய்த மழையில் இன்று முளைத்த காளான் நீ" என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். இப்படி யாரைப் பார்த்துச் சொல்வது வழக்கம் என்று கேட்டால்? எந்த அனுபவமும் இல்லாத, எந்த விபரமும் இல்லாத, குறிப்பாக எதற்கும் பயன்படாத ஒரு அப்பாவியை பார்த்துத்தான் இப்படி சொல்வார்கள். எதற்கும் பயன்படாத ஒருவரை காளானுக்கு ஒப்பிட்ட காலம் மாறி, காளானுக்குப் புது மவுசும், முக்கியத்துவமும் பெருகி, மக்களிடையே சமீபகாலமாகச் சிறந்த உணவு வகையாக கருதப்படுகிறது. இந்தக் காளான் வகைகள்.

காளான் வகைகளில் உண்ணும் காளான்களில் மட்டும் சுமார் இரண்டாயிரம் வகைகள் இருக்கின்றன என்றால் ஆச்சரியமாக இல்லை? எனினும் இவைகளில் சுமார் இருபது வகை காளான்கள் மட்டுமே செயற்கையாக வளர்க்க ஏற்றது. இதிலும் முக்கிய மூன்றுவகை காளான்களையே வியாபார ரீதியாக உற்பத்தி செய்யப்படுகின்றன.

காளான் அதிகப்படியான புரதச்சத்து, உயிர்ச்சத்து அதாவது வைட்டமின்கள் மற்றும் தாதுப்பொருள்கள் நிரம்பிய முழு உணவு என்று சொல்லலாம். காளானில் புரதச்சத்து 2.9 சதம் உள்ளது.

இது மற்ற பழவகைகளையும், காய்கறிகளையும் ஒப்பிடும்போது கூடுதலான புரதச்சத்து என்று தெரிந்துகொள்ளலாம். உதாரணமாக ஆப்பிள் பழத்தை எடுத்துக்கொண்டால் அதில் 0.3 சதம் தான் புர்தச்சத்து உள்ளது. முட்டைக்கோசை எடுத்துக்கொண்டால் 1.5 சதம் தான் புரதம் உள்ளது.

காளானில் புரதத்துடன், நம் உடல் ஆரோக்கியத் திற்குத் தேவையான அமினோ அமிலங்கள், வைட்டமின் பி, சி, டி மற்றும் கே.யும், தாது உப்புகளான பாஸ்பரஸ், பொட்டாசியம், மற்றும் நார்ப்பொருள்களும் மிகுதியாக உள்ளன.

காளானில் கொழுப்புச்சத்தே இல்லை என்று சொல்லலாம். எனவே காளான் உணவு எளிதில் சீரணிக்கக் கூடியது. மாவுப்பொருள் காளானில் மிகக் குறைந்த அளவே உள்ளது. எனவே சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை அனைத்து வயது மக்களும் தாராளமாக உட்கொள்ளலாம்.

காளான்களில் உள்ள சத்து சிறப்புக்களையும், கொழுப்பு மற்றும் மாவுப்பொருள் அற்ற தன்மையையும் கருத்தில் கொண்டு, இரத்தக் கொழுப்பு, நீரிழிவு மற்றும் வயிற்றுப்புண் உள்ளவர்களுக்குக் கூட மருத்துவர்களால் காளான் உணவு சிபாரிசு செய்யப்படுகிறது.

வியாபார ரீதியாக செயற்கையாக மூன்று வகைக் காளான்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. 1. குடைக்காளான்,2. சிப்பிக்காளான்,3. மொட்டுக் காளான். இந்த மூன்று வகைகளில் கூட சிப்பிக்காளானும், மொட்டுக் காளானும்தான் நம் மாநிலத்தில் பிரபலமானது. இதிலும் சிப்பிக்காளான் எளிதில் செயற்கையாக உற்பத்தி செய்யலாம் என்பதாலும், உற்பத்தி செய்யும் செலவும் மொட்டு இரகத்தை காட்டிலும் சற்றுக் குறைவு என்பதாலும் அதிக பிரபலமாக உள்ளது என்று சொல்லலாம்.

சிப்பிக்காளான் வளர்ப்பு முறைகளைப் பற்றி சற்று விரிவாக, தெரிந்து கொள்வது அவசியம்.

சிப்பிக்காளான் வளர்க்கத் தேவையான முக்கிய மூலப்பொருள்கள் மூன்று. ஒன்று வைக்கோல், இரண்டாவது காளான் வித்துக் குடுவைகள், மூன்றாவது பாலித்தீன் பைகள். தேவைப்படும் மற்ற பொருட்களை வீட்டில்/பண்ணைகளில் உள்ளவைகளைக் கொண்டே பயன்படுத்திக் கொள்ளலாம்.

**வைக்கோல்**

வைக்கோல் எடுத்துக்கொண்டால் இரண்டு அடி நீளமும், ஒரு அடி அகலமும் கொண்ட (60 செ.மீ. 30 செ.மீ., ஒரு பாலித்தின் பையில் நிரப்பும் அளவுக்கு சுமார் 500 கிராம் வைக்கோல் தேவைப்படும். வைக்கோலை சுமார் 5 செ.மீ.நீளத்திற்குச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி சுமார் 6 முதல் 8 மணி நேரம் தண்ணீர் நன்கு ஊறவைக்கவேண்டும். அதன்பின் இதனை நன்கு கொதித்த சுடுநீரில் சுமார் அரை மணி நேரம் மீண்டும் ஊறவைத்து, நீரை வடித்து ஈரம் போகும்வரை காயவைக்க வேண்டும். இதை ஒரு வகையான சுத்திகரிப்பு முறை (Sterlising) என்று சொல்லலாம். இப்படிச் செய்வதால் வைக்கோல் சுத்திகரிக்கப்பட்டு, இதன்மூலம் ஆரோக்கியமான நோயற்ற காளான் தயார் செய்யமுடியும்.

### காளான் வித்து

காளான் வித்துக்கள் குடுவைகளில் அடைக்கப்பட்டு விற்கப்படுகின்றன. கோவை, மதுரை வேளாண் கல்லூரிகளில் முக்கியமாக விற்கப்படுகின்றன. ஒரு காளான் வித்து குடுவை சுமார் ரூ.10/-க்குக் கிடைக்கும். இந்தக்காளான் வித்துக் குடுவைகளை வாங்கிய சுமார் 10 தினங்களுக்குள் பயன்படுத்திவிட வேண்டும். காளான் வித்து குடுவைகளை குளிர்ந்த இடத்தில் இருப்பு வைக்க வேண்டும். வெயில்பட்டு காய்ந்து, உயிர்வித்து செயலற்ற நிலைக்குப் போகாவண்ணம் பாதுகாக்க வேண்டும்.

### பாலித்தின் பைகள்

பாலித்தின் பைகள் வாங்கும்போது 80 காஜ் திறன்கொண்ட 60 செ.மீ.நீளமும், 30 செ.மீ. அகலமும் கொண்ட பைகள் வாங்கவேண்டும். பாலித்தின் பைகளின் நடுவில் ஒரு செ.மீ. அளவில் இருதுவாரங்கள் செய்து அடிப்பகுதியைச் சுருக்கி நூலால்கட்டி அல்லது நெருப்பிலிட்டு இளக்கியோ வட்டமான அடித்தளமுள்ள பைகளாக உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

### தேவையான தட்பவெப்பநிலை

காளான் வளர்ப்பிற்கு சரியான தட்பவெப்பநிலை மிகமிக அவசியம். செயற்கையான காளான் வளர்க்கும் அரைக்குள் சுமார் 24$^{\circ}$ - 26$^{\circ}$சி வெப்பநிலையும், 85 முதல் 95 சதம் ஈரப்பதமும் இருக்கும்படி செய்தால், காளான் நல்லமுறையில் வளரும். தரமும் சிறந்ததாக இருக்கும். இந்த சாதகமான சூழ்நிலையைக் காளான் வளர்ப்பு அறையில் ஏற்படுத்த, தரையில் ஆற்று மணலை நன்கு பரப்பி அதில் அடிக்கடி நீர் தெளித்து ஈரமாக்கிக் கொண்டேயிருக்க வேண்டும். இதேபோல், காளான் வளர்ப்பு அறையைச் சுற்றிலும், சாக்குகள் தொங்கவிட்டு, அதிலும் நீர் தெளித்து சாக்குகளை ஈரமாக்கி, அறையின் வெப்பத்தைக் குறைத்து, ஈரப்பதத்தை அதிகப்படுத்த வேண்டும். இப்படி செய்வதன் மூலம், செயற்கை முறையில் வளர்க்கப்படும் காளான்கள் நன்கு வளர்ந்து எதிர்பார்க்கும் மகசூலைக் கொடுக்கும்.



### அடுக்குத் தட்டுகள்:

காளான் வளர்ப்பு அறையில் மேற்சொன்ன சூழ்நிலையை உருவாக்குவதுடன், காளான் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படும் வைக்கோல் அடைக்கப்பட்ட வட்ட வடிவாக்கப்பட்ட பாலித்தின் பைகளை அடுக்கிவைக்க அறையின் சுவர் ஓரங்களில் அடுக்கு தட்டுகள் - அதாவது ராக்குகள் அமைப்பது அவசியம். இந்த ராக்குகளில் வைக்கோல் அடைக்கப்பட்ட வட்ட வடிவான பாலித்தின் பைகளை அடுக்கிவைக்க வசதியாக இருக்கும். அடுக்குகளில் தேதி விவரம் எழுதி, தேதிவாரியாக, பாலித்தின் பைகளை அடுக்கலாம்.

### செய்முறை

வட்ட வடிவாக்கப்பட்ட பாலித்தின் பைகளில் 5 செ.மீ. உயரத்திற்கு, மேற்சொன்ன அளவில் சிறிதாக நொறுக்கப்பட்ட, சுத்தப்படுத்தப்பட்ட வைக்கோலை போடவேண்டும். பிறகு காளான் வித்துக் குடுவையிலிருக்கும் காளான் வித்துக்களைத் தனியாக எடுத்து, மூன்றில் ஒரு பங்கைப் பிரித்து எடுத்து, இதை மீண்டும் நான்கு சமபாகமாகப் பிரித்து, ஒரு பாகத்தை, பாலித்தின் பையில் முதலில் 5 செ.மீ.உயரத்திற்குப் போடப்பட்டுள்ள வைக்கோல் மீது சமமாக மேலாகப் பரப்பவேண்டும். பிறகு மீண்டும் 5 செ.மீ. உயரத்திற்கு வைக்கோல் போட்டு, காளான் விதையைப் பரப்பவேண்டும். இதுபோல், நான்கு அடுக்குகளில் வைக்கோலையும், காளான் வித்துக்களையும் மாற்றி மாற்றி பரப்பி,

பாலித்தின் பையின் வாய்ப்பகுதியைக் கெட்டியான நூல் கொண்டு கட்டிவிடவேண்டும். இதுவரை காளான் வித்து பாட்டிலில் இருந்து எடுக்கப்பட்ட மூன்றில் ஒரு பங்கு காளான் வித்தைத்தான் ஒரு பாலித்தின் பையில் 4 அடுக்குகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள இரண்டு பங்கு காளான் வித்துக்களை அடுத்து இரண்டு பாலித்தின் பைகளில், வைக்கோலுடன் சேர்த்து முன்பு சொன்னதுபோல் அடுக்குகளாக நிரப்பலாம். ஆக ஒரு காளான் குடுவையில் உள்ள வித்தை மூன்று பாலித்தின் பைகளுக்குப் பயன்படுத்தலாம். இதேபோல் பல வித்துக் குடுவைகளை வாங்கி தேவையான அளவு காளான் உருளைகள் தயார்செய்யலாம்.

இவ்வாறு தயார்செய்த காளான் வித்திட்ட பாலித்தின் பைகளைக் காளான் அறையில் அமைக்கப்பட்டுள்ள ராக்குகளில் வரிசையாக-தேதிவாரியாக அடுக்கி வைக்க வேண்டும்.

வித்திட்ட சுமார் 20 நாட்கள் கழித்து பார்த்தபின், காளான் வெண்மையாக வளர்ந்திருப்பது பாலித்தின் பை வழியாக தெரியும். இந்த நிலையில் பாலித்தின் பைகளை கிழித்து அகற்றிவிட வேண்டும். காளான் வளர்ந்த வைக்கோல் உருளைகளைக் காயவிடாது அவ்வப்போது, குறிப்பாக - காலை மாலை வேளைகளில் சிறிது நீர் தெளித்து ஈரப்படுத்த வேண்டும். காளான் அறையில் சுற்றித் தொங்கவிட்டுள்ள சாக்குகளையும் அவ்வப்போது நீர் ஊற்றி ஈரமாக்கிக்கொண்டேயிருக்க வேண்டும். தரையில் பரப்பப்பட்ட மணலிலும் நீர் தெளித்து ஈரப்பதமாகத் தொடர்ந்து வைத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு காளான் அறையில் உள்ள காற்றின் ஈரப்பதத்தையும், வெப்பத்தையும் சீர் செய்வது தொடர்கையில், 4 அல்லது 5 தினங்கள் கழித்து பார்த்தால், அதாவது வித்திட்ட 24 அல்லது 25வது தினத்தில் வைக்கோல் உருளைகளில் காளான் சிறுசிறு முளைகளாகத் தோன்றி சிப்பி போன்ற வடிவத்தை முழுவளர்ச்சி அடையும்போது பெறும்.

ஒரு காளான் உருளையிலிருந்து முதல் தடவை சுமார் 150 முதல் 200 கிராம் வரை முழுவளர்ச்சியடைந்த காளான் அறுவடை செய்யலாம். முதல் அறுவடை முடிந்ததும், காளான் உருளைகளின் மேல் பாகத்தை, சற்று லேசாக சுமார் 1 செ.மீ. அளவிற்கு சுரண்டிவிட்டு, மீண்டும் மேற்கூறிய வழிகளில் நீர் தெளித்து காளான் அறையில் காற்றின் ஈரப்பதத்தையும், வெப்பத்தையும்



சீர் செய்து இரண்டாம் முறையாக ஒருவாரம் கழித்து சுமார் 100 கிராம் காளான் அறுவடை செய்யலாம். இதுபோல் வாரம் ஒரு முறையாக 3 அல்லது 4 தடவை காளான் அறுவடை செய்யலாம். இப்படியாக ஒரு காளான் உருளையில் மொத்தம் சுமார் 400 கிராம் வரை காளான் அறுவடை செய்யலாம்.

காளான் உற்பத்தி செய்து, அதை வியாபார ரீதியாக விற்பதில் உள்ள முக்கியப் பிரச்சினை என்னவென்றால், காளான் அறுவடை செய்த சுமார் 16 மணி நேரத்திற்குள் பயன்படுத்தி விடவேண்டும். அதாவது சமைத்துவிடவேண்டும். அப்படி செய்யவிட்டால் காளான் கெட்டுவிடும். ஒருவிதமான மஞ்சள் கலந்த பழுப்பு நிறமாக மாறிவிடும். காளானைத் தொட்டுப்பார்த்தால் மேல்பாகம் பிசுபிசுப்பாக இருக்கும். நீர்விட்டுவிடும். காளான் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொள்ளும். அழுகிய வாசனையும் வரும். இந்நிலையில் இந்த காளான்களை உணவுக்கு பயன்படுத்தக்கூடாது. ஆனால் முறையாக - குளிர்சாதன அறைகளில் பாதுகாக்கப்பட்ட காளான்களை 6 மாதம் வரை கெடாமல் பாதுகாக்கலாம்.

ஒரு கிலோ காளான் உற்பத்தி செய்ய சுமார் ரூ.15 முதல் ரூ.20 வரை செலவாகும். சாதாரணமாக ஒரு கிலோ காளான் 30 முதல் 50 ரூபாய் வரை விலைபோகும்.

**காளான் உற்பத்தி செய்ய தமிழ்நாட்டில் தேவையான இயற்கைச் சூழ்நிலையும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் காளான் சேவையும் இருந்தும், கோவை, ஈரோடு இந்த இரண்டு மாவட்டங்களில்தான் காளான் வளர்ப்பு வியாபார ரீதியாகச் சில பகுதிகளில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களில் காளான் வளர்ப்பு மிகுதியாக இல்லை.**

காளான் உற்பத்தியில் ஏன் இன்னும் பின்தங்கிய நிலை ?

காளான் உற்பத்தி பெருகவேண்டும் என்றால், மக்களின் உணவுப் பழக்கத்தில் உடனடி மாற்றம் ஏற்படவேண்டும். அடிக்கடி காளான் உணவு சமைத்துச் சாப்பிடும் பழக்கம் நம்மில் வளர்ந்ததால்தான், காளான் உற்பத்தியை அதிகரிக்க அரசு மேல்நடவடிக்கை எடுக்கமுடியும். வருடத்திற்கு ஒருமுறை கூட காளான் உணவு சாப்பிடாத மக்கள், குடும்பங்கள் உள்ளன என்று சொல்லலாம். ஏன் பிறந்ததிலிருந்து இன்னும் ஒரு தடவைகூட காளான் உணவை சுவைக்காதவர்கள் நம்மில் எத்தனையோ பேர்கள் இருப்பார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

கடந்த காலங்களை ஒப்பிடும்போது, தற்போது காளான் பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே சற்று அதிகரித்திருக்கிறது என்று சொல்லலாம். இப்போதும் கூட காளான் உணவு நட்சத்திர ஓட்டல்களிலும், ஒரு சில வசதியற்ற குடும்பங் களிலும் மட்டும் ஒரு மாறுதலுக்காகவும், நாகரீகம் என்ற பெயரில்தான் உட் கொள்ளப்படுகிறதே தவிர, காளான் பற்றி அனைத்து முக்கியத்துவங்களையும் தெரிந்து உட் கொள்ளு வதாகத் தெரியவில்லை.

தற்போது நாம் கத்தரிக்காய், முருங்கைக்காய் போன்ற காய்கறிகளைப் பெரும்பாலும் தினமுமே பயன்படுத்துவதுபோல், காளான் உணவும் நாம் அடிக்கடி சேர்த்துக்கொள்ளும் பழக்கத்திற்கு நாம் நம்மை மாற்றிக்கொள்ள வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட கிராமத்திலோ ஒரு தெருவிலோ, பல குடும்பங்கள் உள்ள அடுக்குமாடி கட்டிடங்களிலோ, பாதிக்குப்பாதி வீடுகளில் இன்று கத்தரிக்காய் சாம்பார் அல்லது வெண்டைக்காய் பொரியல் என்று சொல்லிவிடலாம். இதுபோல் இன்று இந்த ஊரில், அல்லது ஒரு தெருவில் அல்லது இந்த அடுக்குமாடி கட்டிடத்தில் நிச்சயம் இரண்டு வீடுகளில் காளான் உணவு இன்று சமைத்திருப்பார்கள் என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது.

மற்ற காய்கறிகள் போல் காளான் உணவும் நம் குடும்பத்தில் அதிகம் இடம்பெறவேண்டும். அப்போதுதான் காளான் உற்பத்தி பெருகும்.

மேலும் காளான் என்றால் வசதியில்லாத ஏழைகள் சாப்பிடும் ஒரு பதார்த்தம் என்ற எண்ணம் மக்களிடையே இருப்பது மாறவேண்டும்.

காளான் உணவு ஒரு அசைவ உணவு என்ற எண்ணமும் நம்மில் சிலரிடம் உள்ளது. இது மிகவும் வருந்தத்தக்கது. இந்த மனப்பான்மையும் மாறவேண்டும்.

இப்படிப்பட்ட மனமாற்றங்கள் தோன்றி, காளான் உணவின் முக்கியவத்துவத்தையும், சத்து விவரங்களையும், உடல்நலத்திற்கேற்றது என்ற உணர்வும் இருந்தால் ஒழிய காளான் உற்பத்தியில் வெற்றி காண்பது சிரமம்.

மேலை நாடுகளில் காளான் வளத்தைப் புரிந்து, காளான் உணவை ஒரு முக்கிய உணவாகப் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பயன்படுத்தி வருகிறார்கள். அந்த நிலை நமக்கும் வரவேண்டும்.

காளான் உற்பத்தி செய்ய, தமிழ்நாட்டில் தேவையான இயற்கை சூழ்நிலையும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் காளான் சேவையும் இருந்தும், கோவை, ஈரோடு இந்த இரண்டு மாவட்டங்களில்தான் காளான் வளர்ப்பு வியாபார ரீதியாகச் சில பகுதிகளில் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது. மற்ற மாவட்டங்களில் காளான் வளர்ப்பு மிகுதியாக இல்லை.

காளான் உற்பத்தியைப் பெருக்குவோம், காளான் உணவை விரும்பிச் சமைப்போம்.

- கூடுதல் இயக்குநர், வேளாண்துறை.

★



# உயிர் திரவம் இரத்தம்

டாக்டர் சு.கணேசன்

டாக்டர் கி.சுவாமிநாதன்

ஒவ்வொரு ஜீவராசிக்கும் உயிர் முக்கியம்; அசையாதவற்றுக்குத் தண்ணீர் போதும்; நடமாடும் ஜீவராசிகளுக்கோ அதே போல் உயிர்வாழ இரத்தம் முக்கியம்!

ஆனால் – மனித இரத்தத்திற்குத் தனி மகத்துவம் உண்டு. இந்த இரத்தம்தான் நம் இதயத்திலிருந்து- அடி முதல் நுனி வரையிலான அங்கங்களுக்கெல்லாம் ஒரே நேரத்தில்- ஒரே சீராகப் பயணம் தொடங்கி, தேவையான சத்துப் பொருட்களை வழங்கி நாம் உயிர் வாழச் செய்கிறது.

நம்மை உயிர் வாழச் செய்யும் இந்த இரத்தத்தின் சக்தியே அலாதியானதாகும். எனவே இதை உயிரின் உயிர் என்றே போற்றலாம்!

சிவப்பு நிறங்கொண்ட இந்த அதிசயத் திரவத்தில், நம் கண்ணுக்குப் புலப்படாத பல்வேறு அணுக்கள் உள்ளன. குளுகோஸ் பொன்றவை கலந்த தண்ணீர்- அதாவது திரவமாகிய பிளாஸ்மா (Plasma), இரத்தத்திற்குச் சிவப்பு நிறமேற்றும் சிவப்பு அணுக்கள் (Red Blood Corpuscles), நோய்க் கிருமிகளை எதிர்த்துப் போராடும் சக்திமிக்க வெள்ளை அணுக்கள் (White Blood Corpuscles), இவை தவிர நுண்அணுக்கள் (Platelets), வேறு சில புரதங்கள் (Protiens) இரத்த உரைதலுக்குத் தேவையான பொருட்கள் (Clotting Factors) ஆகிய யாவும் அடங்கியதே நமது இரத்தம்.

### முக்கியப் பணிகள்

மனித உடலைப் பொறுத்தவரை இரத்தத்தின் முக்கியப் பணிகள் என்னென்ன தெரியுமா?

நம் உடலின் எலும்புக் கூட்டைப் போர்வைபோல் மூடியுள்ள பலவகைத் தசைகள் உயிரோடிருக்கப் போதுமான பிராண வாயுவை (Oxygen) இரத்தமே கொண்டு செல்கிறது. இரத்தம் இந்த வேலையைக் குறைவின்றிச் செய்திடச் சிவப்பு அணுக்களில் உள்ள இமோகுளோபின் (Hemoglobin) என்ற முக்கியப் பொருளே பெரிதும் உதவுகிறது.

நமது உடல்நலத்தைக் கெடுக்கின்ற பலவகைக் கிருமிகளை எதிர்த்துத் தாக்கி அழிக்கும் பணியை வெள்ளை அணுக்கள் தாம் செய்கின்றன. நம் இரத்தில் உள்ள இதில்- நியுட்ரோபில், ஈசனோபில், லிம்பொசைட் போன்றவை கலந்துள்ளன.

இவையெல்லாமே நோய்க் கிருமிகள் தாக்குதலில் இருந்து நம் உடலை- உயிரைக் காக்கின்றன.

### இரத்த ஓட்டம்

உறுப்புகளுக்குத் தேவையான பிராண வாயுவைக் (Oxygen) கொடுத்தபின்பு இரத்தம் அசுத்தமாகி விடுகிறது. பின்பு அது இரத்த நாளம் (Vein) மூலமாக இதயத்தைச் சென்றடைகிறது. கைகளை இறுக்கி மூடினால் இரத்த நாளம் நன்றாகத் தெரிவதைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா?

அதுவே 'வெய்ன்' எனப்படும். நுரையீரல் இருதயத்திலிருந்து அசுத்த இரத்தத்தைச் சுத்தப்படுத்தி 'ஆர்ட்டரி' என்ற நாளத்தின் மூலம் உடலின் அனைத்துப் பகுதிகளுக்கும்

அனுப்பும் நம் உடலில் 5 - 6 லிட்டர் இரத்தம் உள்ளது.

### இரத்த தானம்

இந்த இரத்தமானது, கருவில் குழந்தை இருக்கும் போதே உற்பத்தியாகத் தொடங்கி விடுகிறது. 6 மாத வளர்ச்சிக்குப் பிறகுதான் கல்லீரல், மண்ணீரல் ஆகியவற்றிலும், அதன்பின் தொடை எலும்பு போன்றவற்றின் உட்பகுதியான மஜ்ஜையிலிருந்தும் (BoneMarrow) உற்பத்தியாகிறது.

எப்போதாவது இரத்ததானம் கொடுத்திருக்கிறீர்களா? இரத்ததானம் பற்றி இப்போது நிறைய தவறான கருத்துக்கள் உள்ளன. அவற்றுள் சில-இரத்தம் கொடுப்பதால் உடல் இளைத்துவிடும் என்றும் உயிருக்கு ஆபத்து என்பதுமாகும். முன்சொன்னதைப்போல் இரத்தம் எப்போதும் எலும்பிலிருந்து (மஜ்ஜை) ஊற்றுப்போல் ஊறிக்கொண்டே இருக்கும்.

அதனால் இரத்தம் கொடுத்த சில நாட்களுக்குள் கொடுத்த அளவு இரத்தம் எலும்பிலிருந்து ஊறிவிடும். மேலும் $5^1/_2$ லிட்டர் இரத்திலிருந்து எடுப்பதோ 300-350 மில்லிதான். இது எப்படிஎன்றால், நிறைய நீர் ஊறும் கிணற்றிலிருந்து ஒரு வாளி தண்ணீர் எடுப்பதுபோலாகும். எனவே நண்பர்களே! இரத்தம் கொடுப்பதால் உடலுக்கு எந்த ஆபத்தும் இல்லை. ஓர் உயிரைக் காப்பாற்றிய



புண்ணியம் உங்களை வந்து சேரும். இவையன்றி இரத்ததானம் கொடுக்கும்போது இரத்த அழுத்தம், மலேரியா, மஞ்சள் காமாலை, எய்ட்ஸ் முதலியன இருக்கிறதா என்று இரத்தம் கொடுப்பவருக்குப் பரிசோதனை பண்ணப்படுகிறது. இதன் மூலம் நமக்கு அந்த நோய்கள் உள்ளதா என்பதையும் நாம் தெரிந்துகொள்ளலாம்.

இரத்தச் சிவப்பணு வட்ட வடிவில் இருக்கும், இதன் வாழ் நாள் 120 நாட்களே, பிறகு அவை அழிகிறபோதே வேறு சிவப்பணுக்கள் உண்டாகும்.

ஆனால், வெள்ளையணுக்களோ, பகை வரும்போது படை எழுவதுபோல ஏதாவது நோய்க்கிருமி இரத்தத்தில் ஊடுருவுகிற போது வரும். அந்தக் கிருமிகளை அழிக்கிற தமது வேலை முடிந்தவுடன் விலகிக்கொள்ளும்.

### இரத்த 'குருப்பு'கள் என்றால் என்ன?

முதல் உலகப் போரின்போது அடிபட்ட படை வீரர்களுக்கு இரத்தம் மற்றவர்களிடமிருந்து ஏற்றப்பட்டது. ஆச்சரியப்படத்தக்கவகையில் நிறைய வீரர்கள் இரத்தம் ஏற்றப்பட்டதாலேயே இறந்துவிட்டனர்! பிறகுதான், இரத்தத்தில் நிறைய குருப்புகள் இருப்பதும் ஒரு குருப் இரத்தத்தை இன்னொருவருக்கு ஏற்றினால் எதிர்விளைவுகள் ஏற்படும் என்பதும் தெரிய வந்தது. நிறைய இரத்த குருப்புகள் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை A, B, O, AB எனப்படுவன ஆகும். மற்றும் ரீஸஸ் (Rhesus) என்றோர் பொருள் சிவப்பு அணுவின் மேல் இருக்கலாம்; இதைப் பொறுத்து ரீஸஸ் பாஸிடிவ், நெகடிவ் என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம். பெண்களுக்குப்பிரசவ காலங்களில் இவை மிகவும் முக்கியமாகும்.

தந்தைக்கு ஒருவகை இரத்தமும், தாய்க்கு ஒரு வகை ஈரத்தமும் இருக்கலாம். பிறக்கிற குழந்தைக்கு அதில் ஒரு 'குருப்'தான் இருக்கவேண்டும் என்பதில்லை. குழந்தைக்கு வேறு குருப் இரத்தம் இருக்கலாம்; தவறில்லை. ஆனால்-

கணவர் RH பாஸிடிவ் ஆகவும், மனைவி RH நெகடிவ் ஆகவும் இருந்து குழந்தை RH பாஸிடிவ் ஆக இருந்தால், பிறக்கும் குழந்தைக்கு மஞ்சள் காமாலை நோய்

வருவதற்கு வாய்ப்புண்டு. அதனால் கர்ப்பமாயிருக்கும் பெண்கள் எல்லோரும் தமது இரத்தத்தில் RH அணு உள்ளதா என்பதைப் பரிசோதனை செய்துகொள்வது அவசியம். குழந்தைக்கு வரும் மஞ்சள் காமாலை நோயைத் தடுக்க ஊசி மருந்துகள் உள்ளன.

முன் கூட்டியே இதைக் கவனிக்காமல் இருந்துவிட்டால் கருவிலேயே காமாலை நோய்க்கு ஆளாகி குழந்தை இறந்தே பிறக்கும்.

இரத்த வகைகளில் 'O' குருப் இரத்தம் யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம். அதுவும் அவசரத் தேவைக்கு அந்த வகை இரத்தம் இல்லாவிடில் 'O' குருப் இரத்தம் கொடுக்கலாம். அவசரத்திற்கு உதவுவதால் இதனை 'யூனிவர்சல் டொனார்' (Universal Donor) என்பர். AB வகை இரத்தம் குருப் உள்ளவர்கள் மற்ற குருப்காரர்களிடமிருந்து இரத்தம் பெற்றுக் கொள்ளலாம். பின் விளைவுகள் வராது. எனவே இதனை Universal Reuplent என்பர்.

**உற்பத்திக் குறைவு**

இரத்தத்தில் பிராணவாயு குறைகிறபோது அது தனது செம்மை நிறத்திலிருந்து கருநீல நிறமுடையதாக மாறக்கூடும்.

புகை மண்டலத்தின் நடுவே பணி புரிவோர், மலை உச்சிக்குச் செல்வோர், விஷம் அருந்துவோர் ஆகியோருக்கும்- வலது வெண்டிரிகள், இடது வெண்ட்ரிகள் இரண்டிற்கும் இடையே உள்ள குறுக்குச் சுவர் பழுதுபட்டு, பிராணவாயுவும் கரியமில வாயுவும் கலந்து இரத்தம் அவ்வாறு கருநீல நிறமாகிவிடுவதும் உண்டு.

இரத்த உற்பத்தி, சில நோய்களுக்காக நாம் உட்கொள்ளும் மருந்துகள் மூலமும் குறையக் கூடும். ஆகவே, எந்த நோயானாலும் சரி, நோயாளி தகுந்த மருத்துவரிடம் பரிசோதித்துக் கொண்டு, அவர் பரிந்துரை செய்கின்ற மருந்தையே உட்கொள்ள வேண்டும்.

உடல் உறுப்புகளில் காயம்பட்டால் வருகிற இரத்தம் சிறிது நேரத்தில் உறைந்து போகிறது அல்லவா? இரத்தத்தில் உள்ள பிளேட்லெட் (Platelets) மற்றும் உறைதலுக்குத் தேவையானதாக இரத்தத்தில் கலந்திருக்கும் பொருட்களாலேயே அது சாத்தியமாகிறது.

**மாதவிலக்கு**

பெண்களுக்கு மாதந்தோறும் ஏற்படும் மாதவிலக்கு உபாதையால் 30 மில்லிகிராம் இரத்தம் சேதாரமாகும்.

ஒரு நாளைக்கு 2.5 மில்லி கிராம் இரும்புச்சத்து உடலில் சேரும் வகையான சத்துள்ள உணவை உட்கொள்வதன் மூலம் அந்த இழப்பை எளிதில் சரிக்கட்டிவிடலாம். குறிப்பாக Red Meat, சோயா பீன்ஸ் போன்றவை இரத்த விருத்திக்கு ஏற்றவைகளாகும்.

அப்படிப்பட்ட சமயத்தில் உடலுறவு கொள்ளும் வழக்கம் சிலரிடம் காணப் படுகிறது. உடல் ரீதியாகத் தம்பதியர் பரிசுத்தமாக இருந்தால், அதன் காரணமாக எந்தவித விபரீதமும் ஏற்படாது.

சில பெண்களுக்கு 3 நாட்களுக்கு மேலும் இரத்தப்போக்கு இருப்பதுண்டு; இன்னும் சிலருக்கு ஒரே மாதத்தில் குறிப்பிட்ட காலக் கணக்கின்றி ஒரு தடவைக்கு மேல் ஏற்படுவதும் உண்டு.

இவ்வாறான சங்கடங்களுக்கு ஆட்படும்



பெண்கள், உடனடியாகத் தக்க மருத்துவரை அணுகி ஆலோசனை பெற்றாக வேண்டும். இதில் கூச்சப்பட்டால் விபரீதமாகிவிடும்.

**இரத்தச் சோகை**

சிலருக்கு 'இரத்தச்சோகை' என்றோர் வியாதி ஏற்பட்டு இன்னல்படுத்துவது உண்டு.

மூல நோய், உயர் இரத்த அழுத்தம், சைனஸ், பெண்களானால் மாதவிலக்கு காலத்தில் அதிக இரத்தப் போக்கு, நாளமில்லாச்சுரப்பி, தைராய்டு, அட்ரினல் ஆகியவற்றில் உண்டாகும் சீர்கேடு, குடல் வயிற்றுப்புண் போன்ற குறைபாடுகளே இந்த நோய்க்கு மூலகாரணமாகும்.

சிறுநீரகப் பாதிப்பு, கல்லீரல் சீர்கேடு, முக்கிய எலும்புகளின் உட்புறமுள்ள மஜ்ஜையில் உண்டாகும் குறை இரத்த வாந்தி ஆகியவற்றால் இரத்த உற்பத்தி குறையும்; அதன் காரணமாகவும் இரத்தச்சோகை வரும்.

இந்த நோய்க்கு என்ன அறிகுறி தெரியுமா? உடல் வெளுக்கும், வீண் சோர்வு ஏற்படும், ஒருவிதப் படபடப்பு இருந்து கொண்டே இருக்கும்; அடிக்கடி மூச்சு வாங்கும்; பசி இருக்காது; உணவு எளிதில் செரிக்காது; ஒருவித மயக்கம் இருக்கும்; பார்வை மங்கும்; வாய்ப்புண், நாக்கில் புண் வரும்; நெஞ்சு வலி உண்டாகும்; கல்,மண், பேப்பர், ரப்பர் என்று கண்டதையும் தின்னும் பழக்கம் இருக்கும்.

இந்நோய்க்கு ஆளானவர்கள், இரும்புச் சத்துள்ள உணவை அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**பரவும் சில நோய்கள்**

இரத்தத்தினால் பரவும் வியாதிகள் மலேரியா, மஞ்சள்காமாலை, யானைக்கால் வியாதி போன்றவை மட்டுமல்ல; இப்போது எங்குபார்த்தாலும் 'எய்ட்ஸ்' என்ற உயிர்க்கொல்லிநோய் பரவியிருக்கிறது. இது பெரிதும் இரத்தத்தின் மூலமாகவே பரவும்.

உதாரணத்திற்கு- ஒருவருக்கு இருதய அறுவை சிகிச்சைக்கு உடனடியாக இரத்தம் தேவை என்று வைத்துக்கொள்வோம். ஏறத் தாழ 10 பாட்டில் இரத்தம் தேவைப்படும்.

இந்த இரத்தத்தைக் கொடுப்பதற்கு முன்பு கொடுப்பவரின் இரத்தத்தில் எய்ட்ஸ் கிருமி உள்ளதா என்பதைப் பரிசோதனை செய்து தர வேண்டும். இல்லையேல் மற்றவர்களிடமிருந்து இரத்தம் ஏற்றப்படும்போது 'ஹெச்.ஐ.வி.' (H.I.V.) கிருமிக்கு டெஸ்ட் செய்து கொள்வது அவசியம்.

**உயிருக்கே ஆபத்து**

இரத்த ஓட்டம் தடைபட்டால் மனிதனுக்கு வரும்மிகப்பெரிய ஆபத்து மாரடைப்பு ஆகும். உடல் முழுமைக்கும் இரத்தம் அனுப்பும் இதய இரத்தப்போக்குவரத்தில் சிக்கல் ஏற்பட்டால் எப்படி?

இதைத் தக்க நேரத்தில் கண்டுபிடித்துச் சிகிச்சை தராவிட்டால் உயிருக்கே உலை வைத்துவிடும்.

இரத்த ஓட்டத்தில் தடை ஏற்படுவது இரத்தம் உறைவது போன்ற குறைபாடே இந்த வியாதிக்கு முக்கியக் காரணமாகும்.

இரத்தத்தில் கொழுப்புச்சத்து அதிகரித்தல், அதிகமாகப் புகைபிடித்தல், இரத்த நாளம் பழுதடைதல், பாரிச வாயு, இரத்தப் புற்று நோய் போன்ற காரணங்களினால் இரத்தம் கெட்டிப்படுகிறது, அல்லது உறைந்து போகிறது.

இரத்தத்தின் கெட்டித்தன்மையைக் குறைத்து, மெலிதான தன்மையுடையதாக வைத்திருக்கவே இதய நோய்க்கு ஆட்பட்டவர் களுக்கு 'ஆஸ்பிரின்' தரப்படுகிறது.

நாள்தோறும் ஒரு ஆப்பிள் சாப்பிட்டு வந்தாலேகூட இரத்தம் கடினத்தன்மைஅற்று மென்மையோடிருக்கும்.

**இரத்தக் கசிவு**

சிலபேருக்கு மூக்கில், எச்சிலில், சிறுநீரில், மலத்தில் தொடர்ந்தோ சில சமயங்களிலோ இரத்தம் வரக்கூடும்.

உயர் இரத்த அழுத்தம், மஞ்சள் காமாலை போன்ற நோயால் கல்லீரல் பாதித்தல், காச நோய், சிறுநீரகத்தில் கல் உண்டாதல், சிறுநீரகப் புற்றுநோய், குடலில் அல்சர், குடல் புற்று நோய் போன்ற ஏதாவது ஒரு காரணமே அவ்வாறு இரத்தம் வரச் செய்வதாக இருக்கும்.

தலையில் பலத்த அடிபட்டால் காது வழியாகவும் இரத்தக் கசிவு ஏற்படும்.

தகுந்த மருத்துவச் சிகிச்சை மூலம், இவ்வாறான பாதிப்புகளிலிருந்து எளிதில் தப்பமுடியும்.

# கீரையோ கீரை

சிவ. சூரியன், இ.ஆ.ப.
இயக்குநர் (பொறுப்பு)
வேளாண்மைத்துறை

"இந்தியாவில் ஒவ்வொரு ஐந்து நிமிடத்திற்கும் ஒருவர் பார்வையற்ற தன்மையை அடைகிறார்கள்" என இந்திய மருத்துவக் கழகமும், "இந்தியாவிலுள்ள பத்து மில்லியன் குழந்தைகளில் 25% குழந்தைகள் உயிர்ச்சத்துப் பற்றாக் குறையால் பார்வையற்ற தன்மையை அடைகிறார்கள்" என உலக சுகாதார நிறுவனமும் அறிக்கைகள் தந்துள்ளன.

ஆரம்ப காலத்தில் தமிழக மக்கள் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்தார்கள். அவர்கள் உணவில் காய்கறிகளும் கீரைகளும் அதிக முக்கியத்துவம் பெற்றிருந்தன. ஆனால் தற்போது உணவில் கீரையை சேர்ப்பது மிகவும் அபூர்வமாகி விட்டது.

ஒவ்வொரு மனிதனும் சராசரியாக ஒரு நாளைக்கு உண்ண வேண்டிய கீரையின் அளவு 125 கிராம். ஆனால் தமிழகத்தில் தற்போது சுமார் 15 கிராம் கீரையையே அன்றாடம் உணவில் சேர்த்துக் கொள்கிறார்கள். இதிலிருந்து தமிழகத்தில் கீரைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டிய கட்டாயச் சூழ்நிலை இருப்பது தெரியவருகிறது.

நகர பழக்க வழக்கத்தால், கீரையைச் சேர்த்தல் என்பது தமிழக மக்கள் மத்தியில் மிகவும் குறைந்து விட்டது. குறிப்பாக குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்குத் தேவையான உயிர்ச்சத்து - 'ஏ' எளிதாகக் கீரைகளிலிருந்து கிடைக்கிறது. நாள்தோறும் 300 கிராம் காய்கறிகளைச் சராசரியாக உணவில் நாம் சேர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். இதில் 125 கிராம், சுமார் பாதி அளவு சத்தை, கீரைக்கே ஒதுக்கி இருப்பதிலிருந்து கீரையின் முக்கியத்துவத்தை உணர முடியும்.

**கீரையின் முக்கியத்துவம்**

ஒரு செடியின் இலை நமது உடலுக்குத் தேவையான சத்துக்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையாக இருப்பதோடு அவற்றைச் சேர்த்து வைக்கும் சேமிப்புக் கிடங்காகவும் பயன்படுகிறது. இந்த இலைகளில்தான் முக்கியப் பொருட்களான புரதம், மாவுச்சத்து, கொழுப்புச்சத்து, உயிர்ச்சத்து, தாதுப்பொருட்கள் முதலியன தயாரிக்கப்படுகின்றன.

இலைகளின் செல்களில்தான் பொதுவாக இரும்பு, சுண்ணாம்பு, பாஸ்பரஸ் பொட்டாசியம் போன்ற தாதுப்பொருட்கள் மிக அதிகமாக சேகரிக்கப்பட்டுள்ளன. ஆகவே கீரையை உட்கொண்டால் மேற்கூறிய அனைத்துச் சத்துக்களும் உடலில் சேரும். இதுதவிர கீரையானது வயிறு நிரம்பு பொருளாக **(roughage)** பயன்படுகிறது. இதில் உள்ள நார்ச் சத்தானது குடலுக்கு புத்துணர்ச்சியைக் கூட்டி எளிதில் செரிக்க உதவுகிறது.

பொதுவாக, கீரைகளில் அதிக நார்ச்சத்து இருப்பதால் மலச்சிக்கலை நீக்க உதவுகிறது. மலச்சிக்கல் நீங்கினாலே மனிதனுக்கு வருகின்ற வியாதிகளில் பெரும்பங்கு நீங்கிவிடும். கீரைகளில், உயிர்ச்சத்து-'ஏ'வைத் தவிர இதர உயிர்ச் சத்துக்களான பி1, பி2, பி12, சி, கே, ஈ போன்றவைகளும் கிடைப்பதாக அறியப்படுகின்றது.

ஏனைய காய்கறிகளைக் காட்டிலும் கீரை மிகவும் மலிவானது. எளிதில் வாங்க இயலும். இந்தியாவில் சைவ உணவு உண்போர் அதிகம். அவர்களில், இளையோர், முதியோர் அனைவருக்கும் முக்கிய சத்துக்களை அளிக்க வல்லது கீரைகள் என்பதால், நாள்தோறும் கீரையை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

கீரையில் மருத்துவக் குணம் அதிகமாக இருப்பதால் கீரையை உண்ணும்போது நோய் தீர்க்கும் மருந்தாகவும் பயன்படுகிறது. மஞ்சள்காமாலை நோய்க்கு ஆங்கில மருத்துவத்தில் சரியான மருந்துகள் இல்லை. இந்த நிலையில் மஞ்சள் கரிசலாங்கன்னிக் கீரையைப் பயன்படுத்தி இந்த நோயிலிருந்து பாதுகாப்பைத் தரமுடியும்.

மேலும் பச்சையாகக் காய்கறிகளை உண்ணும் பழக்கத்தை (சாலட்) ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஊட்டச்சத்து



வல்லுநர்கள் வலியுறுத்துகின்றனர்.

கீரையை விலைக்கு வாங்கி உண்பதைவிட வீட்டிலேயே வளர்த்து உண்பது சாலச் சிறந்ததாகும். இடம் இல்லையே என்று சென்னை போன்ற · நகரங்களில் வசிக்கும் மக்கள் வருத்தப்பட வேண்டிய தில்லை. ஒவ்வொரு வீட்டின் பின்புறமும் இருக்கும் இடத்தில் ஒரு முருங்கையை வளர்க்கலாம். முருங் கையின் அடியில் ஒரு பசலைக் கொடி நட்டு வ்ளர்க்கலாம்.

தவசி முருங்கை (Multi Vitamin Greens) என்று சொல்லப்படுகின்ற செடியை வீட்டில் வளர்த்தால், நாள்தோறும் காலையில் பல் தேய்த்தவுடன் ஓரிரு இலைகளைப் பச்சையாகத் தின்னும் பழக்கத்தை குழந்தைகளுக்கு ஏற்படுத்திக் கொடுத்தால் மிகுந்த பயன் அடைய லாம்.

இது தவிர வீட்டிலுள்ள கடுகு, வெந்தயம் போன்றவற்றைச் சிறு அளவில் சாகுபடி செய்து பயன் படுத்தலாம். நமக்கு ஏற்கெனவே தெரிந்த சீமை பொன்னாங்கன்னி, தண்டுக்கீரை இவற்றை வீட்டைச் சுற்றி சிறு சிறு இடத்தில வளர்த்துப் பயன் அடையலாம்.

இடவசதியே இல்லையென்றால் கள்ளிப்பெட்டி, மண் தொட்டி களில் கீரைகளை வளர்த்துப் பயன் அடையலாம். பச்சைக் கீரைகளை நாள்தோறும் உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம். கிராமத் தில் இருப்பவர்கள் களையாக களைந்து எறியும் சாரணை, வேளை, பண்ணைக்கீரை போன்ற வற்றை உணவுடன் சேர்த்துப் பயன்படுத்தலாம்.



கரிசலாங்கன்னி

"பொன்னாம் காண் நீ" என்று பொன்னாங்கன்னியின் சிறப்பை வள்ளலார் கூறியுள்ளார். 'பஞ்ச பூதங்களின் சக்திகளை உள்ளடக்கி 'ஒளிச்சேர்க்கை' என்னும் செயற் பாடு இலைகளில் நடைபெறுவ தால் பச்சயம் உள்ள இலைகள் உடலுக்கு அதிக பாதுகாப்பைத் தருகின்றன.

சிவக்கொழுந்து என்று சொல்லப்படும் 'வில்வமும்', அரிக்கொழுந்து என்று சொல்லப் படும் துளசியும் இதயம் சம்பந்த மான பல நோய்களைத் தீர்ப்பதால் தான் அவை ஆண்டவன் சந்நி தானம் மூலம் அன்பர்களைத் தூய்மைப்படுத்துகிறது.

இன்றும் அம்மை நோய் கண்டால் 'வேப்பிலை' தானே நமக்கு மருந்து. அதுபோலத்தான் பூ, காய், கனி இப்படி எதுவுமின்றி கொடியில் வெற்று இலையாக வளரும் 'வெற்றிலை'.

இப்படி இலையைச் சார்ந்த கீரை வகைகள், காய்கறிகள் எத் தனையோ நம் சித்த மருத்துவத் தில் உள்ளன.

நாள்தோறும் கீரையை உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண் டால் வலிவோடும், பொலிவோடும் வளமோடும் வாழலாம்.



துளசி



# எங்கள் ஊர் பிரச்சினை

**பிரச்சினை:**

எங்கள் கிராமம் தஞ்சை மாவட்டம் கும்பகோணம் ஒன்றியம், அத்தியூர் ஊராட்சியில் அடங்கிய குருகூர் கிராமம். எங்கள் கிராமத்தில் மட்டும் சுமார் 1000 பேர் வசிக்கின்றனர். மற்றும் எங்கள் கிராமத்திற்கு அருகில் அத்தியூர், ஆனூர், மேலான மேடு, காவல்கூடம் ஆகிய கிராமங்கள் இருக்கின்றன. எங்கள் கிராமத்திற்கு என்று பேருந்து வசதி கிடையாது. நாங்கள் நகர்ப்புறமான கும்பகோணத்திற்கோ மற்ற வெளியூர்களுக்கோ செல்ல வேண்டும் என்றாலும் மற்றபடி குடும்பத்திற்குத் தேவையான அடிப்படைப் பொருள்கள் வாங்க வேண்டும் என்றாலும் எங்கள் கிராமத்தில் இருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ள சோழபுரம் என்ற பேருருக்குத்தான் செல்ல வேண்டும். சோழபுரம் பேருருக்குச் செல்லும் வழியில் சாலையின் குறுக்கே மண்ணியாறு என்று ஒரு பாசன ஆறு ஓடுகிறது. அந்த மண்ணியாற்றில் உள்ள பாலம் மிகவும் பழுதடைந்து பாதுகாப்பற்ற நிலையில் (கைப்பிடி இல்லாமல்) இருக்கிறது. சுமார் இரண்டு அல்லது மூன்று தடவை அந்த பாலத்தில் மாட்டு வண்டி பாதுகாப்பு கைப்பிடி இல்லாததால் தவறி விழுந்து மிகவும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. பல கால்நடைகள் தவறி விழுந்து இறந்திருக்கிறது. இதே நிலை பல ஆண்டு காலமாக இருந்து வருகிறது. ஆகவே எங்கள் பகுதி மக்களின் இந்த அவல நிலையை பொதுப்பணித்துறை மூலமாகவோ அல்லது உள்ளாட்சி அமைப்பின் மூல மாகவோ சீர் செய்து தர ஆவன செய்து தரும்படி எங்கள் பகுதி கிராமப் பொது மக்களின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அ. அன்பழகன்
குருகூர்.

**தீர்வு:**

கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மகாராஜபுரம் ஊராட்சிக்கு, மணல்மேடு வழியாக சோழபுரம் ஊராட்சிக்கு ஒரு சாலை செல்கிறது. இதன் நடுவில் மண்ணியாறு குறுக்கே செல்கிறது. இந்த ஆற்றின் நடுவே ஒரு குறுகிய பாலம் உள்ளது. இந்தப் பாலத்தின் நீளம் 36.5 மீட்டர் நீளமாகும். இந்தப் பாலத்தின் வழியாக கார், மோட்டார் சைக்கிள் மற்றும் பாதசாரிகள் மட்டுமே செல்ல முடியும். ஆனால் அதிகாரிகளின் அறிவுரைகளைப் பொருட்படுத்தாமல் கரும்பு ஏற்றிய டிராக்டர்களை இதன் வழியாக ஓட்டிச் செல்கின்றனர். இதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே, அனைத்து கனரக வாகனங்களும் செல்லும் வகையில் புதிய பாலம் கட்ட வேண்டியுள்ளது. புதிய பாலம் கட்டுவதற்குச் சுமார் ரூ.73 இலட்சம் தேவைப்படுகிறது. எனவே, சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்தால் இப்புதிய பாலத்தினைக் கட்டி, கிராம மக்களுக்கு வசதி செய்து தரமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வி.கு. ஜெயக்கொடி, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்
தஞ்சாவூர்.

**பிரச்சினை:**

நல்லாட்சி நடைபெறும் இத்தருணத்தில், எங்கள் பகுதியில் உள்ள 'அரண்மனைக் குறிச்சி மேம்பாலம்' நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ளதைத் தெரியப்படுத்து



கிறேன். இது திருச்சி- அரியலூர், திருச்சி-தஞ்சை ஆகிய முக்கிய நகரங்களை இணைக்கும் சாலையில் உள்ளது. இப்பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் கரும்பை இப்பாலத்தின் வழியாகத்தான் காட்டூர் சர்க்கரை ஆலைக்குக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. அரண்மனைக் குறிச்சி திருமானூர் ஒன்றியம், அன்னி மங்கலம் ஊராட்சியில் உள்ளது. இப் பாலத்தை முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் வெள்ள நிவாரணத்தின்போது பார்வையிட்டு, உடனே மேம்பாலம் கட்ட ஆணையிட்டார்கள். அன்றைய நாளி லிருந்து இன்றுவரை எவ்வித முன்னேற்ற மும் இல்லாமல் உள்ளது. எனவே இது சம்பந்தமாக அரசு நடவடிக்கை எடுத்து உதவக் கேட்டுக்கொள்கிறேன்.

பாளை திருநாவுக்கரசு,
பாளையப்பாடி,
அரண்மனைக்குறிச்சி
திருவள்ளுவர் மாவட்டம் - 621 851

## தீர்வு:

திருமானூர் ஒன்றியம் அரண்மனைக் குறிச்சி மேம்பாலம் கட்டுதல்:

கீழப்பழூர் திருமழப்பாடி சாலை இக்கோட்ட பராமரிப்பில் உள்ள ஒரு அரசு இதர மாவட்டச் சாலையாகும். இதன் நீளம் 16.4 கி.மீ. ஆகும். இச்சாலையில் மி.மீ. 12/8ல் நந்தியாறு குறுக்கிடுகிறது. மேற்படி பாலம் கட்டப்பட 24 வரிசைகள் கொண்ட 900 கி.மீ. விட்டமுள்ள குழாய் தாம்போகி தற்போது உள்ளது. இது மிகவும் தாழ்வாக அமைந்துள்ளது. இதன் வழியாக செல்லும் வெள்ள நீரின் உயரம் அதிகமாக உள்ளது. இத்தாம்போகியிலிருந்து சுமார் 1 கி.மீ. தூரத்தில் கொள்ளிடம் ஆறு கலக்கிறது. கொள்ளிடம் ஆற்றில் வெள்ளம் வரும்போது கொள்ளிடம் வெள்ள நீர் நந்தியாற்றின் குழாய் தாம்போகிக்கு மேல் நீர் தேங்கி விடுகிறது. கொள்ளிடம் ஆற்றில் வெள்ளம் வடியும் வரை இத்தாம்போகியின் மேல் நீர் உயரமாகத் தேங்கி நிற்கிறது. இதனால் போக்குவரத்து பெரிதும் தடை படுகிறது.

மழைக் காலங்களில் போக்குவரத்து தடைபடுவ தாலும், கொள்ளிடம் ஆற்றில் வெள்ளம் வரும்போது நந்தியாற்றில் நீர்தேங்கி விடுவதாலும், தடையற்ற போக்குவரத்திற்கும் இவ்விடத்தில் ஓர் உயர்மட்ட பாலம் கட்டுதல் மிகவும் அவசியமானதாகும். இவ்வுயர்மட்ட பாலம் அமைக்கப் பெற்றால் கீழப்பழூர் வண்ணம், கீழ வட்டாங்குறிச்சி, அரண்மனைக்குறிச்சி, திருமழபாடி மற்றும் இதனைச் சுற்றியுள்ள கிராம மக்கள் தங்கள் விளைப்பொருட்களை அருகிலுள்ள அங்காடிகள் மற்றும்



ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு மழைக் காலங்களிலும் எடுத்துச்செல்ல ஏதுவாக இருக்கும்.

இவ்விடத்தில் உயர்மட்டப் பாலம் அமைக்க 1997-98ஆம் ஆண்டிற்கு பகுதி-2 திட்டத்தில் ரூ.270 இலட்சத்திற்குச் சேர்க்கப்பட்டு கண்காணிப்புப் பொறியாளர் (நெஊப) திருச்சிராப்பள்ளிக்குச் சிபாரிசு செய்து அனுப்பப்பட்டுள்ளதாக, திருச்சிராப்பள்ளி கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணிகள்) தெரிவித்துள்ளார்.

கே. நந்தகிஷோர், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்
பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம்
பெரம்பலூர்.

## பிரச்சினை:

தமிழகத்தின் காவல்துறைக்கு, உதவி ஆய்வாளர் பணி நியமனத்திற்குக் கடந்த 1.1.94 அன்று அன்றைய தமிழக அரசால் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர் வாணையம் மூலம் மனுக்கள் கோரப்பட்டு உடல்திறன் தேர்வு, எழுத்துத் தேர்வு, நேர்முகத் தேர்வு, மருத்துவத் தேர்வு மற்றும் போலீஸ் வெரிபிகேசன் உள்ளிட்ட அனைத்துத் தேர்வுகளும் முடிவடைந்து, 1100 போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு இரண்டு கட்டங்களாகப் பயிற்சியளிக்க அரசு முடிவு செய்து, முதல் கட்டமாக 500 போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு, ஆவடி யில் 300 பேருக்கும், வீராபுரத்தில் 200 பேருக்கும் கடந்த 1.3.96 அன்று பயிற்சி

தொடங்கப்பட்டது. அடுத்தகட்டமாக 14.3.96 அன்று மீதமுள்ள 600 பேருக்கும் பயிற்சி வழங்க கோவை காவலர் பயிற்சிக் கல்லூரி தேர்வு செய்யப்பட்டிருந்தாலும் தேர்தல் அறிவிப்பு வெளியானவுடன் தேர்தல் ஆணையத்தால் நிறுத்தி வைக்கப்பட்டது.

இது பற்றி, கடந்த 30.7.96 அன்று தமிழ் மாநில காங்கிரஸின் வேலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்களின் கேள்விக்குப் பதிலளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், "கடந்த ஆட்சியில் தேர்வு செய்யப்பட்ட 10,000 காவலர்கள், 600 சப்-இன்ஸ்பெக்டர்கள், 1069 தீயணைப்பு வீரர்கள் ஆகியோரையும் பணியிலமர்த்த அரசு உத்தரவிட்டுள்ளது" என்றார்கள்.

ஆனால், தீயணைப்புத் துறைக்கு மட்டும் கடந்த 9.9.96 அன்று 1069 பேரையும் பணியிலமர்த்தி அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள உதவி ஆய்வாளர்களுக்கும் காவலர்களுக்கும் இன்னும் பணி நியமனம் பற்றிய உத்தரவு வரவில்லை.

மேலும் 21.8.96 அன்று "சொன்னதைச் செய்வோம்! செய்வதையே சொல்லுவோம்!" என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்பட்ட 100 நாள் சாதனையின்கீழ் "கடந்த ஆட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 10,000 காவலர்கள் 600 காவல்துறை உதவி ஆய்வாளர்கள், 1069 தீயணைப்புப் பணியாளர்கள் பணியமர்த்தல்" என அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் வெளியான 6 மாத சாதனையிலும் "தமிழரசு" பத்திரிகையிலும் இதே செய்தி வெளியிடப்பட்டிருந்தது.




இதுபற்றிக் காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகத்தில் கேட்டதற்கு "எங்களுக்கு இதுபற்றிய அரசு ஆணை எதுவும் வரவில்லை. வந்தால், வந்தவுடன் அனுப்புவோம்" என்று கூறியிருந்தனர்.

தேர்வு பெற்றவர்களும் வழி மேல் விழி வைத்து, இன்று வரும், நாளை வரும் என்று எண்ணி, வேறு எந்த வேலைக்கும் செல்லாமல் இதேயே எதிர்பார்த்து ஏங்கிக் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

இதற்கிடையில் 7.10.96 அன்று அந்தந்த மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள் முன் தேர்வு பெற்ற காவலர்கள், அறிக்கை செய்யப் பணித்து 7 நாட்கள் உள்ளாட்சித் தேர்தல் பணிக்குப் பயன்படுத்தப்பட்டு, 315 ரூபாய் தொகுப்பூதியம் வழங்கப்பட்டது.

மேலும் 6.12.96 அன்று சென்னையில் தமிழக முதல்வர் அவர்கள் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியின்போது, "கடந்த ஆட்சியின் போது தேர்வு செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்களைப் பணிநியமனம் செய்வதாக சட்டசபையில் 'அறிவித்திருந்தீர்களே இன்னும் ஏன் பணியமர்த்தவில்லை' என்ற வினாவிற்கு, "அதுபற்றி என் கவனத்திற்குக் கொண்டு வந்தால் பரிசீலிப்பேன், நீங்கள் சொல்லுவது தான் செய்தி, இது இன்னும் என் கவனத்துக்கு வரவில்லை. வந்தால் நடவடிக்கை எடுப்பேன்" என்று கூறியதாக அனைத்து தினசரிகளிலும் செய்தி வெளியாகியிருந்தது.

"சிவப்பு நாடாவால் கட்டப்பட்டு கோப்புகள் தேங்குவது ஊழல் எழுந்து, ஊர் சுற்றக் கிளம்புவதற்கு, சிவப்புக் கம்பளம் விரித்தது போன்று அமைந்து விடுகிறது" என்று அறிவுறுத்திய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், எவ்விதத் தாமதமுமின்றி, தேர்வு

செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்களையும், காவலர்களையும் உடனடியாகப் பணியிலமர்த்தி, அவர்களின் வாழ்வில் ஒளியேற்ற வேண்டும் என்று பணிவன்புடன் வேண்டுகிறோம்.

காவல் பணிக்குத் தேர்வு
செய்யப்பட்டவர்கள்

## தீர்வு:

1. 1994-95ஆம் ஆண்டில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம், காவல் சார் ஆய்வாளர் பதவிக்கு நேரடி நியமனம் செய்வதற்காக, தேர்வு நடத்தி 1100 நபர்களைப் பொது சந்தையிலிருந்து தெரிவு செய்து பட்டியல் அளித்தது.

2. அதிலிருந்து, முதல் 500 நபர்களுக்குப் பணி நியமனம் உத்தரவுகள் வழங்கப்பட்டு, சென்னை காவல் பயிற்சிக் கல்லூரியிலும், வீராபுரம், தற்காலிகக் காவல் பயிற்சிக் கல்லூரியிலும் ஒரு வருட காலம் அடிப்படைப் பயிற்சி 1.3.96 முதல் அளிக்கப்பட்டு வருகிறது.

3. தெரிவு பட்டியலில் உள்ள மீதி 600 நபர்களுக்கும் பணி நியமனம் செய்து கோயம்புத்தூர், தற்காலிக காவல் பயிற்சிக் கல்லூரியில் அடிப்படை பயிற்சி அளிக்க அரசு அனுமதித்த போதிலும், அப்போது தேர்தல் சமயம் ஆனதால், அவர்கள் பணி நியமனம் செய்யப்படவில்லை.

4. காவல்துறையில், காவலர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட 10,000 பேர்களும் காவல் சார் ஆய்வாளர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட மீதியுள்ள 600 பேர்களும் பணியில் அமர்த்தப்படுவார்கள் என்று தமிழ்நாடு மாண்புமிகு முதல்வர் அவர்களும் சட்டமன்றத்தில் உறுதி அளித்து உள்ளார்கள்.

5. சமீபத்தில் நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தலின் போது, காவலர்களாகத் தெரிவு செய்யப் பட்டவர்களில் பலர் தேர்தல் பந்தோபஸ்து பணிக்காகத் தற்காலிகமாகப் பயன்படுத்தப்பட்டு, அவர்கள் ஆற்றிய அந்தப் பணிக்காகத் தொகுப்பூதியம் வழங்கப்பட்டது.

6. காவல் சார் ஆய்வாளர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மீதியுள்ள 600 பேர்களைப் பணியில் அமர்த்த, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவர்கள் விரைவில் பணி அமர்த்தப்பட்டு, அடிப்படைப் பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள்.

7. காவலர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள 10,000 பேர்களில் இனவாரியாகத் தொகுக்கப்பட்ட பட்டியல் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்திடமிருந்து எதிர்ப்பார்க்கப்படுகிறது. அது பெறப்பட்டதும் பதவி காலியிட எண்ணிக்கையின் அடிப்படையில் இரண்டு கட்டங்களாகப் பணியமர்த்தப் பட்டு அரசு ஒப்பளிப்பு அளித்துள்ள பன்னிரண்டு தற்காலிகக் காவல் பயிற்சிப் பள்ளிகளில் அடிப்படைப் பயிற்சிக்கு அனுப்பப்படுவார்கள்.

காவல்துறை இயக்குநர்
அரசினர் தோட்டம், சென்னை



## பிரச்சினை:

எங்கள் ஊர் பிரச்சினை என்ற தலைப்பில் எங்களது ஊராட்சியில் நீண்டகாலத் தீர்வுகாண இயலா 19 ஆண்டுகால கோரிக்கை பற்றி எழுதுகிறேன். இந்திய சுதந்திரத்திற்குப் பின் இன்று வரை எங்களுக்குக் குடிநீர் வசதி இல்லை. எங்களது ஊராட்சியில் நான்கு கிராமங்களில் மேல்நிலை நீர்த்தொட்டி உள்ளது. ஆனால் மழைநீரை மட்டுமே நீர்த்தொட்டி கண்டிருக்க முடியும். இவை இப்போது இடிந்துவிழும் நிலையில் உள்ளன. கூட்டுக் குடிநீர் திட்டம் இங்கு இருப்பது உண்மை. ஆனால் சுமார் 10 மைல் சுற்றளவில் எங்கள் பகுதிக்கு மட்டும் இணைப்புக் குழாய்கள் இருந்தும் இணைப்பு இல்லை. எங்களுக்கு நன்மை செய்யும் வகையில் கோரிக்கையினை நிறைவேற்றவும்.

எஸ்.எம். சண்முகசுந்தரம்சேர்வை
செல்வனேந்தல்
ஆவுடையார்கோயில் ஒன்றியம்

## தீர்வு:

ஆவுடையார்கோயில் ஊராட்சி ஒன்றியத்தில் பாண்டிபத்திரம் கூட்டுக் குடிநீர் திட்டம் சீர் செய்யப்பட்டு 10.1.97க்கு பின்னர் இயக்கப்பட்டு தற்போது மக்களின் பயன்பாட்டில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

க. சண்முகம், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்
புதுக்கோட்டை

### பிரச்சினை:

சிதம்பரம் நகரில் கடந்த 6 மாத கால மாக ரௌடிகள் அட்டகாசம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. முக்கிய வீதிகளிலும், 4 தெருக்கள் கூடும் இடங்களிலும் ரௌடிகள் கும்பலாக நின்று கொண்டு, பெண்களையும், மாணவ, மாணவிகளையும் ஆபாசமான வார்த்தை களால் கேலி செய்யும் நிகழ்ச்சி தினசரி நடைபெறும் நிகழ்ச்சியாகி விட்டது. மேலும், இங்கு ரௌடிகள் மூன்று குருப்புகளாக இருந்து கொண்டு சின்னகடைத்தெரு, தோப்பு, கஞ்சித் தொட்டி முனை ஆகிய இடங்களில் பயங்கர ஆயுதங்களுடன் மோதிக்கொள்வது, பொதுமக்களுக்கு மிகுந்த இன்னல்களை ஏற்படுத்துகிறது. கருணை கூர்ந்து தமிழக முதல்வர் சிதம்பரம் நகரில் உள்ள ரௌடிகளைக் களையெடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

- ஊர்ப்பொதுமக்கள்
சிதம்பரம்

### தீர்வு:

இம்மனு சம்மந்தமாக விசாரணையில் 1995ம் ஆண்டு வரையில் சின்ன கடைத்தெருவில் பழனியும் எதிர் கோஷ்டியாக காமராஜ் என்பவரும் செயல்பட்டு வந்தனர் என்றும் சிதம்பரம் நகர் காவல்நிலைய குற்ற எண்.36/90, 263/91, 352/92 மற்றும் 187/91 ஆகிய வழக்குகளில் தேடியதில் கடந்த மூன்று ஆண்டு காலமாகத் தலைமறைவாக இருந்தார் என்றும் மேலும் இரு கோஷ்டி தரப்பினரும் 1996ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் சிறையில் இருந்ததால் பிரச்சினைகள் இல்லாமல் இருந்தது எனவும் 1996ம் ஆண்டில் காவல் துறையினர் தீவிர கண்காணிப்பினால் ரௌடித்தனம் குறைந்து கூலி வேலைக்குச் சென்று வந்தனர் என்றும் செந்தில் கோஷ்டியினர் ஆட்கள் சிறு சிறு சம்பவம் தொடர்பாக 24.7.96ல் குற்ற எண்.343/96 பிரிவு 294, 323 இதர மற்றும் பல குற்ற எண்களில் வழக்குப் பதிவு செய்து புருஷோத்தமன் மற்றும் அவரது ஆட்களும் கைது செய்யப்பட்டு காவல் அடைப்பில் இருந்து வருகின்றனர். மற்றும் செந்தில் நடராஜன் ஆகியோர் தொடர்ந்து காவல் அடைப்பில் உள்ளனர். பாஸ்கரன் தலைமறைவாகி உள்ளான்.

இதுதவிர, பொதுமக்களுக்கு இடையூறாக சாலையில் தேவையற்ற நிலையில் நிற்பவர்கள், கிண்டல் செய்யலாம் என்ற சந்தேகத்தில் இருப்பவர்கள் பல கோணங்களில் * தீவிரமாகக் கண்காணித்து 1996ம் ஆண்டில் 182 பேர் மீது 75 எம்சிபி ஆக்ட் படி வழக்கு பதிவு செய்தும் 1997ம் ஆண்டில் ஜனவரி மாதம் 32 நபர்கள் மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டு அனைவருமே அபராதம் நீதிமன்றத்தில் செலுத்தியுள்ளனர்.

இதுதவிர சிதம்பரம் நகரில் கடந்த 6 மாத காலமாக இரவு பகல் ரோந்து செய்து நகரைச் சுற்றி எந்த அசம்பாவிதமும் நிகழாமல் கண்காணித்து வரப்படுகிறது.

டி.வி. ரவிச்சந்திரன், இ.கா.ப.,
காவல்துறை கண்காணிப்பாளர், கடலூர்.



### பிரச்சினை:

சேலம் மாவட்டம் பழைய பஸ் நிலையம் அருகில், திருமணிமுத்தாறு பாலத்தின் கீழ் பகுதியில் பழைய டயர்களை வியாபாரம் செய்பவர்கள் டயரில் உள்ள கம்பிகளை எடுப்பதற்காக பாலத்தின் அடியில் எரிக் கிறார்கள். இதனால் அந்தப் பகுதியைச் சுற்றி அதிக புகை மண்டலம் ஏற்படுகிறது. மேலும் காற்றுடன் கலந்து துர்நாற்றத்தை ஏற்படுத்துகிறது. இதனால் காற்று மாசு படுகிறது. சுகாதாரக் கேடு உண்டாகிறது. இதனைப்பலரிடம் கூறியும் எந்தப் பயனும் இல்லை. உங்கள் மூலமாவது எங்கள் பிரச்சினை தீர வழி செய்ய வேண்டும்.

பொதுமக்கள்
அம்மாபேட்டை, சேலம் மாவட்டம்

### தீர்வு:

சேலம் பழைய பஸ் நிலையம் அருகே உள்ள திருமணிமுத்தாற்றின் அடியில் அதன் ஓரங்களில் பழைய டயர் வியாபாரம் செய்யும் ஒரு சிலர் அவைகளைக் கருக்கிக் கொண்டிருந்தது உண்மை. நெருப்பின் அபாயம் கருதி அவர்கள் திருமணிமுத்தாறு சாக்கடை ஓரம் இந்த செயலில் ஈடுபட்டுள்ளார்கள். இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டு - பொதுச் சுகாதாரம் கெடும்

வகையாக ஈடுபடக்கூடாது என அவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பிரமோத் குமார், இ.கா.ப.,
காவல் கண்காணிப்பாளர், சேலம்.

**பிரச்சினை:**

விழுப்புரம் ராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி கோட்டத்தில் உள்ள மின்துறை அதிகாரிகள் முதல் ஊழியர்கள் வரை (மின் கட்டண கணக்காளர்களைத் தவிர) தங்களுக்குள் ஒற்றுமையாக மின்சார நுகர்வோர்களிடம் "கமிசன்" வாங்கிக்கொண்டுதான் மின் இணைப்பு மற்றும் பழுது பார்க்கும் பணியைச் செய்வார்கள். விவசாய மின்சார மோட்டார் மின் இணைப்பு வழங்க வேண்டும் என்றால் போதும் "இலவச மின்சாரம்" தானே? இதற்கு முன்பு டீசல் வாங்கிதானே டீசல் எஞ்சினுக்கு இறைத்தாய்? நீ ஒரு வருட டீசல் வாங்குகின்ற பணத்தை எங்களுக்குக் கொடுத்தால் என்ன குறைந்தா போவீர்கள் எனக் கூறும் போது விவசாயிகளுக்கு இலவச மின்சாரமே வேண்டாம் என்று கூடத் தோன்றும்படி நடந்து கொள்கிறார்கள். பிறகு அலுவலகத்திற்கு பிற்பகலில் சென்றால் அங்கு கணக்காளர்களைத் தவிர மற்ற அதிகாரிகளில் ஒருவர் மட்டுமே இருப்பார். இந்த நிலையை எதிர்த்துக் கேட்பவர்களின் நிலைமை பரிதாபம் தான். ஏனெனில் வேண்டும் என்றே சில தனி விதி முறைகளையும், நடைமுறைகளையும் முகத்தில் அடித்தாற் போல் சொல்லுவார்கள். நீங்கள் என்ன சொன்னாலும் யாரிடம் போய் என்ன சொன்னாலும் எங்களை ஒன்றும் செய்துவிட முடியாது என்றும் மின் உபயோகிப்பாளர்களைப் பயமுறுத்துகிறார்கள். அந்த அதிகாரிகள் சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர், எங்கள் மாவட்ட அமைச்சர்களுக்கு மக்கள் மத்தியில் அவப்பெயரை ஏற்படுத்துகின்றனர். குறிப்பாகக் கள்ளக்குறிச்சி கோட்டம், நாகலூர் இளநிலைப் மின்பொறியாளர் (இயக்கமும் பராமரிப்பும்) அலுவலகத்தில் தான் முறைகேடு நடை பெறுகிறது. மற்ற



இளநிலை மின் பொறியாளர் (இயக்கமும் பராமரிப்பும்) இதைவிட நன்றாகவே முறைகேடு நடைபெறுகிறது.

கள்ளக்குறிச்சி கோட்ட மின்
உபயோகிப்பாளர்கள்
கண்டாச்சிமங்கலம்

**தீர்வு:**

நாகலூர் மின்வாரியப் பிரிவு அலுவலகப் பகுதியைச் சார்ந்த கண்டாச்சிமங்கலம் ஊராட்சியில் பொதுமக்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், விவசாய மின் இணைப்புப் பெறுவதற்கு ஒருவரும் பணம் லஞ்சமாகக் கொடுப்பதில்லை எனத் தெரிவித்துள்ளார்கள். மேலும் இளமின்பொறியாளர், நாகலூர் அவர்கள் ஆலத்தூர் பிரிவு அலுவலகத்தில் கூடுதல் பொறுப்பு வகிப்பதால், வாரத்தில் எல்லா நாட்களும் நாகலூரில் இருப்பது முடியாமல் போய்விடுகிறது. குறிப்பாகத் தகுந்த ஆதாரங்களுடன் லஞ்சம் வாங்கும் ஊழியர், அதிகாரிகள்பற்றிப் புகார் கொடுத்தால் அதன் மீது உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வி. சுந்தரம்,
மேற்பார்வைப் பொறியாளர்
விழுப்புரம் இராமசாமி படையாட்சியார்
மின்பகிர்மான வட்டம்
விழுப்புரம்

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

**தோல் தொழில்நுட்பவியல் பெருஞ்சான்றிதழ் :**

DIPLOMA IN LEATHER TECHNOLOGY:

சென்னையிலுள்ள *Institute of Leather Technology* இந்த பட்டயப் படிப்பினை மூன்று ஆண்டுகளில் பயிற்றுவிக்கிறது.

**அச்சுக்கலை தொழில்நுட்பவியல் பெருஞ்சான்றிதழ் :**

DIPLOMA IN PRINTING TECHNOLOGY:

சென்னையிலுள்ள *Institute of Printing Technology, Institute of Graphic Arts* இப் பட்டயப் படிப்பினை நடத்துகிறது.

**இரசாயனத் தொழில்நுட்பவியல் பெருஞ்சான்றிதழ் :**

DIPLOMA IN CHEMICAL TECHNOLOGY :

சென்னையிலுள்ள *Institute of Chemical Technology*, ஈரோட்டில் உள்ள *Institute of Chemical Technology* இப் பட்டயப் படிப்பினை 3 ஆண்டுகளில் பயிற்று விக்கிறது.

**பெட்ரோலிய இரசாயனவியல் பெருஞ்சான் றிதழ் :**

DIPLOMA IN PETROCHEMICAL:

ஈரோட்டில் உள்ள *Institute of Chemical Technology* 3 ஆண்டுகளில் பயிற்றுவிக் கின்றது.

**மீச்சேர்மம் தொழில்நுட்பவியல் பெருஞ்சான் றிதழ் :**

DIPLOMA IN POLYMER TECHNOLOGY:

சென்னையிலுள்ள *Institute of Chemical Technology* 3 ஆண்டுகளில் பயிற்றுவிக்கின்றது.

**கணிணி அறிவியல் மற்றும் பொறியியல் பெருஞ்சான் றிதழ் :**

DIPLOMA IN COMPUTER SCIENCE AND ENGINEERING:

தமிழகத்தில் உள்ள 30க்கு மேற்பட்ட பாலிடெக்னிக்குகள் இந்த பட்டயப் படிப்பினை 3 ஆண்டுகளில் நடத்துகின்றது.

**மின்னணுவியல் - தொலைத்தொடர்பு பொறியியல் பெருஞ்சான் றிதழ் :**

DIPLOMA IN ELECTRONICS AND TELECOMMUNICATION ENGINEERING :

காஞ்சிபுரத்தில் உள்ள பக்தவத்சலம் பாலிடெக்னிக் 3 ஆண்டுகளில் நடத்துகின்றது.

**குளிர்பதன சீர்வளி வசதி பெருஞ்சான்றிதழ் :**

DIPLOMA IN REFRIGERATION AND AIRCONDITIONING :



இப்பட்டயப் படிப்பினை இராஜ பாளையம், சென்னை பாலி டெக்னிக்குகள் நடத்துகின்றன.

**நெசவுத் தொழில்நுட்பவியல் பெருஞ்சான் றிதழ் :**

DIPLOMA IN TEXTILE TECHNOLOGY:

தமிழகத்தில் உள்ள 25க்கு மேற்பட்ட பாலிடெக்னிக்குகள் இப்பட்டயப் படிப்பினை 3 ஆண்டுகள் நடத்துகின்றன.

**துணி விற்பனை நிர்வாகப் பெருஞ்சான் றிதழ் :**

DIPLOMA IN TEXTILE MARKETING & MANAGEMENT

இப்பட்டய படிப்பினை *S. S. M. Institute of Textile Technology* குமாரபாளையத்தில் நடத்து கின்றது.

**இயந்திரக் கருவி பராமரிப்பு - பழுதுபார்ப்பு பெருஞ்சான்றிதழ் :**

DIPLOMA IN MACHINE TOOL MAINTENANCE AND REPAIR :

3 ஆண்டுகளுக்குரிய இப் பட்டயப் படிப்பினைக் கீழ்க்கண்ட நிறுவனங்கள் நடத்துகின்றன.

1. *C.M. Kothari Technological Institute, Sembarampakkam, Madras.*
2. *Govt. Technical Training Centre, Guindy, Madras.*

   *(Diploma in Tool Engg.)*
3. *Institute of Tool Engg., Dindigul.*

இவை தவிர - *Diploma in Fibre Technology, Diploma in Automobile, Diploma in Textile Manufacturing, Diploma in Automobiles, Diploma in Metallurgy, Diploma in Foundary Technology, Diploma in Pulp Paper Technology* போன்ற பட்டயப் படிப்புகளும் தமிழகத்தில் உள்ள தொழிற் கல்லூரிகளில் நடத்தப்படுகின்றன.

மேலும் தமிழகத்தில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் *ITI Carpenter, Moulder, Plumber, Painter, Diesel Mechanic, Motor Mechanic, Wireman, Turner, Mechanist, Fitter, Electrician, Draughtsman, Radio-TV Mechanic,* போன்ற பயிற்சிகள் ஓராண்டில் நடத்தப்படுகின்றன. *SSLC* வரை படித்திருந்தால் மாத்திரம் இப் பயிற்சிகளில் சேரத் தகுதியான தாகும். இந்திய அரசினால் இத்தேர்வுகளுக்குச் சான்றிதழ்கள் வழங்கப் படுகின்றன. குறிப்பாகக் கிராமப் புறங்களைச் சார்ந்த இளைஞர்கள் இப் பயிற்சிகளைப் பெற்று, சுயமாக தொழில்களைத் தொடங்கி உள்ளனர்.

**விவசாயத் துறையில்...**

(AGRICULTURE)

இந்திய நாட்டில் விவசாயத் துறைதான் சிறப்பிடம் பெறுகிறது. வேளாண்துறை சார்ந்த படிப்பும், வனத்துறை சார்ந்த படிப்பும், மீன் துறை சார்ந்த படிப்பும், வேளாண்

துறை சார்ந்த பொறியியல் படிப்பும் +2 படிப்பில் அறிவியல் பாடங்களை எடுத்தோர் தமிழக அரசின் நுழைவுத் தேர்வுக்குப் பின்னர் முறையாகத் தேர்ந் தெடுக்கப்படுகின்றனர். இப்படிப்பு களின் பயிற்சிக் காலம் நான்கு ஆண்டுகளாகும்.

## சட்டத்துறை...
(LAW)

+2 படித்து முடித்தவர்கள் ஐந்தாண்டு கால இளநிலை சட்டவியல் (B.L.) பயில தமிழக அரசு நேர்முகத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சென்னை, மதுரை, திருச்சி, கோவை ஆகிய நகரிலுள்ள அரசு சட்டக் கல்லூரியிலும், சேலத்திலுள்ள தனியார் சட்டக் கல்லூரியிலும் சட்டவியல் பயிற்றுவிக்கப்படுகிறது.

## ஆசிரியர் பயிற்சி...
(TEACHER EDUCATION)

+2 தேர்வில் அனைத்துப் பாடங் களிலும் 50 சதவீத மதிப்பெண்கள் பெற்றவர்கள் ஈராண்டு காலம் படித்துப் பட்டயம் (Diploma) பெற வாய்ப்புள்ளது. ஏறக்குறைய 30 ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி களும், அரசால் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும் பல தமிழகத்தில் உள்ளன. தெலுங்கு, மலையாளம், உருது போன்ற பல மொழிகளில் ஆசிரியர் பயிற்சி பெற சென்னை,தருமபுரி, கிருஷ்ணகிரி, விளவங்கோடு ஆகிய நகர்களில் அரசு ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் உள்ளன.

## இசைத் துறையில்...
(MUSIC AND FINE ARTS)

சென்னையிலுள்ள தமிழக அரசு இசைப்பயிற்சி மையம் ஏழு வகை பட்டயப்படிப்புகளைப் பயிற்று விக்கின்றன. 'இசைக்கலைமணி' என்ற பட்டயப் படிப்பு மூன்றாண்டு காலம் பயிற்றுவிக்கப் படுகிறது. எட்டாம் வகுப்புத் தேறியோர் - இசைத் துறையில் ஈடுபாடுடைய 13 முதல் 18 வரை வயதுள்ளோர் வயலின் வீணை பயிற்சி பெறலாம்.

இதே தகுதியும் வயது முடையோர் மூன்றாண்டு காலம் மிருதங்கம், நாதஸ்வரம், தவில், கடம், கஞ்சிரா, புல்லாங்குழல் ஆகிய துறைகளில் 'வாத்தியக் கலைமணி' பட்டயம் பெறலாம். கல்வியாண்டில் 10 மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம்



நிதியுதவி தரப்படுகிறது.

பரத நாட்டியத்தில் ஈடுபாடும் முன் பயிற்சியும் கொண்ட மகளிர் மேற்கூறிய கல்வி தகுதியும், வயது வரம்பும் பெற்றோர் மூன் றாண்டுகள் பயின்று 'ஆடல் கலைமணி' என்றபட்டயத்தினைப் பெறலாம்.

ஆடல் கலைமணி பட்டம் பெற்றவர்கள் மேலும் இரண் டாண்டுகள் பயின்று 'நட்டுவாங்க கலைமணி' பட்டயம் பெறலாம். இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் நிதியுதவி உண்டு.

எட்டாம் வகுப்புத் தேறியவர்கள் 15க்கும் 25 வயதுக்கும் இடைப் பட்டோர் ஈராண்டு காலம் வாய்ப் பாட்டில் பயிற்சி பெற்று 'இசைக் கலைமணி' என்றபட்டயத்தினைப் பெறலாம்.

பள்ளி இறுதி வகுப்பில் தேறி இசைக்கலைமணி பட்டத்தைப் பெற்றவர்கள் ஓராண்டு இசை பயிற்றுவித்தலில் பட்டயம் பெறலாம். இப்பட்டயப் படிப்பில் 16 வயது முதல் 25 வயதுக்குட் பட்டோர் சேரலாம். எட்டாம் வகுப்பு தேறி 13 முதல் 18 வயதுக் குட்பட்டோர் மூன்றாண்டுகள் பயிற்சி பெற்று 'கிராமிய கலைமணி' என்ற பட்டயத்தைப் பெறலாம்.

பத்தாம் வகுப்புவரை படித்த வர்கள் 16 வயதினை எட்டியவர்கள் இந்த இசைப் பயிற்சி மையத்தில் மாலை நேரங்களில் நடத்தப்படும் வயலின், வீணை, மிருதங்கம், பரதநாட்டியம் மற்றும் வாய்ப் பாட்டுத் துறைகளில் ஈராண் டுகள் பயின்று பட்டயம் பெற வாய்ப்புண்டு.

மதுரை மாநகரிலுள்ள அரசு இசைப்பயிற்சி மையத்திலும் இதுபோன்ற படிப்புகள் நடத்தப் படுகின்றன.

திருவையாற்றில் ராஜா இசைக் கல்லூரியிலும் பட்டய வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

சென்னையிலுள்ள கலாச் சேத்திரா நுண்கலைக் கல்லூரியில் பத்தாம் வகுப்பு தேறியோர் 15 முதல் 20 வயதுடையோர் பரத நாட்டியம், கர்நாடக இசை, வண்ணம் பூசுதல் போன்ற துறைகளில் பயிற்சி பெற்று பட்டயங்கள் பெறலாம்.

திருச்சியிலுள்ள 'கலைக் காவேரி நாட்டியப் பள்ளியில்' பரத நாட்டியத்தின் பட்டய வகுப்பு நடத்தப்படுகிறது.

குடந்தையிலுள்ள கலை, கைவினைப் பொருட்கள் அரசு கல்லூரியில் ஐந்தாண்டு காலம் பயின்று இளநிலை பட்டம் பெற (B.F.A.) வாய்ப்புகள் உள்ளன.

சென்னையிலுள்ள "தமிழக அரசு நுண்கலை கைவினைப்

பொருட்கள் கல்லூரியில்" பத்தாம் வகுப்புத் தேறியவர்கள் ஐந்தாண்டுகள் பயின்று வண்ணம் பூசுதல் மற்றும் சிற்பத் துறையில் இளநிலைப் பட்டங்கள் (B.F.A.) பெறலாம். இக்கல்லூரியில்பத்தாம் வகுப்பில் தேறியவர்கள் ஐந்தாண்டுகள் பயின்று B.Sc., *Degree in Visual Communication Design* என்ற பட்டத்தினைப் பெற வாய்ப்புள்ளது.

மாமல்லபுரத்திலுள்ள கட்டிடக் கலை மற்றும் சிற்பக் கலை அரசுக் கல்லூரியில் எட்டாம் வகுப்புத் தேறியவர்கள் 13 முதல் 16 வயதுடையோர் இரண்டாண்டு காலம் பயின்று *Pre. Diploma Course in Temple Architecture and Sculpture* பெற வாய்ப்புள்ளது.

இசைக் கலை நாட்டியம் போன்ற நுண்கலைகளில் தேர்ச்சி பெற்றோருக்கு அனைத்திந்திய வானொலி. தொலைக்காட்சி, சங்கீத சபைகள் இசை அரங்குகளில் அபரிதமான வாய்ப்புகள் அண்மைக் காலங்களில் தோன்றி யுள்ளன. திரைப்படத் துறையிலும் இத்தகைய கலைகளில் தேர்ச்சி பெற்றோருக்கு வாய்ப்புகள் பெருகி வருகின்றன என்று குறிப்பிடத்தக்கது. நுண் கலைகளில் ஈடுபாடு கொண்டு படிக்க நாட்டமுடையவர்கள் கிராமங்களில் இது குறித்த தகவல்களை இன்னும் பலர் அறியா திருக்கின்றனர். மாவட்டங்கள் தோறும் இசைப் பள்ளிகள் தோற்றுவிக்கப் போவதாக தமிழக அரசு அண்மையில் அறிவித்துள்ளது வரவேற்கத் தக்கது. இத்துறையில் மகளிர் சேர்ந்து படித்து வருமானம் ஈட்டிக்கொள்ள வாய்ப்புகள் உள்ளன.

**திரைப்படத்துறை**

+2தேறியவர்கள் தமிழக அரசின் *Film & Television Institute of Tamil Nadu* சேர்ந்து பட்டயங்கள் பெற வாய்ப்புக்கள் உள்ளன. விரைவாக வளர்ந்து வரும் திரைப்படத் துறையில் தொழில் நுட்பங்கள், அண்மைக் காலங்களில் மிகுதியாகப் புகுத்தப்பட்டு வருகின்றன. இந்த நிறுவனத்தில் +2 படித்தவர்கள் மூன்றாண்டுகள் பயின்று *Diploma Cinematography* பெறலாம். இதேபோல மூன்றாண்டுகள் பயின்று *Diploma in Sound Recording & Sound Engg., Diploma in Film Processing* போன்ற பட்டயங்களைப் பெறலாம். இரண்டாண்டுகள் பயின்று *Diploma in Film Editing* என்ற பட்டயத்தினையும், மூன்றாண்டு பயின்று *Direction and Screen Play Writing* என்ற பட்டயத்தினையும் பெறலாம். இதே நிறுவனத்தின் பத்தாம் வகுப்பு படித்தோர் ஓராண்டு பயின்று *Diploma in Film Acting* பெறலாம். தாம்பரத்திலுள்ள சென்னை கிறித்தவக் கல்லூரியிலும் சென்னை ஈஞ்சம் பாக்கத்திலுள்ள *V.G.P.Film and Video Institute* இதே பட்டயப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஈஞ்சம் பாக்கத்திலுள்ள *V.G.P.Film and Video Institute* பத்தாம் வகுப்புப் படித்தவர்கள் நான்கு மாதங்களில் *Certificate Course in Still Photography, Certificate Course in Video Cameraman* பயிற்சியினை அளிக்கிறது.



**நாடகக்கலை பெருஞ்சான்றிதழ் :**

**DIPLOMA IN DRAMATIC ARTS:**

இந்த மூன்றாண்டு படிப்பினை டெல்லியிலுள்ள *National School of Drama* நடத்துகிறது. +2 படித்தவர்கள் நுழைவுத் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். மராட்டிய மாநிலம் ஔரங்காபாத்தில் மராத்வாடா பல்கலைக் கழகம் மூன்றாண்டு பட்டப் படிப்பினையும், ஓராண்டு பட்டயப் படிப்பினையும், ஓராண்டு சான்றிதழ் படிப்பினையும் நாடகக் கலையில் பயிற்றுவிக்கிறது. பள்ளி இறுதி வகுப்பு படித்தவர்கள் மைசூரிலுள்ள பல்கலைக்கழகத்தில் ஈராண்டு பட்டயப் படிப்பினை இத்துறையில் பெறலாம். +2 படித்தோர் கல்கத்தாவிலுள்ள இரவீந்திர பாரதி பல்கலைக் கழகத்தில் மூன்றாண்டு பட்டப் படிப்பினையும், மூன்றாண்டு பட்டயப்படிப்பினையும் நாடகக் கலையில் பெறலாம்.

குஜராத்தில் உள்ள *MS University of Baroda* வில் இணைந்துள்ள *College of Indian Music, Dance and Dramatics* இரண்டு ஆண்டு பட்டயப் படிப்பினை 10-ஆம் வகுப்பு படித்தோருக்குப் பயிற்றுவிக்கிறது. ஆந்திர மாநிலம் வால்டேர் நகரில் உள்ள ஆந்திர பல்கலைக்கழகம் +2 தேறியவர்களுக்கு *Diploma in Acting* என்ற படிப்பினை இரண்டு ஆண்டில் பயிற்றுவிக்கிறது.

திரைப்படத்துறை, நாடகத்துறை, நடிப்புத்துறை ஆகிய துறைகளில் ஆழ்ந்த ஈடுபாடு உடையவர்கள் இத்தகைய செய்திகளை அறிந்து மேற்படிப்பினை மேற்கொண்டால் அவர்தம் வாழ்க்கை வளம் பெறும்.

**உணவகங்கள், விடுதிகள், நிர்வாகத் துறையில்...**

*(HOTEL, HOSTEL MANAGEMENT)*

அண்மைக் காலங்களில் இத் துறையில் ஏற்பட்டுள்ள விரிவாக்கங்கள், நிர்வாகம் போன்றன இத்துறைப் படிப்புக்களில் பெரிய தொரு எழுச்சியினை ஏற்படுத்தி

வருகிறது. +2 தேறியவர்கள் சென்னை நகர் தரமணியில் உள்ள Institute of Hotel Management Catering Technology and Applied Nutrition, Taramani.

Asan Memorial Institute of Hotel Management and Catering Technology, Jaladampet, Chennai-601 302.

- போன்ற நிறுவனங்களில் Diploma in Hotel Management and Catering Technology என்ற படிப்பினை 3 ஆண்டுகளில் போதிக்கிறது.

கொடைக்கானலில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்று ஈராண்டு Diploma in Hotel Operational Management என்ற துறையினைப்பயிற்றுவிக்கிறது.

தரமணியிலுள்ள நிறுவன மொன்று Certificate Course in Hotel Reception & Book Keeping என்ற படிப்பினை +2 மாணவர்களுக்கு ஓராண்டு போதிக்கிறது. இதே நிறுவனம் Certificate Course in Restaurant & Counter Service என்ற படிப்பினை ஓராண்டு நடத்துகிறது. சென்னை தர மணியிலுள்ள அரசு நிறுவன மொன்று +2 மாணவர்களுக்கு ஓராண்டு பயிற்சியாக Certificate Course in Canning என்ற படிப்பினையும் Certificate Course in Bakery என்ற படிப்பினையும், Certificate Course in Cookery என்ற படிப்பினையும் Certificate Course in House Keeping என்ற படிப் பினையும் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. 10ஆம் வகுப்பு படித்தவர்களுக்கு திருச்சி துவாக், குடியில் உள்ள Food Craft Institute, Certificate course in House Keeping என்ற படிப்பினையும், கொடைக் கானலில் உள்ள நிறுவனம், Certificate in Front-Office Management - யும் நடத்திவருவது குறிப்பிடத்தக்கது.

இத்துறையில் தேர்ச்சி பெற்ற வர்கள் மேற்காசியா, ஆப்பிரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினைப் பெறுகின்றனர். நகரங்களில் வளர்ந்துவரும் விடுதிகள், உணவகங்கள், தொழிற்சாலை உணவகங்கள், கல்வி நிறுவன விடுதிகளில் இத்தகையோருக்கு நல்ல வேலை வாய்ப்புகள் பெருகி வருகின்றன.

**கலை, கைவினை ஆசிரியர்கள் பயிற்சி...**

(ART AND CRAFTS TEACHERS)



அண்மைக் கால பாடத் திட்டங்களில் கலை, கைவினைஞர் ஆசிரியர்கள் பணி சிறப்பிடம் பெற்று வருகிறது. +2 தேறியவர்கள் இத்துறைகளில் இளநிலைப் பட்டங்களைப் பெறுதற்குரிய வாய்ப்புகள் இந்தியப் பல்கலைக் கழகங்களில் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக சென்னையிலுள்ள Govt.College of Arts and Crafts இப்படிப்பினை வழங்கிவருகிறது. டெல்லி, பம்பாய், கல்கத்தா, சண்டிகார், பெங்களூர், கோவா ஆகிய நகர்களிலுள்ள அரசுக் கல்லூரிகள் இப்படிப்பினை வழங்கி வருகின்றது. ஜாமியா மில்லியா இஸ்லாமியா பல்கலைக் கழகம், MS University of Baroda, Banaras Hindu University, பஞ்சாப் பல்கலைக்கழகம், மைசூர் பல்கலைக்கழகம், ஆக்ரா, அஜ்மீர் பல்கலைக்கழகங்கள், சிவாஜி பல்கலைக்கழகம், மீரட், ராஜஸ் தான், ரோகில்கண்ட், ஸ்ரீவெங்க டேஸ்வரா, உட்கல் போன்ற பல்கலைகழங்கள் இப்படிப்பினை வழங்கி வருகின்றன. சென்னைப் பல்கலைக்கழகம் ஓவியத்திலும், வண்ணம் பூசுதலிலும் இளநிலைப் பட்டப்படிப்பினை பயிற்று விக்கிறது. குறிப்பாகத் தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் இந்தத்துறை படிப்புகளில் இன்னும் சிறப்பாகக் கவனம் செலுத்த வேண்டும்.

Baroda வில் உள்ள MS பல்கலை கழகங்களில் நுண் கலைத்துறையில் நான்காண்டு BFA படிப்பு, Painting, Sculpture, Applied Arts, Art History என்ற துறைகளில் வழங்கப் படுவ தோடு, இதே துறையில் பட்டயப் படிப்புகளும் வழங்கப் படுகின்றன. விஸ்வ பாரதி பல்கலைக்கழகத்தில் இதே துறைகளோடு Graphic Art Design என்ற துறையிலும் பட்டப் படிப்பும் பட்டயப்படிப்பும் 5 ஆண்டுகளில் போதிக்கப் படுகின்றன.

இந்தச் செய்திகள் தமிழக மாணவர்கள் பலரும் அறிந்து செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு தரப்படுகின்றன. ஒவ்வொரு கல்லூரியும் கூட நுண்கலை மன்றங்கள் நிறுவி மாணவர்கள் நுண்கலையாற்றலை வளர்க்கத் திட்டமிடல் வேண்டும்.

**ஆடைகள் வடிவமைப்பு:**

FASHION DESIGN...

அண்மைக் காலங்களில் ஜவுளி உற்பத்தியாளர்கள், ஆயத்த ஆடை ஏற்றுமதியகங்கள், ஆயத்த ஆடை உற்பத்தியாளர்கள், கவர்ச்சிக் காட்சி அமைப்பாளர்கள், பொருட்காட்சி அமைப்பாளர்கள், வடிவமைப்போருக்குப் பெரிய தொரு வாய்ப்பினை நல்கி வருகின்றார்கள். இத்துறை சார்ந்த படிப்பு Fashion Technology என வழங்கப்படுகிறது. இத்துறையின் முன்னோடி நிறுவனங்கள் பல்வேறு படிப்பினை குறிப்பாக

+2 மாணவர்களுக்கு வழங்கி வருகின்றனர். பெருநகர் களிலும் இவர்களுக்கு வேலை வாய்ப்புகள் பெருகி வருகின்றன. முன்னோடி நிறுவனங்களுள் சில பின்வருமாறு:

**ஆடை வடிவமைப்பு தொழில்நுட்ப தேசிய நிறுவனம் :**

**NATIONAL INSTITUTE OF FASHION TECHNOLOGY (NIFT)**

*East Plaza, I-Gate, Indira Gandhi Indoor Stadium, New Delhi-110 002.*

சோஃபியா பல்திற தொழிற்பயிற்சிப் பள்ளி

**SOPHIA POLYTECHNIC,**

*Bhulabhai Desai Road, Mumbai - 400 026.*

**வடிவமைப்பு தேசிய நிறுவனம் :**

**NATIONAL INSTITUTE OF DESIGN,**

*Paldi,*
*Ahmedabad - 380 007.*

கலைப்பயிற்சிப் பள்ளி :

**SCHOOL OF ARTS,**

*Mumbai.*

சென்னை, பெங்களூர் நகரில் உள்ள சில பாலிடெக்னிக்குகளில் இத்தகைய படிப்புக்கள் நடத்தப் படுகின்றன. குறிப்பாக NIFT என்ற நிறுவனம் ஆண்டுதோறும் நவம்பர் மாதத்தில் மாணவர் சேர்க்கைக்கு விளம்பரப்படுத்துகின்றது, ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் நுழைவுத் தேர்வு நடைபெறுகிறது. +2 தேர்வில் 50 விழுக்காடு மதிப்பெண் பெற்றவர்கள் இந்நிறுவனத்தில் சேர்ந்து பயிற்சி பெறலாம். +2 மாணவர்களுக்கு இந்த நிறுவனம் *Apparel Marketing and Merchandizing (AMM)* என்ற படிப்பினை நடத்துகின்றது. அண்மைக் காலங் களில் இத்துறை விரைந்து வளர்ந்து வருவதால் இத்துறையில் கீழ்க்கண்ட வகையில் மாணவர்கள் பயிற்சி பெறலாம்.

*Designer*

*Assistant Designer*

*Cutting Assistant*

*Sktetcher*

*Stylist*

*Junior Designer*

இத்துறையின் வளர்ச்சி அண்மைக் காலங்களில் பிரமிக் கத்தக்க அளவில் இருக்கப் போவதால் அமெரிக்கா, இங் கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான் போன்ற நாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்களுக்குச் சென்று படிப்பவர்



களுக்கு ஒளிமிக்க எதிர்காலம் உண்டு. அமெரிக்காவிலுள்ள *Fashion Institute of Technology, 227, West, 27th Street, Newyork, Ny-10001.* இங்கிலாந்தில் உள்ள பிரபல நிறுவனத்தின் முகவரி *London College of Fashion and Clothing Technology, London.*

பிரான்ஸிலுள்ள நிறுவனத்தின் முகவரி :

*Esmodi, 16, Boulevard Mont Marte, 75009, Paris.*

அண்மைக்காலங்களில் நகைகளை வடிவமைப்பதில் +2 முடித்தவர்களுக்குக் கீழ்க்கண்ட நிறுவனம் நுழைவுத் தேர்வின் மூலம் பயிற்சி அளிக்கிறது. அது *National Institute of Fashion Technology* ஆகும்.

முத்துக்களைப் பட்டை தீட்டும் பயிற்சிக்கான அறிவிப்பினை இந் நிறுவனம் ஒவ்வொரு ஆண்டு டிசம்பர் மாதமும் வெளியிடுகிறது.

**அகமனை வடிவமைப்பு :**

INTERIOR DESIGN...

அண்மைக் காலங்களில் மாநகர் களிலும் நகர்களிலும் கட்டப் படுகின்ற வளமனைகளில் உட்புற வடிவமைப்பு சிறப்பிடம் பெறு கின்றன. உட்புற வடிவமைப்புக் கலை சிறப்படைந்து வருகின்றது. +2 தேர்வில் அறிவியல் பகுதியோடு (60%) ஆங்கிலமும் தெரிந்தவர் களுக்கு ஐந்தாண்டு கால முழு நேரப் பட்டயப் படிப்பினை

**அகமனை வடிமைப்புப் பயிற்சிப் பள்ளி :**

**(SCHOOL OF INTERIOR DESIGN,)**

*Centre of Environmental Planning & Technology,*

*University Road,*
*Navrang Pura,*
*Ahmedabad-380009.*

என்ற அமைப்பு வழங்குகிறது.

தமிழகத்தில், திருச்சியிலுள்ள மண்டலப் பொறியியல் கல்லூரி இந்தப்படிப்பினை வழங்குவது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் உள்ள பாலிடெக்னிக்குகளும் இத்துறையில் பட்டயப் படிப்பினை வழங்கிட முயல வேண்டும். இத்தகைய கல்வித் தகுதியைப் பெற்றவர்களுக்கு உள்நாட்டில் மாத்திரமல்ல; அரபு நாடுகளிலும், ஆப்பிரிக்க நாடு களிலும் வேலை வாய்ப்புக்கள் மிகுதியும் உண்டு.

## இதழியல் துறையில்...

(JOURNALISM)

மக்கள் தொடர்புச் சாதனங்கள் பிரளயமென வளர்ந்துவருகிறது. நாளேடுகள், காலமுறை இதழ்கள், அரசுத்துறை இதழ்கள், தனியார் துறை வெளியீடுகள், மனை இதழ்கள்-இப்படிப் பலப்பல வளர்ச்சிகள். நூற்றுக்கு மேற்பட்ட அனைத்திந்திய வானொலி நிலை

யங்கள், அரசு தொலைக் காட்சிகள், நூற்றுக்கணக்கான செயற்கைக் கோள் தனியார் தொலைக் காட்சிகள் வளர்ந்த வண்ணம் இருக்கின்றன. 'செய்திப் பிரளயம்' தொடர்ந்து நிகழ்ந்த வண்ணம் இருக்கிறது. இத்துறையிலே, குறிப்பாக இதழியல் துறையில் படைப்பாற்றல், மிக்கவர்கள் முறையான பயிற்சியைப் பெற்று உயரிய வளர்ச்சியை அடைய முடியும். அண்மைக் காலங்களில் Magazine Journalism விரைந்து வளர்ந்து வருகின்றது. நிழற்பட பத்திரிக்கையாளர்கள் வளர்ந்து வருகின்றனர். கேலிச் சித்திர வரைபவர்கள் (Cartoonist) எண்ணிக்கையும் பெருகி வருகின்றது. அரசியல், பொருளாதார, சமூகவியல், பண்பாட்டுவியல் என்று பத்திரிகையாளர்கள் பல்வேறு துறைகளிலும் பண்பட்ட வளர்ச்சியினைப்பெற்று வருகின்னர்.

இயற்கையாகவே எழுத்தாற்றல் மிக்கவர்கள் படைப்புத் திறன் பெற்றவர்கள் பலர் சுதந்திர எழுத்தாளர்களாக (Freelancers) இருக்கின்றனர். இந்திய மொழிப் பத்திரிக்கைகள் பன்முகப் படுத்தப் பட்டு வளர்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில் இளைஞர்கள், குறிப்பாக +2 முடித்தவர்கள் இத்துறையில் இளநிலைப் பட்டங்களையும், பட்டயங் களையும், சான்றிதழ்களையும் பெறுவதற்கான வாய்ப்புக்களை மதுரை காமராஜ், அண்ணா மலை, பூனா, டெல்லி, கல்கத்தா, நாக்பூர், பஞ்சாப், மராத்வாடா, உஸ்மானியா, கேரளா, கோழிக்கோடு முதலிய பல்கலைக் கழகங்கள் வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது. Indian Institute of Mass Communication (Delhi), YMCA Institute of Mass Media Studies, Xavier Institute of Communication (Bombay), Symbosis Institute of Journalism of Communication (பூனே), Centre for Media Studies (New Delhi), போன்ற நிறுவனங்களும், இந்தியாவில் உள்ள முக்கிய நகரங்களிலுள்ள Bharathiyar Vidya Bhavan College of Communication இத் துறையில் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றன.

+2 படித்தவர்கள் மூன்றாண்டு பட்டப் படிப்பினை படிப்பதோடு தனிப்பட்ட முறையில் பத்திரிக்கைகளில் பயிற்சி பெற்றால் சிறப்பான வளர்ச்சியை அடையலாம்.

*Centre for Media Studies (Delhi)*



இதழியல் துறையில் ஒன்பது மாத காலப் பயிற்சியினை அளிக்கிறது. மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தின் தொலைக் கல்வித்துறை தமிழ், ஆங்கிலப் பயிற்றுமொழி வழியாக M.A. வகுப்பினை இத் துறையில் நடத்துவது குறிப்பிடத்தக்கது. 'அறிவியல் துறையில் தகவல்' என்ற இளநிலை பட்டப்படிப்பினையும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் நடத்துவது குறிப்பிடத்தக்கது. வளர்ந்து வரும் இதழியல் துறையில் மேற்படிப்பு மேற்கொண்டால் வேலை வாய்ப்புகள் உறுதியாக உண்டு.

## தொலைக் கல்வித்துறை

+2 தேறியவர்கள் இணைப்புக் கல்லூரிகளில் தங்களின் தகுதிக் கேற்ப இளநிலை பட்ட வகுப்புகளில் சேர்கின்றனர். மாலை நேரக் கல்விகளில் சேர்ந்து படிக்கின்றனர். இத்தகைய வாய்ப்புகள் பெறாதவர்கள் தொலைக்கல்வி துறைகளில் சேர்ந்து படிக்கின்றனர். தமிழகத்தில் சென்னை, அண்ணா மலை, மதுரை காமராஜ் பல்கலைக் கழகங்களில் திறந்த நிலை பல்கலைக்கழகப் பகுதியில் நடத்தப்படுகின்ற இளநிலைப் பட்டத் துறைகளில் சேர்ந்து படிக்கலாம். 20-வயது நிரம்பியவர்கள் இந்தப் பிரிவில் சேரலாம். இவர்களுக்கு எந்தக் கல்வித் தகுதியும் தேவை யில்லை. இந்திராகாந்தி தேசிய திறந்த நிலைப்பல்கலைக்கழகமும் இத்தகைய வாய்ப்பினை நாடு தழுவிய அளவில் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. சென்னை, அண்ணாமலை, மதுரை காமராஜ், அழகப்பா, மனோன்மணியம் சுந்தரனார், பாரதியார், பாரதிதாசன், புதுவை, இந்திராகாந்தி தேசிய திறந்த நிலை பல்கலைக்கழகங்கள் தொலைக்கல்வி இயக்கங்கள் மூலமாக வேலைவாய்ப்புத் திறனை வளர்க்கின்ற பட்டய, சான்றிதழ் படிப்புக்களை வழங்கி வருகின்றது. அவ்வப்போது பல்கலைக்கழகங்கள் வெளியிடுகின்ற அறிக்கைகளை செய்தித்தாள்களைப் பார்த்து பத்தாம் வகுப்பு படித்தவர்களும், +2 படித்தவர்களும் பயனடையலாம். தொலை தூரத்திலுள்ளவரும், மகளிர், கல்வியைத் தொடர முடியாமல் இடையில் நின்றவரும், வேலை பார்ப்பவர்களும் இந்த அரிய வாய்ப்பினைப் பயன் படுத்திக் கொள்ளலாம்.

## ஆயுள் காப்பீடு

**(INSURANCE / ACTORIAL SCIENCE)**

ஆயுள் காப்பீட்டுத் திட்டங்கள் நாடு தழுவிய அளவில் படர்ந்து வருகின்றன. +2 அளவில் ஆயுள் காப்பீடு பாடத்திட்டம் தொழிற் பிரிவில் இணைக்கப்பட்டுள்ளது. மேற்கு வங்கத்தில் கல்யாணி

பல்கலைக்கழகத்தில் முதுநிலைப் பட்டபடிப்பில் ஆயுள்காப்பீடு போதிக்கப்படுகிறது. கீழ்க்கண்ட பல்கலைக் கழகங்களில் +2 தேர்வில் வெற்றி பெற்றோர் இளநிலைபட்டப்படிப்பில் ஆயுள் காப்பீட்டினைப் படிக்கின்றனர். மராட்டியத்திலுள்ள மும்பை பல்கலைக்கழகம் பஞ்சாபிலுள்ள குருநானக் பல்கலைக்கழகம் உ.பி.யிலுள்ள அவாத் (AVADH) பல்கலைக்கழகம் ஒரிசாவிலுள்ள பர்காம்பூர் பல்கலைக்கழகம், மணிப்பூர் பல்கலைக்கழகம், கோவா பல்கலைக்கழகம், மராத்துவாஜ் பல்கலைக்கழகம் போன்ற இத்துறையில் சிறப்பாகப் பணியாற்றும் பல் கலைக்கழகங்கள். சென்னை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இத் துறையில் பட்டயப்படிப்புகளை நடத்துகின்றன. தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் குறிப்பாக கணிதவியலில் வல்லமை பெற்றவர்கள் இப்பாடத்தில் சிறப்பாகத் தேர்ச்சியினைப் பெறமுடியும். மேலும் பொதுத்துறையிலுள்ள *L.I.C. General Insurance Corporation* விரைந்து வளர்ந்து வருகின்றன. *Assistance Development Officer, Assistant Administrative Officers* போட்டித் தேர்வின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். *The Institute of Insurance Surveyors and Adjusters, (232, Dr.D.N.Road, Mumbai - 400 001)* +2 தேறியவர்களுக்கு மும்பை சென்னை, கல்கத்தா போன்ற நகரங்களில் *Licentiate Examination for Insurance Surveyors and Adjusters* நடத்துகிறது. இத்தேர்வில் வெற்றி பெற்றவர்கள் இந்நிறுவனம் அளிக்கும் பயிற்சி பெற்ற பின்னர் வேலை வாய்ப்பினைப் பெறுவர்.

நிதி நிறுவனங்கள் பெரிய கம்பெனிகள் தொழில் அதிபர்கள் இத்தகையோர்கள் இவர்களைப் பணியில் அமர்த்துவார்கள். தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் இன்றும் இத்துறையில் போதிய கவனம் செலுத்தவில்லையென்றே தோன்றுகிறது. இது குறித்து சிந்தித்து +2 மாணவர்களை இத்துறையில் ஈடுபடுத்த தீவிர முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

## வேண்டுகோள்



இடைநிலைப் பள்ளி நிலையிலேயே மாணவர்களிடம் புதைந்திருக்கும் ஆற்றலை முறையாக இனங்காணும் பயிற்சியினை இப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அளிக்க வேண்டும். இனங்கண்ட பின்னர் அவர்களது ஆற்றல்களை மேம்படுத்தத் தக்க வகையில் திட்டங்கள் தீட்டி மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும். வெறும் பாடச்சுமையால் அவதியுறும் மாணவ ஆசிரிய சமுதாயம் இந்தப்பணியில் ஈடுபட அந்தந்தப் பகுதியில் உள்ள தன்னார்வ அமைப்புக்கள், நிதியும் ஆலோசனையும் வழங்கத்தக்க வகையில் அரசும் செயல்பட வேண்டும். உயர் நிலைப்பள்ளி, மேநிலைப் பள்ளிகளில் இத்தகைய சூழ் நிலைகளை உருவாக்குவதோடு மாணவர்தம் ஆற்றலுக்கு ஏற்ப மேற்படிப்பினைக் குறித்த முழு விவரங்களையும் அவ்வப்போது பள்ளிகளில் அறிவிப்பதோடு பெற்றோர்களுக்கும் தகவல் தெரிவிக்கும் முறையை ஆசிரியர்கள் மூலம் செய்ய வேண்டும். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மேற்படிப்பு பற்றிய கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு அத்துறை சார்ந்த வல்லுநர்களையும் வரவழைத்து, பெற்றோர்களோடும் கருத்துப் பரிமாற்றம் செய்யத்தக்க வகையில் ஏற்பாடுகள் செய்யலாம். *Career Fairs, Career Exhibition* இவை களையும் நடத்தலாம். தொலைக் காட்சியினர், காண்போம் கற்போம் நிகழ்ச்சியில் இதற்கெனத் தொடர்ந்து நிகழ்ச்சிகளை ஒளிபரப்பலாம். நாளேடுகளும், காலமுறை இதழ்களும் கல்வி மலரில் இத்தகையச் செய்திகளைத் தொடர்ந்து வெளியிடலாம். உயர்நிலைப்பள்ளி மாவட்டக் கல்வி அலுவலகத்தில் இதற்கென ஒரு தனிப் பிரிவினைத் தொடங்கலாம். 10ஆம் வகுப்பு, +2 வகுப்பு மாணவர்களுக்குக் கோடை விடுமுறையில் மேற்படிப்பு குறித்த முகாம்களைத் தன்னார்வ அமைப்புகள் ஊர் தோறும் நடத்தலாம். நெறிப்படுத்தினால் வளம்பெறும், மாணவச் சமுதாயம். ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : வெ. இறையன்பு, இ.ஆ.ப. இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002, தொலைபேசி : 568926, 568927





**ஆசிரியர் மடல்:**

# வீடுகளை இல்லங்களாக்குவோம்!



குறைந்த மதிப்பீட்டில் கட்டடங்களை
நிர்மாணிப்பது நாட்டு நலன் குறித்தும், சுற்றுச்சூழல்
குறித்தும் முக்கியமானதாகக் கருதப்படவேண்டும்.
குறைந்த மதிப்பீடு என்பது
கட்டடத்தின் தரத்திற்கும், வலுவிற்கும்
எந்த வகையிலும் ஊறு செய்யாது என்பதைப்
புரிந்துகொள்ள வேண்டும்.
கட்டுகிற தன்மையில் சில மாற்றங்களைச் செய்து
செலவைக் குறைப்பது -
விஞ்ஞான ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பம்!
வழக்கமாய் நாம் கட்டித்தருகிற
தொகுப்பு வீடுகளைக் காட்டிலும்
பெரியதாய்க் கட்டித்தர முடியும்.
பள்ளிக்கூடமென்றால் - அதே செலவில்
இன்னொரு வகுப்பறையை இணைத்துக்கொள்ள முடியும்.
நாம் தொகுப்பு வீடுகளைக் கட்டும்போது
அதில் உரிமையாளருக்கும் உரிய பங்கு இருக்கிறது
என்பதை உறுதி செய்யவேண்டும்.
வீட்டு உரிமையாளரே கட்டிக்கொள்ளும்போது
அவை இன்னும் அழகாக உருவெடுக்கின்றன.
பள்ளிக் கட்டடங்களைப் பெற்றோர் ஆசிரியர் கழகமே
கட்டிக்கொள்ளுகிறபோது
அவை அக்கரையோடு பராமரிக்கப்படுகின்றன.
குறைந்த முதலீட்டில் இவற்றையெல்லாம்
உருவாக்கக் கள அலுவலர்கள் முன்வர வேண்டும்.
வகுப்பறை என்பது மாணவர்கள் அமரும் இடம் மட்டுமல்ல;
வீடு என்பது வெறும் வசிக்கும் இடம் மட்டுமல்ல;
அவை - அதற்கும் மேலே!
வீடு எப்போதும் செங்கற்கள் சேர உண்டாகிறது;
இல்லம் என்பது
அவற்றோடு இதயமும் ஒருங்கிணைய உருவாகிறது!









தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

HTA.755

பதிவு எண். M. 8676
Licence No.TN/MSIC/PP-23

